257

ஸ்வபாநு ஹூ
புரட்டாசி - ஐப்பசி மீ

ஸம்புடம் - 2
ஸஞ்சிகை - 10

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: பிரசுரிக்குமிடம் :

ஸ்வாமி தெரு, தியாகராயநகர்,

சென்னை

வர்ஷ
ரூபா 3—0—

October, 1943
Vol. 2, No. 10

JL
Q22ண211,M41
M.43·2·10·
310118

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

பக்கம்

1.	ஸ்ரீ பிள்ளைபாக்கம் அழகியசிங்கர் வைபவச் சுருக்கம்	344
2.	ஸ்ரீ அழகியசிங்கர் துதி	347
3.	ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அடைக்கலப்பத்து	348
4.	ஒரு பெரும்புயல்	351
5.	ஸ்ரீ வைஷ்ணவத் திருநாமங்கள்	355
6.	திவ்ய ப்ரபந்தத்தில் திருமடல்	359
7.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	363
8.	வேதாந்த தேசிகன் உவமை	368
9.	செய்திகள்	373
10.	மதிப்புரை	375
11.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	376
12.	கடோபநிஷத்	105

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள்—மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும். காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதி யனுப்புதல் நலமாகும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாசம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 2	ஸ்வபாநு ஹூ புரட்டாசி - ஐப்பசி மீ	ஸஞ்சிகை 10

" ஸ்வேதாத்ரௌ ஸாரஸிம்ஹாஸநே
ஸுரவரஸம்ஸேவிதபதபங்கஜம் ।
லக்ஷ்ம்யா ஸமாஸ்லிஷ்டவாமோரஸம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஸரணம் ப்ரபத்யே ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகாருண்யோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்க ளுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பிள்ளைபாக்கம் அழகியசிங்கர் வைபவச் சுருக்கம்

[ஸம்புடம் 2 : ஸஞ்சிகை 9 : பக்கம் 333-ன் தொடர்ச்சி]

சாதுர்மாஸ்ய ஸங்கல்பமும் ஸ்ரீ அழகிய சிங்கரின் அநுஷ்டாந க்ரமமும்

அவ்விடத்தில் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் உபக்ரமித்து நடக்கையில், ப்ரதிதிநமும் கருடநதியில் ஆஶ்ரமத் துறையில் காலையில் நீராட்டம் செய்து அநுஷ்டாநங்களை முடித்துக்கொண்டு, திருச்சின்னம் பரிமாற மடத்துக் கெழுந்தருளி, அபிகமநாராதந காலத்தில் மாத்ராதாநம் செய்யும்போது வழக்கம்போல் விசேஷமாக த்ரவ்யத்தை ஸமர்ப்பணம் செய்து, வருகிற வித்வான்களுக்கு அதைக்கொண்டு ஸம்பாவனை செய்தும், பின் அபிகமநம் முடிந்ததும் உபாதாந காலத்தில் தம் ஆஶ்ரிதர்களுக்கு ஸ்ரீ பாஷ்ய க்ரந்தம் ப்ரவசநம் செய்துகொண்டும் எழுந்தருளி யிருப்பதுண்டு. பல திநங்களில், அவ்வூரில் வித்வான்களாக அக்காலத்தில் எழுந்தருளியிருந்த தர்மபுரி சடகோபாசார்ய ஸ்வாமி, ஶதாவதாநம் அநந்தாசார்ய ஸ்வாமி, தேவநாதாசார்ய ஸ்வாமி, சேட்டலூர் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி முதலானவர்களும் கூட கோஷ்டியிலிருந்து விஷய விசாரங்கள் செய்வதுண்டு. அந்த ஸமயத்தில் தான் திருக்குடந்தை பெரியதெரு கதாதரபுரம் ஸ்ரீ சக்ரவர்த்தி வேங்கடாசார்ய ஸ்வாமி (38-வது பட்டத்து அழகிய சிங்கரின் பூர்வாஶ்ரமத் திருநாமம்) ஸ்ரீ முஷ்ணம் ஸ்ரீ ஸ்வர்ணம் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி முதலான சிஷ்யர்களும் ஸ்ரீ அழகிய சிங்கரிடத்தில் ஸ்ரீ பாஷ்யம் அதிகரித்தார்கள். அப்போது அபிகமந காலங்களில் ஆழ்வார் ஆசார்யர்களுடைய திருநக்ஷத்ரம் முதலியன நேர்ந்தபோது, அவ்வுத்ஸவங்களை வ்யாஜமாகக் கொண்டு அவ்வூர் ஸ்வாமிகளை ஸம்ஸ்க்ருத த்ராவிட வேத பாராயணங்களைப் பண்ணும்படி நியமித்து யதோசித ஸம்பாவனையும் செய்வதுண்டு. பின் மாத்யாந்ஹிக ஸ்நாநத்தை ஸ்ரீ தேசிகன் திருமாளிகையில் ஸ்ரீ தேசிகனுடைய திருக்கையாலேயே கட்டப்பட்ட கிணற்றில் உத்ருதோதகத்தால் செய்தருளும்போது,

> வேதாந்த ஶாஸ்த்ராணா [illegible] |
> ஸ்நாதோ வேதாந்தநிஷ்ணாதோ பவத்யேவ ந ஸம்ஶய: ||

என்கிற ஶ்லோகத்தைச் செய்து அதை அநுஸந்தித்துக்கொண்டு நீராட்டம் செய்தருளித் தத்கால கர்த்தவ்ய க்ரியாகலாபங்களை முடித்துக்கொண்டு மடத்துக் கெழுந்தருளி, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்கு மங்களாரத்தியைச் செய்தருளி தீர்த்தம் முதலியவை ஸ்வீகரித்துப் பின் பிக்ஷாடநத்தை ஸங்கல்பித்துக்கொண்டு பிக்ஷாடநம் செய்தருளி ஸமாபநமும் செய்வது வழக்கம்.

அதற்குமேல் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார காலக்ஷேபார்த்தமாக வந்திருக்கும் சிஷ்யர்களுக்கு அந்த க்ரந்தத்தைக் காலக்ஷேபம் ஸாதித்தருளி, பின் ஸாயம் ஸ்நாநத்திற்குக் கருட நதிக்கு எழுந்தருளி ஸ்நாந

ஸந்த்யாதிகளை முடித்துக்கொண்டு, ஸ்ரீ தேவநாதனையும் ஸ்ரீ தேசிகனை யும் மங்களாசாஸநம் செய்துவிட்டு, அநேக பாகவத கோஷ்டிகளுடன் யதிராஜ ஸப்ததி அநுஸந்தாநத்துடன் மடத்துக் கெழுந்தருளும் காட்சி யைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணமாட்டா.

ஸ்ரீ அழகிய சிங்கரின் கல்யாண குணங்கள்

இப்படி எழுந்தருளியிருக்கிற காலத்தில் அந்தத் திவ்ய தேசத்து ஸ்வாமிகள் ஸஹஸ்ரஹஸ்ஜியா செய்தருளும் உபய வேத பாராயண கைங் கர்யங்களில் முக்தர்களுக்குப் போல் ஸம்பாவிதமான சிற்சில ஸவிஸம்ராதஸம்ஸாஸதஸஹஸஹஸ்ரஸகாஸஷங்களை ஒரு படியாகத் தீர்த்து வைத்து, அவர்களிடத்தில் பரஸ்பரம் ஶாஶ்வதமான ஸாம ரஸ்யத்தை உண்டுபண்ணவேண்டு மெனத் திருவுள்ளம்பற்றி, இரண்டு வர்க்கங்களிலும் முக்யமான ப்ரமுகர்களை வரவழைத்து ஸமாதாந வார்தைகளைச் சொல்லவே, அவர்களும் ஸ்ரீ அழகிய சிங்கரின் திருக் கல்யாண குணங்களில் ஈடுபட்டுத் தாஸ்ய முபாகதர்களாய் அந்த நியம நத்தை ஶிரஸா வஹித்து 'ஒம்' என்றிசைந்து அந்யோந்யமா யிருந்தார் கள். அது கண்டு ஸ்ரீ அழகிய சிங்கரும்

ஸஹொஹா ஹா ஹ்ருதே ஹொஹா ஹா ஹ்ருதே ஹீ த்ர வ ஸவாஸி நொ: |
ஶ்ம்வ தேஶ்ரா தெ பூஶிகாவும் யதவ தஜிதி ஸயந்தெ ||

என்று அந்தத் திவ்ய தேசத்துப் பெருமையைப் புகழ்ந்து பேசினர். பின்னர், சில காலம் கழித்து ஸ்ரீ அழகியசிங்கர், அந்தத் திவ்ய தம்பதி களையும் ஸ்ரீ தேசிகனையும் தம் மடத்துக்கு எழுந்தருளப் பண்ணி விசேஷமாக ஆராதிக்கத் திருவுள்ளங்கொண்டு அந்த ஊர் ஸ்வாமிகளை யும் அதிகாரிகளையும் கேட்கும்போது, அவர்களும் கோயில் விஷயத்தில் புதிய வழக்கத்திற்கு ஸம்மதமில்லாதவர்க ளாயினும் நம் ஸ்ரீ அழகிய சிங்கரின் குணங்களில் ஈடுபட்டு அந்த நூதநமான ஏற்பாட்டை அங்கீ கரித்து ஸ்ரீ தேவநாதனையும் ஸ்ரீ தேசிகனையும் மடத்துக்கு எழுந்தருளப் பண்ணினார்கள். அப்போது ஸ்ரீ அழகிய சிங்கரும் விசேஷப்படியாகத் தளிகைகள் ஸமர்ப்பித்துக் கோஷ்டியை நடத்தி, பெருமாளுக்கும் ஸ்ரீ தேசிகனுக்கும் விசேஷ ஸம்பாவனையும் ஸமர்ப்பித்தார். பின்பு சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் முடிந்து உத்தாநத்திற்கு ஸமீபத்திலிருக்கும் நத்தப்பட்டு என்னும் அக்ரஹாரத்திற்கு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடன் எழுந்தருளியிருந்து திரும்பி எழுந்தருளும்போது, திருவெவ்வுளூரில்கூட நடைபெறாத விசேஷ மர்யாதைகளுடன் ஸ்வாமிகள் எல்லோரும் திர ளாக எதிர்கொண்டு வந்து ஸ்ரீ அழகியசிங்கரை மடத்திற்கு எழுந்தரு ளப் பண்ணினார்கள்.

ஸ்ரீ தேசிகோத்ஸவாநுபவம்

அநந்தரம் புரட்டாசி மாஸம் ஸ்ரீ தேசிகனுக்கு அவதாரோத்ஸ வம் நடக்கும்போது, ஒவ்வொரு ஸமயத்திலும் ஸ்ரீ அழகிய சிங்கரைக் கோவிலுக்கு எழுந்தருளப்பண்ணி விசேஷ ஸேவைபண்ணி வைத்தபிறகு தான், ஸ்ரீ தேசிகனை வீதிகளில் எழுந்தருளச் செய்வது வழக்கம். இப் படியாக ஸ்ரீ அழகியசிங்கரும் ஒவ்வொரு வாஹந ஸேவைகளிலும் ஈடு பட்டுக் கண்ணாடியறை உத்ஸவம் முதலான எல்லா உத்ஸவங்களுக்கும் உல்லேகாலங்காரத்துடன் கூடிய ஶ்லோகங்களை ஸாதித்து அநுபவித்த

துடன், அந்த க்ரந்தத்திற்கு "வேதாந்ததேசிகோத்ஸவமாலிகா" என்று திருநாமத்தையும் சாத்தியருளினர். அந்த க்ரந்தம் க்ரந்தாக்ஷரத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ தேசிகன் திருமாளிகை ஜீர்ணோத்தாரணம்

அவ்வுத்ஸவம் முடிந்ததும், அப்போது அந்தத் திவ்ய தேசத்திலிருக்கும் ஸ்ரீ தேசிகன் திருமாளிகை ஜீர்ணமாயிருந்தபடியால், ஸ்ரீ அழகியசிங்கரும் அதை ஜீர்ணோத்தாரணம் செய்யவேண்டுமெனத் திருவுள்ளம்பற்ற, அதை யநுஸரித்து அந்தத் திவ்யதேசத்து ஸ்வாமிகள் எல்லாரும் அடுத்த ஐப்பசி மாஸத்தில் நல்ல முஹூர்த்தத்தில் ஸ்ரீ அழகிய சிங்கரின் திருக்கைகளாலேயே ஆரம்பம் செய்விக்க வெள்ளியினால் ஒரு கொல்லறைச் செய்து அதை ஸ்ரீ அழகியசிங்கர் கையில் கொடுக்கும் போது, தத்ஸமயம் அங்கு ஸந்நிஹிதராயிருந்த திருக்குடந்தை ஸ்ரீ சக்கரவர்த்தி ஸ்வாமியினிடம் கொடுக்கும்படி நியமநமாகவே, அவரும் ஸ்ரீ அழகியசிங்கரின் நியமநத்தை ஶிரஸா வஹித்து அப்படியே செய்ய, அந்தக் கட்டிடமும் வெகு விரைவில் நிர்விக்நமாகவே முடிவடைந்தது. அந்தக் கைங்கர்யத்திற்கு ஸ்ரீ அழகியசிங்கர் தம்மிடத்திலிருந்தும் தம் ஶிஷ்யர்களான திருக்குடந்தை ஸ்ரீ சக்ரவர்த்தி ஸ்வாமி, பருத்திப்பட்டு ஸ்ரீ திருவேங்கடாசார்ய ஸ்வாமி முதலான சிஷ்யர்கள் மூலமாயும், விசேஷ த்ரவ்ய ஸஹாயம் செய்துள்ளார். அந்தக் கட்டிடம் வெகு விசாலமான மண்டபமாய் அமைந்து, ஸ்ரீ தேவநாதனுடையவும் ஸ்ரீ தேசிகனுடையவும் விசேஷோத்ஸவங்களில் விஶ்ராந்தி மண்டபமாக உபயோகப்பட்டு வருகிறது.

ஸ்ரீ நரஸிம்ஹபுர யாத்ரை

இப்படி ஐப்பசி மாஸம் வரையில் நான்கு மாஸ காலம் ஸ்ரீ தேசிகன் விபவங்களை அநுபவித்து, கார்த்திகை மாஸத்தில் ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கரின் அவதாரோத்ஸவத்தை ஸ்ரீ நரஸிம்ஹபுரத்தில் நடத்தவேண்டுமென்கிற அபிநிவேசத்துடன் ஒரு நல்ல நாள் பார்த்து அருணோதயத்திற்கு ப்ரயாணம் புறப்படுவதாக நிச்சயித்துப் பெருமாளைத் திருப்பல்லக்கில் எழுந்தருளப்பண்ணிப் பரிஜனங்களையும் நியமிக்கவே, அவர்களும் தங்கள் தங்கள் கைங்கர்யாநுகுணமான ஸம்பாரங்களுடன் ஸித்தமாக இருந்தார்கள். அப்போது ஸ்ரீ தேவநாயகனுக்கும் ஸ்ரீ தேசிகனுக்கும் ஸ்ரீ அழகியசிங்கரை விட்டுப் பிரியத் திருவுள்ள மில்லாதபடியால் திடீரென்று ஒரு மேகத்தை ஸங்கல்பிக்கவே, அதுவும் ப்ரளயகால மேகம்போல் விசேஷமாக வர்ஷித்து ப்ரயாணத்தை நிறுத்திவிட்டது. பின்பு அடுத்த வாரத்தில் ப்ரயாண ஸந்நாஹம் செய்து புறப்படும்போது, ஸ்ரீ அழகியசிங்கர் மடத்திலிருந்து வெளியில் எழுந்தருளும்போது, ஸ்வாமியின் திருமுடியில் வாசற்படி முட்டிற்று. இருந்தபோதிலும் ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கரின் திருநக்ஷத்ரோத்ஸவத்தின் தொடக்க தினம் ஸமீபத்திருந்தபடியால், யார் சொல்லியும் கேட்காமலே வெகுதூரம் நடந்து சென்று மிக ஶ்ரமப்பட்டுத் தொடக்க தினத்தன்று பத்து மணிக்கு நரஸிம்ஹபுரம் எழுந்தருளியாயிற்று. [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அழகியசிங்கர் துதி

[திருப்பூந்துருத்தி ஸ்ரீ. உப. வி. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் பங்களூர்]

41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தன்று விண்ணப்பிக்கப்பட்டது.

கலிப்பா

(தரவு)

திருவளர விசும்பண்வுந் திருமடங்கற் பெருவரையி
லருமறையின் பொருளுருவா யமர்ந்திடுமா மணவாளப்
பெருமடங்கல் குரைகழற்கி ழறம்வளர்க்குந் திருமுனிவா!
பொருவருசீர் முகிறவழும் பொழிற்கயலே புனல்பெருக்கித்
திரைவிரித்து வருபொருனைத் துறைமருவு கார்குரிச்சி
திருவளரு மருநகர்மா நரசிங்கா விண்ணப்பம்!!

(தாழிசை)

ஆரணமா தேசிகரா யழகுசிங்க ராய்த்திகழும்
பூரணமா ஞானியர்க்கோர் பூஷணமாய்த் திகழ்வோய் நீ!
பாவளரும் தமிழ்மறையிற் பயிலவரும் பொருளையெலாம்
தேவர்களுஞ் செவிமடுக்குந் தீஞ்சுவையாய்ப் பொழிவோய் நீ!
வாழ்வார்கள் வானுலகில் வாழ்வெய்தி மாதவனார்
தாழ்வில்லாத் தாண்மலரைச் சார்வதுமுன் பேரருளால்!
ஆழ்வாரீ ரைவருமோ ரழகுருவம் பெற்றனரென்
றேழுலகும் போற்றுமுன தெழிலுருவை யார் மறப்பார்!

(அராகம்)

தமிழா ரணம்பா டியமா மிவற்றி னமுதச் சுவையீங் கருளும் முனி நீ!
எழிலார் மறைதே சிகர்தான் வணங்கிச் சுழலாற் பவநோய் செகுமாமுனிநீ!

(அம்போதரங்கம 1)

ஞால மகிழ வுதித்தனை ஞன வொளியை நிறைத்தனை
சீல முலதி லுயர்த்தினை திகழு மருக்க நிகர்த்தனை

(அம்போதரங்கம் 2)

வாழ்வு தந்தனை தாழ்வி கந்தனை
மருள் செகுத்தனை தெருள் வகுத்தனை
உயர்வு கொண்டனை மயர்வு விண்டனை
சோகம் போக்கினை போகம் ஆக்கினை

(தனிச்சொல்)

எனவாங்கு

(சுரிதகம்)

அங்கின் கென்று தெங்கணு நிரைந்த
சிங்கனார் கமலச் செல்வி யோடும்
மன்னி வாழு மங்கள வரைதொழு
மாநா சிங்க தேசிக! வாழியுன்
மூவுல குந்தொழு சேவடிக் கவினே.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் விஷயமான

அடைக்கலப்பத்து

[வேதாந்த சிரோமணி நெடுந்தெரு. ஸ்ரீ. உப. ரா. பத்மநாபாசார்யர் இயற்றிய பதவுரை விசேஷ உரைகளுடன்]

(ஸம்புடம் 9 : ஸஞ்சிகை 6, பக்கம் 336-ன் தொடர்ச்சி)

2-ம் பாசுரத்தின் அவதாரிகை :—இவ்விதம் கலியுகத்தில் அர்ச்சாவதாரம் செய்து, ஸ்ரீ ஸந்நிதி குருபரம்பரையை ஏற்படுத்தித் தன்னையும், தன் திருமுடி ஸம்பந்தம் பெற்ற ஆசார்யர்களையும், திருவடி ஸம்பந்தம் பெற்ற தன் சிஷ்யர்களையும் ரக்ஷித்துக்கொண்டு எழுந்தருளியிருக்கும் மஹா குணத்தை முதல் பாசுரத்தில் அநுஸந்தித்து விட்டு, இதில், க்ருதயுகத்தில் விபவாவதாரம் செய்து ஹிரண்யாஸுரனைக் கொன்று தேவாதிகளுடைய இடர் தீர்த்து ரக்ஷித்த மஹா குணத்தை அநுஸந்தித்து வணங்குகிறார்.

2. பேர்வலிசேர் பொன்பெயரோன் பேருடலைப் பிளந்துகிரால்
நார்கிழிப்பா ரதுபோல நன்றாகக் கிழித்திட்டு
சார்வளைசே ரிந்திரையும் தானுமுறை நரசிங்கன்
பார்புகழு மடிமலரைப் பணிந்திட்டுப் பாங்கினனே.

பதவுரை :—பேர் வலி சேர் - பெருத்த வலிமை வாய்த்த [அதாவது: கிடைக்க அரிதான வரபலம் பெற்ற], பொன் பெயரோன் - ஹிரண்ய கசிபு என்னும் பெயருள்ள அசுரனுடைய, பேர் உடலை - [காம பக்ஷணைத் திரிந்ததனால் வளர்ந்து] பெரியதான சரீரத்தை, உகிரால் - நகத்தால், பிளந்து - இரண்டாக்கி, நார் கிழிப்பார் அதுபோல - நார் கிழிப்பவரின் செயல்போல் அநாயாஸமாக, நன்றாக கிழித்திட்டு - சின்ன பின்னமாகக் கிழித்துவிட்டு, *சார் வளைசேர் இந்திரையும் - [பக்தாபராதியான ஹிரண்யனை ஸம்ஹரித்துப் பிறகும் அடங்காத கோபாக்நியைச் சாந்தமாகும்படி செய்வதற்காகத் தன் மடியில் வந்து வீற்றிருக்கும்] திவ்யாபரணாலங்க்ருதையான பெரிய பிராட்டியும், தானும் - [எதிரியை ஒழித்துவிட்டதனால் அத்விதீயனாய் விளங்குகிற] தானுமாக, உறை - [ஹிரண்யாஸுரனுடைய ஸபா மண்டபத்தில்] எழுந்தருளியிருந்த, நரசிங்கன் - ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய, பார் புகழும் - உலகத்தில் உள்ள ப்ரம்ஹாதி தேவர்களால் கொண்டாடப்பட்டதான, அடி மலரை - சரணாரவிந்தங்களை, பணிந்திட்டு - வணங்கி, பாங்கினன் - ஸகல க்ஷேமத்தையும் பெற்றேன். [ஏ - அசை.]

குறிப்பு :—ஹிரண்யாஸுரனை ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ஸம்ஹரித்ததும், ஸ்ரீ ந்ருஸிம்ஹனுக்குக் கோப சாந்தி செய்விக்கும்படி மஹா லக்ஷ்மியை ப்ரம்ஹாதி தேவர்கள் கேட்டுக்கொண்டதாகவும், அந்த ஸமயத்திலிருந்த புதிய ரூபத்தைப் பார்த்து ஸ்ரீ ந்ருஸிம்ஹனிடம் நெருங்குவதற்கு மஹா லக்ஷ்மியும் பயந்து ஒதுங்கிவிட்டதாகவும்,

---

* 'சார்வளைசேர் இந்திரையும்'—[எப்பொழுதும் கையை விட்டகலாத] வளைகளோடு கூடிய மஹா லக்ஷ்மியும் அதாவது : மஹாப்ரளயத்திலும் அழிவில்லாத மஹா புருஷனைப் பர்த்தாவாகக் கொண்டவளாதலால் நித்ய மாங்கல்ய சின்னங்களுடன் விளங்கும் பெரிய பிராட்டியும் என்றபடி.

பிறகு ப்ரஹ்லாதாழ்வானைக்கொண்டு கோப சாந்தி செய்வித்ததாகவும் ஸ்ரீ பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. புராணாந்தரத்திலோ, "ஜாஜ்வல்யமானம் தம் த்ருஷ்ட்வா நரஸிம்ஹம் ஸுராஸுரா: | பார்ஷ்வஸ்தாம் ச்ரியம் ப்ரைஜ:" இத்யாதியால் மஹா லக்ஷ்மியைக்கொண்டு ஸ்ரீ ந்ருஸிம்ஹனுக்குக் கோபசாந்தி செய்வித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு க்ரந்தங்களும் ப்ரமாண க்ரந்தங்க ளாகையால், ஒன்றில் சொன்ன அர்த்தத்தை ஒப்புக்கொண்டு மற்றொன்றில் சொன்ன அர்த்தத்தைச் சரியில்லை என்று சொல்வது ந்யாய்யமாகாது என்று நினைத்து, ஒரு கல்பத்தில் ப்ரஹ்லாதாழ்வானாலும், மற்றொரு கல்பத்தில் மஹா லக்ஷ்மியாலும், ஸ்ரீ ந்ருஸிம்ஹனுக்குக் கோப சாந்தி செய்விக்கப்பட்டதாகப் பெரியோர்களால் மேற்கூறிய இரண்டு வசநங்களுக்கும் கால பேதத்தாலே விரோத பரிஹாரம் செய்யப்பட்டிருக்கிறது. அதை அறிந்தவர்களுக்கு, இவ்வந்தாதியின் மூன்றாவது பாசுரத்தின் கருத்தில், "திருமகளும் கிட்டுவதற்கு அஞ்சும்படியான நிலைமையிலும் ஸ்ரீ ந்ருஸிம்ஹனிடத்தில் ப்ரஹ்லாதாழ்வான் மட்டில் கூசாமல் கிட்டி வணங்கும்படி ஸ்ரீந்ருஸிம்ஹனுக்கு வாத்ஸல்ய பாத்ரமாயிருந்தது போலவே" என்று எழுதியிருப்பதற்கும், இப்பாசுரத்தின் பதவுரையில், 'ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கோபாக்நியை ஶாந்தமாகும்படி செய்வதற்காக மடியில் வந்து மஹா லக்ஷ்மியானவள் வீற்றிருக்கிறாள்' என்று சொல்லி யிருப்பதற்கும் விரோத மில்லாமையானது சொல்லாமலே விளங்கும்.

கருத்து :—பக்தனை ப்ரஹ்லாதன் ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய திருவருளால் ஸகல உபத்ரவங்களும் நீங்கி உயர்ந்த க்ஷேமத்தை அடைந்ததுபோலவே, ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய சரணாரவிந்தங்களை ஶரணமாக அடைந்தால், அவனருளால் ஸகலவிதமான துன்பங்களும் நீங்கி ஸகல க்ஷேமங்களையும் அடையலாம் என்பது கருத்து.

3-ம் பாசுரத்தின் அவதாரிகை :—முன் பாசுரத்தில், 'பார்புகழு மடிமலரை' என்று சுருக்கமாக அருளிச்செய்ததை இதில் விவரமாக அருளிச்செய்கிறார்.

3. மறையோனும் மாமதிசேர் மறுசடைய னிந்திரனும்
மறைமுனிவ ருடன்வந்து மலரதனா லிறைஞ்சிநிற்க
குறைமுனிவ ரரம்பையருங் கூடிமறை பாடிநிற்க
நறைமலரா ளுடனுறையும் நற்குருவை யடைந்தேனே.

பதவுரை :—மறையோனும் - நான்கு வேதத்தையும் நான்கு முகத்தாலும் உச்சரித்துக்கொண்டிருக்கும் ப்ரம்ஹாவும், மா மதி சேர் மறு சடையன் - அழகான சந்திர கலையைத் தரிக்கும் அழுக்கடைந்த சடையுள்ள கபர்த்தியும்(சிவனும்), இந்திரனும் - [ஸ்வர்க்காதிபதியான] இந்திரனும், மறை முனிவருடன் - [வேதத்தில் "யத்ர ருஷய: ப்ரதமஜா யே புராணா:" என்று சொல்லப்பட்ட] நித்ய ஸூரிகளான ஸநந்த குமுதாதிகளுடன், வந்து - [ஹிரண்யாஸுரனை ஸம்ஹரித்த ஸமயத்தில் ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய திருவோலக்கத்தில்] வந்து, மலரதனால் - புஷ்பங்களால் [அர்ச்சித்து], இறைஞ்சி நிற்க - [கோபத்தை அடக்கிக்கொள்ளவேண்டும் என்று] வேண்டிக்கொண்டு நிற்க, குறை முனிவர் - [ஸம்ஸார மண்டலத்தில் இருப்பதால் ஏதாகிலும் ஒருவிதமான] குறையுடன் கூடிய [தும்புரு நாரதர் முதலான] மற்ற ருஷிகளும், அரம்பையரும் - அப்ஸரஸ்ஸுக்களும், கூடி - சேர்ந்து, மறை பாடி நிற்க - வேதத்தில் துதிக்கப்பட்டிருக்கும் வண்ணம் காநம் செய்து துதித்துக்கொண்டிருக்க, நறை மலராள் உடன் உறையும் - தேன்நிறைந்த புஷ்பத்தில் வாஸம் செய்பவளான பெரிய பிராட்டியுடன் எழுந்தருளியிருக்கும், நல் குருவை - ஸதாசார்யனை ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை, அடைந்தேன் - சரணமாக அடைந்தேன். [ஏ - அசை]

கருத்து :—ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ஹிரண்யாஸுரனை ஸம்ஹரித்து, உலகத்தைக் காத்தருளின காலத்தில், ப்ரம்ஹா ருத்ரன் இந்த்ரன் முதலான தேவர்களும் ஸுநந்த குமுதாதி நித்யஸூரிகளும் ஸ்ரீ ந்ருஸிம்ஹனை ஸ்தோத்ரம் செய்து, 'ஸ்ரீ ந்ருஸிம்ஹனே யாவர்க்கும் ஸ்வாமி' என்பதையும் 'தாங்கள் ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய அடிமை' என்பதையும் ஸ்பஷ்டமாக வெளியிட்டிருப்பதால், அவர்களை ஸ்ரீ ந்ருஸிம்ஹனுக்கு மேற்பட்டவர்கள் என்றாவது, ஸமம் என்றாவது, அவர்களும் மோக்ஷம் கொடுக்கக் கூடியவர்கள் என்றாவது நினைக்காமல், ஸ்ரீ ந்ருஸிம்ஹனே ஒத்தார் மிக்கார் இல்லாத மாமாயன் என்றும், மோக்ஷப்ரதாந ஸமர்த்தன் என்றும் தீர்மானித்து, அநந்யோபாயர்களாய் அவன் திருவடிகளை ஶரணமாக அடைவதே விவேகிகளாயிருப்பார் செய்யவேண்டிய காரியம் என்பதாம்.

குறிப்பு :—இப்படி ப்ரம்ஹா முதலான தேவர்களும் ஸநந்த குமுதாதி நித்ய ஸூரிகளும் ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ஹிரண்யாஸுரனை ஸம்ஹரித்த ஸமயத்தில், ஸ்ரீந்ருஸிம்ஹனை ஸ்தோத்ரம் செய்ததாக ஸ்ரீ பாகவதம் 7-வது ஸ்கந்தம் 8-ம் அத்யாயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

4-ம் பாசுரத்தின் அவதாரிகை :—இப்படி, முன் பாசுரத்தில் முமுக்ஷுக்களுக்கு வேண்டிய அநந்யோபாயதையை அருளிச் செய்துவிட்டு, இப்பாசுரத்தில், லோககண்டகனை ஹிரண்யனைக் கொன்று ஜகத்துக்கு ஸௌக்யத்தை உண்டாக்கின ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய திருக்கைகளுக்கு மங்களம் பாடுவதன் மூலம், "ஸ்வாமிக்கு மங்களம் பாடுவது முதலான கைங்கர்யங்களைத் தவிர தமக்கு வேறொரு ப்ரயோஜநாபேக்ஷை இல்லாமை" என்கிற அநந்ய ப்ரயோஜநத்வத்தை அருளிச்செய்கிறார்.

4. கொள்ளியெழு கோளவுணன் குடலலறப் பாய்ந்திட்டுத்
தள்ளியவன் தலைகாலைத் தனித்தனியே பிரித்திட்டு
அள்ளியவ னுதிரத்தை யாசையுட னுண்டபிரான்
வெள்ளிகுல ருதிரக்கை வேண்டிவந்து பணிந்தேனே.

பதவுரை :—கொள்ளி எழு கோள் அவுணன் - நெருப்புப்போல் உக்ரமாயும் வர பலத்தால் தினந்தோறும் வ்ருத்தியடைவதுமான வலிமைவாய்ந்த ஹிரண்யாஸுரனுடைய. குடல் அலற பாய்ந்திட்டு - குடல் பதைக்கும்படியாக [ஸிம்ஹ கதியால்] பாய்ந்து, தள்ளி-[அவனைக் கீழே] தள்ளி, அவன் தலை காலை தனித்தனியே பிரித்திட்டு - அவனுடைய தலையும் காலையும் வெவ்வேறாகப் பிரித்துச் சிந்நபிந்நமாக்கி, அவன் உதிரத்தை அள்ளி - அந்த ஹிரண்யனுடைய ரக்தத்தைக் கைகொண்டவரையில் வாரியெடுத்து, ஆசையுடன் - [ஸிம்ஹஜாதி ஸ்வபாவத்துக்கு அநுகுணமாக அதில்] போக்யதாபிநயம் செய்துகொண்டு, உண்ட பிரான் - அமுதுசெய்து உலகத்துக்கு உபகரித்தருளின ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய, வெள்ளி குல ருதிரம் கை - சுக்ர சிஷ்யனை ஹிரண்யாஸுரனுடைய ரக்தங்களால் பூசப்பட்ட திருக்கையானது, வேண்டி - 'பல்லாண்டு பல்லாண்டாக வாழவேண்டும்' என்று ப்ரார்த்தித்துக்கொண்டு, வந்து - திருவடிவாரத்தில் வந்து, பணிந்தேன் - வணங்கினேன். [ஏ - அசை]

கருத்து :— இப்படி உலகிலுள்ள ப்ரஜைகளின் கஷ்டத்தைத் தன் கஷ்டமாக நினைத்து ஹிரண்யனைக் கொன்று அபயமளித்த அவ்வெம்பெருமான் திருக்கையானது பல்லாண்டு பல்லாண்டாக வாழ்ந்தால் உலகில் யாவரும் எக்காலத்திலும் பயமில்லாமல் வாழலா மாகையால், அவ்வபய மளித்த திருக்கை பல்லாண்டு பல்லாண்டாக வாழவேண்டும் என்றும், அவனடியார்களான நமக்கு அவன் விஷயத்தில் இவ்விதம் யதாசக்தி கைங்கர்யம் செய்வதைத் தவிர வேறு சில்வான ப்ரயோஜநத்தை விரும்புவது ஸ்வரூப விருத்தமாகையால் தனக்கென்று ஒரு பலத்தை விரும்பி அவனை வணங்காமல் அவன் ப்ரயோஜநத்துக்காகவே அவனை வணங்குவதுதான் அவனடியார்களான நமக்கு ஸகல க்ஷேம ஸாதகம் என்பதாம். [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஒரு பெரும்புயல்

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசாரியர், M.A.,L.T., வித்வான், திருவையாறு]

திருவரங்க நகரெங்கும் அல்லோல கல்லோலம். ஜனங்களுடைய ஆர்த்த நாதம் காதைத் துளைக்கிறது. யுகாந்தமே ஏற்பட்டு விட்டதோ என்று யாவரும் நடுங்கினர். ம்லேச்சர்கள் திருவரங்கப் பெருஞ் செல்வனின் ஆலயத்தில் புகுந்து எதிர்த்த யாவரையும் வெட்டிக் கண்டதுண்டமாக்கி, எம்பெருமானின் திருமேனியையும் எடுத்துச்சென்றனர். இதைக் கேட்ட ஸ்ரீ வைஷ்ணவரின் உள்ளம் கொதித்தது. "திருவரங்கமே பாழ்பட்டதே! எந்தாய்! திருவரங்கா! உனை யெங்குற்றாற் காண்போம் யாம்" என்றார் சிலர். "ஐயோ அணியரங்கா! எம்மாருயிரே! எங்கானாய்?" என்றார் மற்றும் சிலர். "நின் சங்காழி நீள் படையார் நெடுமேனி காண்போமே?" என்றேங்கினார் இன்னும் சிலர். இருள் கவிந்து ஆட்சி கொண்டது. தெருவெல்லாம் பிணக்காடு. ஸ்த்ரீகளும் பாலர்களும் வ்ருத்தர்களும் யுவர்களும் இறந்தவர் பலர். தப்பி ஓடுபவர் பலர். ஓடுங்கால் அடிபட்டு வீழ்ந்து மாண்டவர் பலர். திருவரங்கக் கோயிலில், நள்ளிருளில் ஒரு சிறு பாலகன் த்வஜஸ்தம்பத்தின் பக்கலிலுள்ள தூண்களில் மறைந்து மறைந்து வருகிறான். ஏதோ வஸ்த்ரத்தால் மூடப்பட்ட கனமான பதார்த்தத்தைக் கொண்டுவருபவன்போல் கஷ்டப்பட்டு நடந்தான். மையிருட்டு. ஒரு வீரன் வாயிற்புறத்தில் தலை கவித்துத் தூங்குகிறான். சந்தடி செய்யாமல் அடிமேலடி எடுத்து வைத்து மெதுவாக நடந்தான். அவன் பின்னால் இன்னும் இரண்டு உருவங்கள் நடந்தன. கோபுர வாயிலைக் கடந்துவிட்டால் இந்த விலையற்ற பாரத்துடன் வெளி நடந்துவிடலாம். ஐயோ! என்ன ஆநந்தம்! என்ன ஆநந்தம்! பையன் நடந்தான். "கௌன்ஹை?" தூங்கிய வீரன் விழித்தெழுந்தான். கையில் உருவிய சந்திரப் பிறைவாள் ஒளி வீசியது. பையன் திடுக்கிட்டான். ஒரே ஓட்டமாய் ஓடினான். வீரன் தொடர்வதற்குள் இன்னும் இரண்டு உருவங்களும் ஓடின. வீரன் கூக்குரலிட்டு அந்த இருவரில் ஒருவனைப் பிடித்துக்கொண்டான். முதல் பையனும் இருட்டில் எங்கேயோ போய்விட்டான். வேறொரு பையனும் இருட்டில் மறைந்துவிட்டான். திருவரங்கக் குழந்தைகளுக்குக் கோவில் பிறந்த வீடு மாதிரி. கண்ணைக் கட்டிவிட்டாலும் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்கு ஓடுவார்கள். எங்கே தேடுவது? இருபது முப்பது வீரர்கள் கைத் தீவட்டியுடன் கூச்சல் கேட்டு ஓடி வந்தார்கள்.

தீவட்டி வெளிச்சத்தில் அவர்கள் ஒரு சிறு பாலகனைப் பார்த்தார்கள். சிவந்த வடிவம், ஒளி பொருந்திய முகம், கறுத்து மருண்ட கண்கள், சிவந்த உதடு, அருள் மயமான நோக்கு. பின்னலிடப்பட்டு முதுகில் விழும் குஞ்சி. மார்பில் பாலன்ன பூணுல். இருகைகளாலும் ஏதோ வஸ்த்ரத்தால் சுற்றப்பட்ட வஸ்துவைத் தாங்கி நின்றான் அப்பாலன். அவன் முகமெல்லாம் வியர்வை ததும்பி நின்றது. வீரர்கள் பெருங் கூச்சலிட்டார்கள். "அடே புழுக்களா! கோயிலில் அகப்பட்ட நிதிகளை வாரிச் சுருட்டி ஓடுகிறீர்களா?" என்று விரட்டினான் ஒருவன். அவனது உயர்ந்த ஆக்ருதியையும், பட்டுத் தலைப்பாவையும், பட்டு ஆடைகளையும், அடர்ந்த தாடியையும், பெரிய மீசையையும், வீரம் செறிந்த கண்களையும் பார்த்தாலே நடுங்குவார்கள். பையன் அஞ்சாது புன்சிரிப்புடன், "ஆமாம்! நிதியைச் சுருட்டிக்கொண்டுதான் போகிறோம்" என்றான். "மூட்டையை அவிழ்த்துக் காட்டு" என்றார் அவர்கள். "அது நீங்கள் பார்க்கக்கூடிய மூட்டையல்ல" என்றான் பையன். அவர்கள் என்ன வெருட்டியும் பையன் இசையவில்லை. மார்போடு மார்பாகக் கெட்டியாகக் கட்டிக்கொண்டு நின்றான். உடலெல்லாம் வியர்வை ஓடுகிறது. "ஸலீம்! அதைப் பிடுங்கு" என்றான் வீரன். ஒருவன் பையனது மூட்டையில் கைவைத்து இழுத்தான். "அரங்கா! அரங்கா!" என்று பையன் கூச்சலிட்டுத் தன் மூச்சை உள்ளடக்கிக் கெட்டியாய்ப் பற்றி நின்றான். "அரே ஸாவர்" என்றான் ஒருவன். பிடித்த வீரன் பையனைக் குலுக்கி மூட்டையை இழுக்க ஆரம்பித்தான். சிறு பையன்தானே என்று மற்றவர் பேசாமல் நிற்கப் பையன் எதிர்நின்ற வீரன் முகத்தில் ஓங்கி ஒரு கையால் குத்திப் பரபரப்புடன் ஓட ஆரம்பித்தான். இரண்டு வீரர்கள் பையனைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள, அடிபட்ட வீரன் ஓங்கிச் சிறுவன் முகத்தில் அறைந்தான். சிறுவன் மூர்ச்சையாய்க் கீழே விழுந்தான். மார்பில் மூட்டையைக் கட்டிய வண்ணம் கிடந்தான்.

"போக்கிலிக் கழுதை! அந்த மூட்டையை அவிழ்த்து எடுங்கள்" என்றான் பெரிய வீரன். அவிழ்க்கும்பொழுது பையன் கூச்சலிட்டு எழுந்தான். வாயிலிருந்து ரத்தம் பெருகுகிறது. அதோடு மூட்டையை இறுகப் பிடித்துக் கொண்டான். அப்பொழுது நெற்றியில் நாமந் தரித்த ஒரு கிழவன் ஓடிவந்து தடியால் இரண்டு வீரர்களைத் தலையில் அடித்தான். பரபரப்பு உண்டாயது. வீரர்கள் கிழவனைப் பிடித்துக் கொண்டார்கள். பையன் முகத்தில் புன்சிரிப்புண்டாயிற்று. கிழவன் திமிறிக்கொண்டு சிங்கம்போல் பையனது பக்கல் நெருங்கினான். "ரங்கையா! ரங்கையா! நீ இதுவரையில் எங்கே இருந்தாய்?" என்றான் பையன். கிழவன் அழுத குரலில் "என் ராசா! ஒங்கப்பா ஒங்கம்மா ஒன்னெ வளத்த பெருமையோ?" என்று கிட்ட நெருங்கினான். பளீர் என்று வாளொளி மின்னியது. கிழவன் மார்பில் வாள் ஓங்கி வீழ்ந்தது.

துடி துடித்துப் புரண்டு வீழ்ந்தான். "ரங்கய்யா! நாதன்ட்ரீ! நாதல்லீ! முப்பது வருஷம் உன் கோவிலைக் காத்தேன். என்னைக் கைவிடாதேடா; என் ராஜா! அப்பா! ஆமருவி! நான்....………" என்று மெல்லிய குரலில் சொல்லிக்கொண்டே புரண்டு உயிர் துறந்தான். பையன் வீர னுடன் போராடுகின்றான். பிடித்துப் பிடித்து இழுத்ததில் உடலெல்லாம் ரத்தம் கசிந்தது. வீரர்கள் அந்த மூட்டையைப் பிடுங்கிவிட்டனர்.! பையன் ஓவென்று கூச்சலிட்டான். "ரங்கய்யா! நீயும் போய்விட்டயே என் மூட்டையை யார் காப்பாத்துவா? அப்பா என்ன கதியானரோ? ஐயோ! பிரித்துவிட்டார்களே!………" என்று சொல்லிக்கொண்டே பையன் தடியை எடுத்து ஓங்கினன். மூட்டையைப் பார்க்கும் பரபரப் பில் யாரும் கவனிக்கவில்லை. பையன் ஓங்கிப் பெரிய வீரனது இடுப்பில் ஓர் அடி கொடுத்தான். ஐயோ பாவம்! யானைக் கன்று சிங்கக் கூட்டத்தை எதிர்த்ததுபோல் என்ன செய்தான்? ஒரு வீரன் இருப்புத் தடியால் பையனை உடனே முதகில் அடித்தான். அலறியவண்ணம் பையன் கால் தளர்ந்து வீழ்ந்தான். பளபளவென்று மின்னும் ரத்நங்க ளிழைத்த ஸ்ரீ சடாரி தீவட்டிகள் ஒளியில் மின்னியது. பையனது கண் களில் தண்ணீர் ததும்பியது. உடல் குலுங்க அழுதான். "வீரர்களே! அது ஸ்வாமி; வேறு பண்டமில்லை. எங்களிடமே கொடுத்துவிடுங்கள்" என்று இழுத்துச் இழுத்துச் சொன்னன். "ஒஹோ இந்தத் தொப்பியா உங்கள் சாமி! மடக் கழுதைகளா!" என்னும்போது திடீரென்று ஒரு கை சடாரியில் பாய்ந்தது. மின்னல்போல் ஓர் உருவம் தெரிந்தது. பன் னிரண்டு திருமண் காப்பு. வெள்ளை வேஷ்டி. பின்புறமாக வந்து தீவட்டி வெளிச்சத்தில் சடக்கென ஸ்ரீ சடாரியைப் பறித்து அந்த உருவம் ஓடியது. "அரே பத்மாஷ்! அரே பத்மாஷ்!" என்று வீரர்கள் திரும் புவதற்குள் உருவம் மாயமாய் மறைந்தது பெரிய வீரன் கூச்சலிட்டான். "ஜாவோ! ஜாவோ! உஸ் ஆத்மீ பகடோ! பகடோ!" என்றான். வீரர் கள் நாற்புறமும் ஓடினர்கள். திருவரங்கக் கோயிலின் மூலை முடுக்குகள் அவருக்குத் தெரியுமா? திருவரங்கத்தில் பிறந்தவர்களுக்கு அந்தக் கோயில் தன் வீடுபோல் அல்லவா? வீணில் ஓடுகிறார்கள்.

"அடே வந்தது யார்?" என்று வீரன் பையனை மார்பில் உதைத்துக் கேட்டான். பையன் வேதனையை ஸஹித்த வண்ணம் "அடே! அது என் தந்தை; என் தந்தை. அது எங்கள் பெருமானின் சடாரி—சடகோபம்—திவ்ய பாதுகை—பிழைத்ததே" என்று கை கூப் பினன். வாயிலிருந்து ரத்தம் கசிகிறது: கண் ஒளி பொருந்திச் சுழல் கிறது. "அடே உன் தந்தை எங்கே ஒளிந்திருப்பான் சொல்லு" என்றான் வீரன். "எனக்குத் தெரியாது" என்றான் பையன். வீரன் பக்கலில் நின்ற இருவரைப் பார்த்து, "இவனை இந்தத் தூணில் கட்டிப் போடுங்கள். இந்தக் கழுதைக்கு அவன்போன இடம் தெரியும்" என்

ளுன். அவர்கள் பையனை ஒரு தூணில் சார்த்திக் கட்டினர். பையன் வாய் திறக்கவில்லை. முகத்தில் மந்தஹாஸம். "கருணாஜலநிதே! கஸ்தூரி ரங்கா! காவேரி ரங்கா! உன் திருமேனியும் இந்தப் பாபிகள் கையிலிருந்து தப்பியதென்று தெரிந்தால் என்ன ஸந்தோஷமாகும்!" என்று புலம்பினன்.

தீவட்டிகள் கொழுந்துவிட்டு எரிகின்றன. பெரிய வீரன் தூணருகில் வந்தான். "அரே! நீ சொல்றதில்லே! அவன் எங்போனு சொல்" என்ருன். பையன் பதிலே கொடுக்கவில்லை. பளீர் என்ற சாட்டையடி அவன் மார்பிலும் கையிலும் விழ்ந்தது. ஒரு சிவந்த ரேகை தென்பட்டது. ரத்தம் பீறிட்டடித்தது. வீரன் "அடே எவ்வளவு ரத்நங்கள்! என்ன பளபளப்பு! நம் ஸேனபதி கேட்டால் நம் வீரத்தனத்தை என்ன சொல்வார்! அந்த ஆளெங்கே?" என்ருன். இரண்டு மூன்று அடிகளும் ரக்த வெள்ளம். பையன் தீனமான குரலில் "நான் வைஷ்ணவன் போய் சோல்லமாட்டேன். எனக்கு அவர் எங்கே போனர் என்று தெரியாது" என்ருன். இதற்குள் நாற்பது ஐம்பது வீரர்கள் ஒடிவந்து பெரிய வீரனிடம், "ஆதாம்ஜீ! முஹமத் உம்மை நாற்பது பெயருடன் உடனே வரச் சொல்லுகிருர். கோயில் காவலுக்குச் சிலர் இருந்தால் போதும். ஆற்றங்கரைக் கூடாரத்தில் இருந்த இந்தக் கோயில் விக்ரஹத்தைத் திருட்டுப் பிராம்மணர்கள் எடுத்துப்போய் விட்டது சற்று முன்புதான் தெரிய வந்தது. காவலைக் கடந்து வீரர்களை எதிர்த்து இவர்கள் செய்யும் அட்டஹாஸம் தான் என்ன! சீக்கிரம் வாருங்கள்" என்ருர்கள். 'தட தட' வென்று குதிரை பாயும் சத்தம். "ஆஹா! ப்ரதாநமான சாமியையுங் கொண்டுபோய் விட்டார்களே! இந்தக் கோயிலையே கொளுத்தி விடுகிறேன் பார்" என்று சொல்லியவண்ணம் கோட்டை வாயில் வழியாய் ஒடினன் ஆதாம். தூணேடு நின்ற பையனது கண்கள் சுழல்கின்றன. நாக்கு உலர்ந்து ஒட்டியது. "அரங்கா! உன் மாமாயம் ஆரறிவார்?" வடக்கு வீதி ஸ்வாமிகள் கூடாரத்தைச் சுற்றிக்கொண்டிருந்ததாகக் கேள்விப்பட்டேன். எந்தாய்! நீ தப்பித் திரும்பவும் கை வந்தாயே! உனக்கு ஒரு அஞ்சலி கூட ஸமர்ப்பிக்கப் பாக்யம் பெற்றேனில்லை பாவியேன்!" என்று கரைந்து அழுதான். இருட்டில், தூணேடு பொருத்தப்பட்டுத் தேற்றுவாரற்றுத் திருவரங்கனே துணை நிற்ப, அச்சிறிய வைஷ்ணவச் சிங்கம் மலங்க மலங்க விழித்து ஆநந்தக் கண்ணீர் பெருக்கி நிற்க, முகத்தில் புன்சிரிப்புக் கூத்தாட, அவனது தன்னந்தனியான ஆவி திருவரங்கனது திருவடியிற் சேர்ந்தது.

ஸ்ரீ:

ஸ்ரீபெருந்தேவீ நாயிகா ஸமேத ஸ்ரீதேவாதிராஜ
பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ வைஷ்ணவத் திருநாமங்கள்

[ஸ்ரீ காஞ்சி ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யர்]

உலகில் ப்ரஹ்ம க்ஷத்ரிய வைச்ய சூத்ரர்களென வர்ணங்கள் நான்கேயாயினும், ஒவ்வொரு வர்ணத்திலும் அவாந்தர பேதங்கள் அளவு கடந்துள்ளன. அங்ஙனம் ஏற்பட்ட பல பல பிரிவுகளில் அவரவர்கள் வைத்துக்கொள்ளும் பெயர்கள் பல பல படியாகக் காணப்படுகின்றன. பகவானுடைய திருநாமங்கள், ஆழ்வாராசார்யர்களின் திருநாமங்கள், தேவதாந்தரங்களின் பெயர்கள், மஹர்ஷிகளின் பெயர்கள், இதிஹாஸ புராண ப்ரஸித்தர்களான பல பக்த சிகாமணிகளின் பெயர்கள், க்ஷேத்ரங்கள் தீர்த்தங்கள் ரத்நங்கள் முதலியவற்றின் பெயர்கள், ஆக இவையெல்லாம் ஜாதிகளுக்கேற்பப் பெயராக வழங்கப்பட்டு வருவதை நாம் காணநின்றோம். சில ஜாதிகளில் வழங்கும் பெயர்களுக்கு அர்த்தம் இன்னதென்றே நம்மால் கண்டுகொள்ள முடியாமலிருக்கிறது. ஆனால் அதைப்பற்றின விசாரம் இப்போது அப்ரஸக்தம். ப்ராஹ்மண ஜாதிக்குள் ஸ்ரீ வைஷ்ணவ வகுப்பில் வழங்கும் திருநாமங்களைப்பற்றி ஈண்டுச் சிறிது விமர்சிக்க விரும்புகிறோம்.

பெரியாழ்வார் தமது திவ்ய ப்ரபந்தத்தில் நாமகரண விஷயமாக ஒரு பதிகம் பாடியுள்ளார். அது: பெரியாழ்வார் திருமொழி நாலாம்பத்தில் ஆறும் திருமொழி—“காசுங் கறையுடைக் கூறைக்கு” மென்பது. ‘சீரணிமால் திருநாமமே யிடத் தேற்றிய வீரணி தொல்புகழ் விட்டு சித்தன்’ என்று ஆழ்வார் அத்திருமொழியைத் தலைக்கட்டியுள்ளமை யுணர்க. எம்பெருமானது திருநாமங்களையே மக்களுக்கு இடவேணுமென்று பெரியாழ்வார் உபதேசித்தருளினபடியே, நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் அன்றுமுதல் இன்றறுதியாகப் பெயரிடப்பட்டு வருகின்றமை மிகவும் பாராட்டத்தக்கது.

ஒவ்வொரு பெயரோடும் ஐயங்கார் அல்லது ஆசார்யர் என்பது கூட்டி வழங்கப்பட்டு வருகின்றது. மாத்வ ஸம்ப்ரதாயஸ்தர்களின் பெயர்களில் ‘ஆசார்’ என்று கூட்டப்படுகின்றது. ஸ்ரீ வைஷ்ணவர்களின் பெயர்களில் ‘ஆசார்யர்’ என்று கூட்டப்படுகின்றது. ரங்காசார், ராகவாசார், ஸ்ரீநிவாஸாசார் என்று நாம் ஸ்ரீ வைஷ்ணவர்களையும் வழங்கி வந்தாலும், இது கொச்சையான வ்யவஹாரமென்றும், எழுதும்போது ரங்காசார்யர் ராகவாசார்யர் என்றே நியமேந எழுதப்பட்டு வருவதால், ஆசார்யர் என்பது ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அஸாதாரணமென்றும் பெரியார் கூறுவர். மாத்வர்கள் ‘ஆசார்’ என்றாலும் அதுவும் ஆசார்ய பதத்தின் விகாரமேயாகும். அவர்கள் கையெழுத்திடும்போது‘......... ஆசார்ய என்றே இடக் காண்கிறோம். இது நிற்க:

ஸ்மார்த்தர்களை ஐயர் என்றும், ஸ்ரீ வைஷ்ணவர்களை ஐயங்கார் என்றும் வழங்கி வருகிறோம். இது ஒரு நெடுவாசியாகவே நிலவி வருகின்றது. ‘ஐயங்கார் என்கிற வ்யவஹாரம் எப்போது உண்டாயிற்று? அதற்கு என்ன பொருள்?’ என்று சில விசாரங்கள் ஸமீப காலத்தில் சில மஹான்களின் கோஷ்டியில் நிகழ்ந்தன. திருவரங்கத்தமுதனாருடைய திருக்குமாரர் அல்லது திருப்பேரனார் [அஷ்டப் பிரபந்த கர்த்தா] பிள்ளைப் பெருமாளையங்கார் என்று ப்ரஸித்தி பெற்றுள்ளார். இவருடைய காலம் இற்றைக்கு ஏறக்குறைய 800 வருஷங்கட்கு

மேலிருக்கும். அப்போதே ஐயங்கா ரென்கிற வ்யபதேச மிருந்துவந்ததென்று அறி யக்கிடக்கின்றது. நாளைக்கும் ' ஐயங்கார் ப்ரபந்தம் ' என்றே அஷ்ட ப்ரபந்தங்களை வழங்கி வருகின்றார்கள். ஆகவே ஐயங்கார் என்கிற வ்யபதேசம் எம்பெருமானார் காலத்திலேயே இருந்ததென்று கூறலாம். பல கல்வெட்டுச் சாஸநங்களிலும் க்ருஷ்ணையங்கார் ராமையங்கார் இத்யாதி நாமங்கள் காணப்படுகின்றன.

இக்காலத்திற் போலவே முற்காலத்திலும் ஸ்ரீ வைஷ்ணவாசார்யர்கள் தெலுங்கு தேசங்களில் பெரும்பாலும் சிஷ்யாநுக்ரஹார்த்தமாக ஸஞ்சாரம் செய்து வந்ததுண்டு. தெலுங்கர்கள் ஆசார்யர்களை ' அய்யகாரு ' என்று சிறப்பித்து வழங்கு வதை இன்றைக்குங் காணலாம். இப்படியே ஆசார்ய பத்நிகளை அம்மகாரு என வழங்குவர். அதிலிருந்தே அய்யங்கார் அம்மங்கார் என்கிற தமிழ் வ்யவஹாரங்கள் நிகழ்ந்தன வென்பது அடியேனது அபிப்ராயம். ' ஆர்யர் ' என்பது ஐயர் அல்லது அய்யர் என்று திரிந்ததெனக் கொள்ளலாம். ஐயங்கார் என்பது சுத்தமான தமிழ்ச் சொல்லன்று. இதற்கு மூலமாக ஒரு ஸம்ஸ்க்ருதச் சொல்லையும் ஊஹிக்க முடிய வில்லை. 'ஆர்யவர:' என்று பொருள்கொண்ட ' அய்யகாரு ' என்கிற தெலுங்குச் சொல்லே நாளடைவில் ஐயங்கா ராயிற்றென்று கொள்வதில் அநௌசித்யமோ குற்றங் குறையோ ஒன்றுமில்லை. " எப்பொருளைச் சொலி னெவ்வா றுயர்ந் தோர், செப்பின ரப்படி செப்புதல் மரபே " என்பது நன்னூலாதலால், அதன்படி தொன்றுதொட்டு ஸ்ரீ வைஷ்ணவர்சார்யர்களை ஐயங்காரென்று வழங்கி வருகின்றார் கள் போலும். ஐயங்கார் என்கிற இந்த வ்யபதேசம் அவ்வளவு கௌரவப்பட்டதன்று என்றும், ஆசார்ய ரென்கிற வ்யபதேசமே கௌரவ முற்றதென்றும் இக்காலத்தில் சிலருடைய அபிப்ராயமாகக் காண்கிறது. இது கொண்டே சிலர், கீழ் நாட்களில் ஐயங்காரென்று கையெழுத்திட்டு வந்து பிற்காலத்தில் அதை மாற்றி, ஆசார்யர் என்று கையெழுத்திட்டு வருவதாகவும் நிரூபிக்கப்படுகிறது. நாமும் இதை அநுப வத்தில் கண்டிருக்கிறோம். ஆனால் ஐயங்கா ரென்பதில் கௌரவக் குறைவென்று நினைக்கத் தகுதியில்லை.

' அதிக வைதிகர்களா யுள்ளவர்கள் ஆசார்யர் என்பதிலே ஊன்றுகிறார்கள் ; லௌகிகர்களா யுள்ளவர்கள் ஐயங்கா ரென்பதிலே ஊன்றுகிறார்கள் ' என்று சிலர் கருதினார்கள். இங்ஙனே வரையிட்டுக் கூறவேண்டிய அவசியமு மில்லை. சோழ நாட்டிலும் பாண்டிய நாட்டிலும் ஐயங்கா ரென்கிற வ்யபதேசம் அதிகமாகக் காண் கிறது. தொண்டை நாட்டில் [காஞ்சீபுர ப்ராந்தங்களில்] பெரும்பான்மை ஆசார்ய ரென்கிற வ்யபதேசமும் சிறுபான்மை ஐயங்கா ரென்கிற வ்யபதேசமும் கண்டா லும், இதில் பேதபுத்தி யிருப்பதாகத் தெரியவில்லை. காஞ்சீபுரத்தில் தாதாசார்ய வம்ஶஸ்தர்கள் தங்கள் கூடஸ்தரை ஐயங்காரென்றே நாளைக்கும் வ்யவஹரித்து வருவது ஸர்வ ஸம்ப்ரதிபந்நம். 'ஐயங்கார் குளம்' என்றே ஓர் ஊர் ப்ரதிஷ்டித மாகி விளங்குகின்றது.

சில பெயர்களுக்கு ஐயங்கா ரென்பதே பொருத்தமாகக் கூடுகின்றது. பார்த்தஸாரதி, ராமஸ்வாமி, க்ருஷ்ணஸ்வாமி, சிந்தாமணி, நாதமுநி என்றிங்ஙனே பெயர்களிட்டால், இவற்றோடு ஐயங்கா ரென்பது நன்கு பொருந்துகின்றதேயன்றி ஆசார்யரென்பது அவ்வளவு பொருந்தவில்லை, அன்றியும் : ஸாமி, துரைஸாமி, சின்னஸாமி, முத்துஸாமி, குட்டி, பையாகுட்டி, துரை, அய்யாதுரை, அப்பாதுரை, செல்லக்கண்ணு, செல்வமணி என்றிப்படிப்பட்ட செல்வப் பெயர்கள் நேற்று இன் றல்ல ; நெடுநாளாகவே ஏற்பட்டிருக்கின்றன. இப் பெயரால் இளமையில் வழங்கப்பெற்று வந்தவர்கள் மூத்தவாறே கௌரவித்து அழைக்கப்பட நேரும்போது இப்பெயர்களோடு ஐயங்கா ரென்கிற பதமே நியமேந பொருந்துகின்றது. இப்

பெயர்கள் ஶர்ம நாமங்க ளல்லவாயினும் ஸர்வ ஸம்ப்ரதிபந்நங்களான வ்யாவ ஹாரிக நாமங்களே யாதலால், இப்பெயர்களைக் கொண்டவர்களுக்கு ஐயங்காரென்ற வ்யபதேசம் அவர்ஜநீயமாகிற தென்பதே இங்கு விவக்ஷிதம். ஶர்ம நாமங் களிலுங்கூட சிலவற்றில் ஐயங்காரென்பது அவர்ஜநீயமாகிற தென்பதைக் கீழே நிரூபித்தோம்.

ரங்க, ராகவ, ராமாநுஜ, வரத, ஸ்ரீநிவாஸ, கோவிந்த, கோபால, ஸுதர்சந, சக்ரவர்த்தி இத்யாதி நாமங்களோடு ஆசார்யர் என்பதும் ஐயங்கார் என்பதும் அவிசேஷேண நன்கு பொருந்தக்கூடியவை. ஒரு நாமத்திற்கே இவ்விரண்டு வகை யான வழக்கங்களும் வ்யக்தி பேதேந உலகில் பரவியிருக்கிறபடியால், 'ஒருவர் ராகவாசார்யர் என வழங்கப்படுவானேன்! ஒருவர் ராகவையங்கார் என வழங்கப் படுவானேன்!' என்பது போன்ற கேள்விகட்கு ஸமாதாநம் துர்லபமேயாகும். 'அவரவர்களுடைய பரம்பரை வழக்கம்' என்னலாமென்று பார்த்தாலோ, அதுவும் சொல்ல இயலாது. 'அநந்தாசார்யர்' என்றே ப்ரஸித்தராயிருந்த ஒருவருடைய குமாரர் ஸ்ரீநிவாஸன் என்று பெயரிடப்பெற்ருல், இவர் தம்மை ஸ்ரீநிவாஸாசார்யர் என்று ப்ரஸித்தப்படுத்திக்கொள்ள ஔசித்ய மிருக்கச் செய்தேயும், ஸ்ரீநிவாஸய்யங் கார் என்று ப்ரஸித்தி பெற்றுவரக் காணுகின்றோம். ஆகவே பரம்பரா ப்ரயுக்தமு மன்று என்ன வேண்டிற்று.

ஆக இவ்வளவால்: ஐயங்கார் ஆசார்யர் என்ற இரண்டு வ்யபதேசங்களும் துல்ய யோகக்ஷேமங்களே என்கிற அடியேனது அபிப்ராயத்தை விவரித்துக்கொண் டேன். அய்யங்கார்யঃ என்று ஸம்ஸ்க்ருத பதமு மாக்கியிருக்கின்றார்கள். மைஸூரில் தர்மாதிகாரி சக்ரவர்த்தியையங்கார் என்பவர் பல நூற்றுக்கணக்கான புஸ்தகங் களை அச்சிட்டு வெளியிட்டவர். அப்புத்தகங்கள் தோறும் 'चक्रवर्त्यय्यङ्गार्येण प्रकाशितम्—'சக்ரவர்த்யய்யங்கார்யேண ப்ரகாஶிதம்' என்றிருப்பது ப்ரஸித்தம். அய்யங்கார்யঃ என்கிற ஸம்ஸ்க்ருத பதம் அறுபது வருஷங்களுக்கு முற்பட்ட புஸ்த கங்களில் காண்பரிது. ஆயினும் நவநாகரிகத்தில் புகுந்தது ஆதரிக்கத்தக்கதே. சில திருத்தங்கள் வேணுமென்கிற கருத்தை இனி வெளியிடுகின்றேன். விவேகிகள் விமர்சித்துக் கைக்கொள்ளவேணும்.

வெங்கடாசார்யர் என்கிற திருநாமம் ஸுப்ரஸித்தமானது. இதில் முதலெழுத் தைப்பற்றின ஆராய்ச்சி அவசியமானது. வெங்கடாசார்யர் என்பதே உண்மையான சொல்வடிவம் என்பதில் யார்க்கும் விவாத மிராது. க்ரந்த லிபியிலாவது தேவநாகர லிபியிலாவது இப்பெயரை எழுதும்போது விசாரத்திற்கு இடம் ஒன்றுமில்லை. தமிழில் எழுதும்போதும் வாயால் உச்சரிக்கும்போதும் வே என்கிற நெட்டெழுத்து காண்பதில்லை. நன்கு வாசித்த வித்வான்களா யிருந்தாலும் வெங்கட தாஸன், வெங் கடாசாரியர் என்றே கையெழுத்திடவும் வ்யவஹரிக்கவும் காண்கின்றோம். வேகார மானது தமிழில் குறிலாகிவிடும் என்று நினைக்கின்றார்கள்போலும். ஆழ்வா ரருளிச் செயல்களில் வேங்கடமென்று பன்முறையும் வரக் காண்கின்றோம். வெங்கட மென்று எங்கும் கிடையாது. ஆனால் திருமங்கையாழ்வாருடைய திருவாக்கில் ஓரிடத்தில் மாத்திரம் வெங்கடம் (பெரியதிருமொழி 6—3—8.) என வருகின்றது. மருகாந்தாரமென்று அதற்குப் பொருளேயல்லது திருமலையப்பனுடைய திருப் பதிக்கு அது வாசகமன்று. ஆகவே வெங்கடாசார்ய ரென்கிற வ்யவஹாரம் அநா லோசித ரமணீயமாகவே நிகழ்ந்து வருகின்றதென்று கொள்ளக் கிடக்கின்றது. திரு வேங்கடாசாரியார் என்கிற பெயரையுடையவர்கள் மாத்ரம் வேகாரத்தை வெகர மாக்கக் காண்பதில்லை. 'திரு சேர்ந்தால் நெடிலாய்விடும்; திரு இல்லையானல் குறி லாய்விடும்' என்று கொண்டிருக்கின்றார்கள் போலும்.

இனி மற்றொரு திருநாமத்தைப்பற்றின விசாரம் காண்மின். வேங்கட மென்பது வடசொல்; இதன் பொருளான திருமலையையே பலர் பெயரிடப்பெறுகின்றார்கள். அவர்கள் திருமலாசாரியர் என்று கையெழுத்திடுகிறார்கள். திருமலையையங்கார் என்று பலர் கையெழுத்திடுகின்றார்கள். அதில் விமர்சிக்கவேண்டிய தொன்றுமில்லை. திருமலை யென்பதோடு ஆசாரியர் என்பதைச் சேர்த்தால் திருமலையாசாரியர் என்றாகுமே யல்லது, திருமலாசாரிய ரென்று ஸந்தியாவதற்கு வழியில்லை. பலர் க்ரந்த லிபியிலும் தேவநாகரி லிபியிலுங்கூட 'திருமலாசார்ய:' என்றே கையெழுத்திடுகிறார்கள். வடமொழியில் ஸ்ரீசைலாசார்ய: என்று கையெழுத்திடலாம். திருமலை யென்கிற பெயர்வடிவம் மாறாமலிருக்கவேணுமென்று கருத்தாகில் திருமலையாசார்ய: என்றே ஆகவேணும். இப்பெயர்பூண்ட ஒரு மஹநீயருடைய தனியனில் "श्रीमलाचार्यमीडे—ஸ்ரீ மலாசார்ய மீடே" என்றிருந்ததைக் கண்ட ஒரு உத்தராதி பண்டிதர் இதற்கு என்ன பொருளென்று பலரைக் கேட்டுத் தெளியாமல் ஹிந்தி பாஷைப் பத்ரிகை யொன்றில் ஸந்தேஹ லேகமென்று வெளியிட்டிருந்தார். இது த்ராவிட வ்யபதேஶ மென்றும். இதற்கு இன்னது பொருள் என்றும் அடியேன் ஸமாதாந மெழுதி யனுப்பினேனாயினும், அதிமுகஸ்துஷ்டி யென்பது இல்லாமையால் இதைப்பற்றி இங்கெழுத நேர்ந்தது.

நெடுநாளாக எழுதிவருகின்ற ஒரு பெயர் வடிவத்தை இன்று மாற்றிக்கொள்ளவேணு மென்று விஜ்ஞாபிப்பது மிகப்பெரிய ஸாஹஸமேயாகும். தமிழ் வழக்கங்களில் திருமலாசாரியர் என்றே வைத்துக்கொண்டாலும், ஸம்ஸ்க்ருத வ்யவஹாரங்களிலாவது விப்ரதிபத்திக்கு இடமில்லாதபடி யெழுதுவது நலமென்று தோன்றுகிறது.

மற்றொரு விஷயம். தகப்பனாருடைய திருநாமத்தையே குமாரருக்கும் இடலாகாதென்று ஒரு சிஷ்ட ஸம்ப்ரதாயம் இருப்பதாகத் தெரியவருகின்றது. திருவாழ்மார்பன் ஐயங்காரென்று திருத்தகப்பனாரது திருநாமம். ஸ்ரீநிவாஸாசார்ய ரென்று அவரது குமாரர்க்குத் திருநாமம். வேங்கட மையங்காரென்று அவருடைய குமாரருக்குத் திருநாமம். மூவர்க்கும் ஸ்ரீநிவாஸ சர்மந் என்று ஶர்ம நாமம் ஒன்றே யென்று தெரிகின்றது. இது சாஸ்த்ர ஸம்மதமா! என்று சிலர் விசாரம் தொடங்கினார்கள். இதில் அடியேனுக்கு யாதொரு அநுபபத்தியும் தோன்றவில்லை. இதைப்பற்றின சாஸ்த்ர நிபந்தனை ஏதாவது இருக்குமானால் அறிஞர் அறிவிக்கவேணும். தகப்பனாருடைய பெயர் வேங்கடாசார்ய ராகவும் குமாரருடைய பெயர் திருவேங்கடாசார்ய ராகவும் பல விடங்களில் காண்கிறது. திரு என்பதனால் நாமபேத முண்டாய்விடு மென்று நினைக்க இடமுளதோ! அவிகீத சிஷ்ட பரம்பரையாக நிகழு மிதனில் விசாரம் அவ்வளவு அவஶ்யமுமன்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீரங்ககோபராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகாய நம:

திவ்ய ப்ரபந்தத்தில் திருமடல்

[ஒரகடம் ஸ்ரீ. உப. கோ. ஸுதர்ஸநாசார்யர், (ரிடயர்ட்) தமிழ்ப் பண்டிதர்,
டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை]

[ஸம்புடம் 2 : ஸஞ்சிகை 9 : பக்கம் 329-ன் தொடர்ச்சி]

சிறியதிருமடல் பெரிய திருமடல் எனும் இருமடற் ப்ரபந்தங்களிற் கூறப்பட்டுள்ள விஷயங்களின் சுருக்கம்

பாரோர் சொல்லும் புருஷார்த்தங்கள் மூன்று. அவை தர்மம், அர்த்தம், காமம் என்பன. 'பொருளா லிரண்டு பெறலாகும்' என்றபடி அர்த்தத்தை அடைந்தவர் மற்றிரண்டையும் அடைந்தவ ராவர். இம்மூன்றைத் தவிர வேறு மோக்ஷம் என்று ஒரு புருஷார்த்தம் உண்டென்பது உலகத்தார் சொல்லும் சொல். அது உண்டென்று ஒத்துக்கொண்டாலும், கைப்புகுந்த அர்ச்சாவதார அநுபவத்தை விட்டுத் துர்லபமான மோக்ஷத்தைப் பற்றுவதா? [தலைவியின் தன்மையை அடைந்து] தோழிகாள்! நான் குழலை வாரி வகிர்ந்து, கஞ்சுகம் தரித்து, மேகலை யணிந்து, கண்ணுக்கு அஞ்ஜநமிட்டுப் பந்தடித்துக் கொண்டிருந்தேன். அவ்வளவில், செங்கண்மால் என்னொருவன் செழுந்தெருவே குடக்கூத்தாடிச் சென்றனன். தோழியர் திரளாய் வந்து அவனைப் பார்ப்பதற்கு என்னை யிட்டுச் சென்றனர். அவனை நோக்கினேன். என் செய்வேன்! அவ்வளவில், அறிவு மாமை வளை நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு எல்லாம் இழந்தேன். மயக்கம் கொண்டேன். அம்மனைமார் புழுதிக் காப்பிட்டனர். அவ்வளவிலும் நோய் தீர்ந்தே னல்லேன். குறி பார்க்க வேண்டுமென்று மூதறியு மம்மனைமார் கூறினர். குறி சொல்லும் கட்டுவிச்சி கொணரப்பட்டாள். சுளகில் சில நெல்லை யெறிந்து அவள் நெற்குறி பார்த்தாள்; விதிர்விதிர்த்தாள்; மெய் சிலிர்த்தாள். பிறகு தெளிந்து கூறத் தொடங்கினாள்.

" வேற்கண்ணீர்! ஆயிரம் பேருடையான், வையமளந்த மாயவன், இலங்கை கட்டழித்தோன், கல்லெடுத்துக் கல்மாரி காத்தவன், கடல் கடைந் தமுதங் கொண்டோன், காளியன் பொய்கை கலங்கப் பாய்ந்திட் டவன் நீண்முடி ஐந்திலும் நின்று நடஞ் செய்தோன், வெண்ணெ யுண்ட கள்வன், அரியுரு வாகி அரியை அழித்தோன், ஆனையின் துயரந் தீரப் புள்ளூர்ந்து சென்று நின்று ஆழி தொட்டோன், ஓங்கி உலகளந்த

உத்தமன் — அவனாலே வந்த நோயிது; சிராயின தெய்வ நன்னோயிது. இந்நோய்க்கு அவனே மருந்து'' என உரைத்தாள். நானும் அவன் திருமேனி கண்டதுவே காரணமாய்ப் பிதற்றுகின்றேன். வாடையைக் கண்டு நலிகின்றேன். 'என் நெஞ்சமே! நல்லை நல்லை. நீயே மணி வண்ணன்பாற் சென்று, திருத்துழாய்த் தாரைத் தருவனோ தாரானோ? என்று இரண்டில் ஒன்று கேட்டுவா' என விடுத்தேன். அது என் செய்தது? 'வாரிருக்கு முலை மலர் மடந்தையுறை மார்பிலே பெரிய தோளிலே மயங்கி இன்புற முயங்கி என்னையு மறந்து தன்னையு மறந்தது.' 'நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை' எனும் மொழியையும், (பாணினி மனத்தை அலிப்பாலென்று ஓதியதையும்) நம்பினேன். அதுவும் எனக்கு உதவ வில்லை. ஊரவர் அலர் தூற்றக் குறையில்லை. என் கண்களும் உறங்கில. ஆவியோ அரக்கு மெழுகு மொக்க உருகும். வாயோ வெருவும். மடலூர்ந்தல்லது தரியேன். ஊராரிகழினும் (மடல்) ஊராதொழியேன். * வாசவதத்தை என்னும் பெண்மணி சிறையில் அடைபட்ட வத்ஸ நாட்டரசனான உதயனனுடைய † தோளும் தோள் மாலையுமான அழகை ஆசைப்பட்டுத் தலைக்காவலனை தன் கணவனுடன் செல்லவில்லையா? சக்ரவர்த்தியின் ஆஜ்ஞையால், தலைச்சுமை யென்று திருவபிஷேகத்தை யிழந்து, சுற்றமெல்லாம் பின்தொடரத் தொல்கான மடைந்த இராமன்பின், பேய்த்தேர் தோன்ற, சுழல்கால் வீசப் பேயுலவும் கானகத்தில் வெயிலின் வெம்மையால் வறுத்தெடுத்து வித்தியது போன்ற வெம்பரலில் பஞ்சடியால் வைதேகி என்று சொல்லப்படும் அன்ன நடைய அணங்கு கூடச் செல்லவில்லையா? வேகவதி யென்னும் கன்னி, போரில் தன் காதலனைக் காணாது, தன் தமையன் விலக்கவும், அவனையும் மதியாது காளைபோன்ற தன் கணவனைப் புணரவில்லையா? உலூபி யென்பாள், தன்னிகரொன்றில்லாத தன் கணவன் தனஞ்சயன் கங்கையில் நீராடச் செல்லுங்கால், நாணம் மடம் அச்சம் என்று இவைகளை நீக்கி அவனை ஆலிங்கநம் செய்துகொண்டு தன் உலகத்துக்கு அழைத்துச் செல்லவில்லையா? பாணாஸுரனுடைய பெண்ணான உஷை என்பாள், ஸ்ரீ க்ருஷ்ணனுடைய பௌத்ரனை அநிருத்தனைத் தன் தவ வலியால் சித்ரலேகை மூலமாய்ப் படுக்கையோடு எடுத்துக்கொண்டு போய்த் தன் பக்கல் வைத்துக்கொள்ள, பின்னர் அவ்வநிருத்தனோடு பேரின்பத்தை அநுபவிக்கவில்லையா? பேரொளி வாய்ந்த நிலாப் போல் விளங்குகின்ற அழகிய முறுவலையுடைய மலையரையன் பொற்பாவையான உமை யென்பாள், தன் பொன்னுடம்பும் புலன்கள்

* இவ்வாஸவதத்தையின் வரலாற்றை ப்ருஹத் கதை எனும் வட நூலிலும் பெருங்கதை எனும் தமிழ் நூலிலும் பரக்கக் காணலாம்.

† உதயனன் என்பான், அர்ஜுனன் புதல்வனான அபிமன்யு தொடங்கி இருபத்தைந்தாம் தலைமுறையிற் பிறந்த பெருந்தகையரசன் என்பது ஆராய்ச்சியாளரது கொள்கை.

ஐந்தும் மெலிந்து வாட, சடாமகுடந் தரித்து, கடுந்தவத்தைச் செய்து, தன் அழித்தல் தொழிலுக்கேற்ப ஆயிரம் தோள்களையும் கொண்டு அஷ்ட திக்குக்களிலும் அக்கி ஜ்வாலை வீசச் சுழன்று கூத்தாட, மன்னு குலவரையும் மாருதமும் தாரகையும் தன்னுடன் கூடச் சுழன்றுவர, மூவிலைச் சூலாயுதத்தை ஏந்திய வெண்ணீறணிந்த ருத்ரமூர்த்தியை ஸம்ஶ்லேஷிக்கவில்லையா? பன்னி யுரைக்கப் புகில் பாரதமாகும். என் நோயைச் சற்றுக் கேளுங்கள். மறையோர் வாழும் நறையூரில் மாமலை போன்ற பொற்கவாடங் கடந்து திருமாமகளுடன் விளங்கும் கரு மாணிக்க மலைபோன்ற செங்கண்மாலை என் கண் களிப்ப நோக்கினேன். நோக்குதலும் அரவிந்தக்காடு பூத்த அவயவ ஸௌந்தர்ய அலைகளால் அலைப்புண்டேன். என் நெஞ்சமும் அறிவும் வளையும் மேகலையும் இழந்தேன். நாழியோ ஊழியிற் பெரிதாயுள்ளது. ஒண்சுடர் துயின்றது. ஆழியும் புலம்புகிறது அன்றிலும் உறங்கிலது அதன் குரலோ எனக்கு ஈர்வாளாம். தென்றலோ தீயினிற் கொடிதாயுள்ளது. "ஶீதோ பவ ஹநூமத:" [தீக்குளிர] வென்று பிராட்டி திருவடிக் கருளிய வரம் போல், நிலா தன் தன்மை மாறிச் சுடுவது யாரிட்ட சாபமோ? பனி நஞ்ச மாருதமே! எம்மதாவி பனிப்பியல்வே?

நான் இவற்றைப் பரிஹரிக்க என்ன உபாயத்தை அநுஷ்டிப்பேன்! இந்நோய்க்கு மருந்தறிவீர் இல்லையோ? ஆம்; அறிந்தேன். இந்நோய்க்கு மடலே மருந்து. ஆதலின் அவன் தன் காரார் திருமேனி காணுமளவும் ஊர்கள்தோறும் ஓடித் திரிகிறேன். விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வேங்கட வெற்பிற் சென்று என் வடிவைக் காட்டி, 'இதுவோ உபயவிபூதி நாயகத்வம்?' என்கிறேன். முதலாழ்வார் மூவருக் கருளிய தீவடிவின் சிவனயனே போல்வார் மன்னு திருக்கோவலூர் சென்று 'அவன் ஆஶ்ரிதையான என்னைக் கைவிட்டபடி பாருங்கோள்' என்று என் வடிவைக் காட்டுகிறேன். ஆஶ்ரிதன் (மழிசைக் கிறைவன்) 'போ' என்றதும் போய், 'கிட' என்றதும் கால்மாடு தலைமாடாகக் கிடந்த யதோக்தகாரியின் வெஃகாவில் சென்று 'நான் சொன்னபடி செய்தீரில்லையே!' என்று அவனது (அடியார்க்கெளியன் எனும்) பிருதை அழிக்கப் பார்க்கிறேன். இன்னும் இவைபோன்ற சொல்லிச் சொல்லாத ஊரெல்லாம் புகக் கடவேன். அவன் புக்கவிடம் புக்கு அவன் குணங்களையெல்லாம் அழிக்கக் கடவேன். திருநறையூர் மணிமாடக் கோயில் மணவாளனிடம் சென்று அவனைக் கைதொழுது என் நிலைமையெல்லாம் அறிவிப்பேன். அவன் என் விண்ணப்பத்தைக் கேட்டருளித் தன் அருளும் ஆகமும் (திருமேனியையும்) தந்தால் ஆயிற்று. தாரானேல்: ரஸிகத்வம் விலை செல்லுகிற மின்னிடையார் சேரியிலும், ஆந்ருஶம்ஸ்யம் விலை செல்லுகிற வேதியர்கள் வாழ்விடத்தும், குணம் விலை செல்லுமிடமான தன்னடியார் மாட்டும், தன் வீரப்பாடும் ஆபிஜாத்யமும் ஜகத்ரக்ஷணமும்

விலே பெறும் இடங்களாகிய வேல் வேந்தர் கூட்டகத்தும் நாட்டகத்தும் சென்று என் வடிவைக் காட்டி, 'அவன் செய்தபடி இவை' என்று அறிவிப்பேன். எவை யென்னில்: அன்றுதான் இடைச்சேரியில் வெண்ணெய் திருடி வயிறார உண்டுகொண்டிருக்க, ஆய்ச்சியர் கையில் கையும் வெண்ணெயுமாய் அகப்பட, அவர்களால் கட்டுண்டு உரலினோ டிணைந்திருந்து ஏங்கிய எளிவையும், இந்திரனுக்கென்று ஆயர்களெடுத்த எழில் விழவில் கோவலரிட்ட அட்டுக்குவியையும் சோற்றுப் பருப்பதத்தையும் தயிர் வாவியையும் நெய்யளற்றையும் பூதாகாரங்கொண்டு பொட்டத் துற்றதையும், தன்னை நூற்றுவர் இகழ்ந்துரைப்பப் பஞ்சவர் தூதனாய்ப் பாரதம் கை செய்ததையும், வேறோர் ஆளில்லாமல் தானே பறையடித்துக்கொண்டு 'எதற்காக இவன் ஆடுகின்றான்?' என்று மங்கையர் மகிழக் கூத்தாடும் குடக்கூத்தாட்டத்தையும், இராவணன் அருமைத் தங்கை —இலங்கைச் செல்வி—அரக்கர் குலப்பாவை—சூர்ப்பணகை — காமத்தீவ்ருத்தியடைய, அதனால் உடல் வெளுத்துத் தன்னை யடைந்தாலல்லது தரியாத நிலையில் அவசையாய்த் தன்னை நயந்திரக்க, அத்தைந்ய நிலையைக் கண்டு தான் ஸ்நேஹம் செய்யவேண்டியிருக்க, அது செய்யாததோடு மூக்கரிந்த வீரத்தையும், தனக்கு நிகர் ஒருவரில்லாத தாடகையை ஒரு பார்ப்பான் சொல்லால் தென்னுலகம் அனுப்பிய வீரச்செயலையும் சொல்லி நடுத்தெருவே செல்வேன். அன்றியும்: ஆனையான ஏகஜாதித்வம் பொருந்தி யிருக்கச்செய்தே, அவன் ஒரானையின் கொம்பைப் பறித்துக் கொன்று, ஒரானையை முதலை வாயினின்றும் ரக்ஷித்கான்; மிகுந்த பக்ஷபாதி. கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாய கண்ணன். தண்ணந்துழாய்த் தாரான். 'கையிலே ப்ரம்ஹாஸ்த்ரம் இருக்கச்செய்தே எதிரிகள் கையிலே எளிவரவு படுவாரைப் போலே, என் கையிலே மடலிருக்க அபிமதம் கிடையாதிருக்க வேணுமோ?' இவனது குணகதநத்துக்கு ஸஹஸ்ரநாமம்போல், குணஹாநிக்கும் ஸஹஸ்ரநாமம் பண்ணிக்கொண்டு அவ்வாயிர நாமங்களையும் பிதற்றிக்கொண்டு, ஊரார் என்னைக் கொண்டாடாதே அலர் தூற்றினாராகிலும் நான் உலகறிய மடலூருகை தவிரேன்.

இது, மடற் ப்ரபந்தங்களில் திருமங்கைமன்னன் அருளிச்செய்திருக்கிறபடி. இதனால்: சேதநன் ஸர்வேஸ்வரனை அநுபவிக்கத் தகுதியுள்ளவனென்பதும், அவனை அநுபவிக்கப் புகுங்கால் வரும் இடையூறுகளை எவ்வித ஸாஹஸ ப்ரவ்ருத்திகளையும் அநுஷ்டித்து இடையூறுகளை நீக்கி அநுபவிக்கவேணு மென்பதும், பகவதநுபவமே இதற்குப் பலமென்பதும் சொல்லப்பட்டன. குற்றங் களைந்து குணந்தெரிந்து கொண்டோதல், கற்றறிந்த மாந்தர் கடன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[3-ம் அங்கம்]

[ஸ்ரீ. உப. அன்பில் வி. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A B.L.,
அட்வோகேட், திருச்சி.]

[ஸம்புடம் 2, ஸஞ்சிகை 8, பக்கம் 290-ன் தொடர்ச்சி]

விவேகர் :—பரன் ஜீவனைப்போல் தோஷங்கள் இல்லாதவனென்றும், அகில தோஷங்களையும் தொலைப்பவனென்றும், ஸகல மங்கள குணாகரனென்றும் தெரிந்து, அத்யந்த ப்ரேமையோடு பரனைப் பஜிக்கத் தொடங்குகிறான். இங்கே உபய லிங்காதிகரணம் முதலியவை ஸூசிதம். 'பரத்வேந ஜுஷ்ட:' 'பரன் விஷயமான ப்ரேமையோடு கூடி' என்றும், 'பரமான நிரதிஶயமான ப்ரேமையோடு கூடி, என்றும் இரண்டு பொருள்கள் பர விஷய பரப்ரேமை; பரபக்தி.

"अभिन्नास्वादानाममृतलहरीणामिव धियां
विकल्पं विज्ञाता विधिपवनवैषम्यजनितम् ॥"

"भवभयकथारागे भग्ने गतागतचिन्तया
परमपुरुषप्रेप्सालाभे तदुद्धतबोधनात् ।
गुणगणभिदासंभेदाभ्यामुपस्कृतविग्रहे
क्षममिह परं विद्यावर्गे विमोहनिवर्तनम् ॥"

'கதாகத சிந்தயா' பூட்டைக் குண்டிகை [illegible] ஏறுவது இழிவதைச் சிந்தித்து. 'யதைதத்தேநவம் ச' 'கதாகதம் காலேகாலே லபதே' 'ஸாத்மநி யோ ரக்தோ விரக்தோऽஸாத்மநி'. மற்றதில் விராகமும், பரனிடம் ராகமும் முற்றிப் பல பக்தி வித்யைகளில் ஒன்றைக் கைப்பற்றுகிறான். பற்றின வித்யையை விடான்; அதிலேயே பூர்ண ரஸாநுபவத்தால் மற்றோர் வித்யையில் புகுரான். இங்கே குணோபஸம்ஹார பாதமெனும் மூன்றாம் பாதம் ஸூசிதம். பல ப்ரஹ்ம வித்யைகளில் ஒன்றைக் கைப்பற்றினால் போதும். எல்லாவற்றிற்கும் பலமொன்றே. 'விகல்போऽவிஶிஷ்டபலத்வாத்' என்னும் விகல்பாதிகரணம் ஸூசிக்கப்படுகிறது. அந்த அதிகரணத்தில் 'மோக்ஷமென்னும் பலம் ஒன்றே' என்று கூறப்பட்டது. இங்கே 'அபிந்நாஸ்வாதாநாம்' என்று எல்லா வித்யைகளிலும் ப்ரஹ்மாநுபவ ஸுக ரஸமும் ஒரே அளவு என்கிறார். 'ஹேஜநவஸூவஸீத்ருஶ விசேஷ' என்பது எல்லா வித்யாநிஷ்டருக்கும் பொது. வித்யை யென்பது அம்ருத லஹரிகள்; அலைக்கும் அம்ருத ப்ரவாஹ பரம்பரை. 'விதிபவந வைஷம்யஜநிதம் விகல்பம்' 'விதி' 'ப்ரஜாபதி 'ப்ரஹ்மா'. இவை ப்ரஜாபதி வித்யையை

ஸூசிக்கும். 'வாயுர்வாவ ஸம்வர்க:' என்று ஸம்வர்க்க வித்யை. 'பவந' என்பது அதை ஸூசிக்கிறது. 'விதி' என்பது வித்யைகளை விதிக்கும் வாக்யங்களையும் சொல்லும். 'நாநா ஶப்தாதிபேதாத்' என்று வித்யைகளின் பேதத்தை ஸாதிக்கும் அதிகரணமும் ஸூசிக்கப்படுகிறது. 'குணகணஸ்தாபனம் ...' மற்ற சாகைகளிலிருந்து எந்த குணங்களைச் சேர்த்து ஒரே வித்யையாகக் கொள்ளுகிறதென்று வித்யா ஸ்வரூபத்தைத் தீர்மானிக்கும் அதிகரணங்களும் பாதமும் ஸூசிதம். விக்ரஹம் ரூபம்; குணங்கள் வித்யையின் ரூபம் 'விதிபவந' விதி யென்பது பகவதாஜ்ஞை. அது பகவானுடைய நிஶ்வஸிதம். உள்ளே யிருந்து பகவதாஜ்ஞையான விதி மூச்சுக் காற்று சப்த ரூபமாக வெளிவருகிறது.

நாடகத்தில் கர்வ ஸந்தியில் நாடக பீஜத்திற்கு அபாய சங்கைகள் வருவதும், அதைத் தேடுவதும், கிட்டுகையில் ஸந்தோஷிப்பதுமாக இருக்கும். ஸுமதி சங்கைகள் பட்டுப் பயந்து, விவேகர் தைர்ய மூட்ட, அவளுக்கே தைர்யம் பிறந்து, விவேகருக்கு ஜயம் வந்து விட்டதென்று இரண்டு அழகிய ப்ராக்ருதப் பாட்டுகளைப் பாடுகிறாள். இங்கே உதாஹ்ருதி க்ரமம் எனும் கர்வ ஸந்தர்ப்பங்கள். ப்ரஸ்துதோத்கர்ஷத்தை வர்ணிப்பது உதாஹ்ருதி. நினைத்த ப்ரயோஜநம் கிட்டுவது க்ரமம். ப்ராபத்யாசையின் வ்ருத்தி, விஷ்ணுபக்தி யெனும் பதாகையின் வ்ருத்தி, இவ்விரண்டும் சேர்ந்து அபிவ்ருத்தமாகி மோக்ஷ கர்ப்பம் ஸபலமாகவேணும். மோக்ஷ ஸ்ரீ கர்ப்பத்தி லிருக்கிறது. கர்ப்பத்திலிருப்பது ஸ்ரவிக்காமல் விக்நங்களிலிருந்து ரக்ஷிக்கப்படுகிறது. முதற் பாட்டில் விஷ்ணுபக்தியின் இனிய ரஸோதயத்தில் விவேகன் கீர்த்தி பொன்னார் மேனியுடைய ஈஶ்வரன் ஆநந்த நர்த்தநம் பண்ணுகையில் அவர் சிரஸ்ஸில் உல்லோல கல்லோலமாக வெண்பிறையோடு நர்த்தநம் செய்யும் வெண்மையான் கங்கா ப்ரவாஹமாகக் கரைபுரண் டோடி ஸமுத்ர மளவும் சென்று, அங்குள்ள மலைகளிலிருக்கும் நாக கந்யகைகள் இனியப் பருகி ப்ரத்யக்ஷரமும் தேனொழுகும் பாட்டுகள் பாடி இன்புறுகிறார்கள் என்கிறாள். ப்ருந்தாவநத்தில் கண்ணன் வேணுகாந இனிப்பைப் பாம்புகளும் பருகித் தம் கடைவாயையே நக்கிச் சுவைத்தன என்ற அதிமாநுஷஸ்தவப் பாட்டை நினைக்கவேணும். 'லேலிஹ்யமாநா ...'. இரண்டாம் பாட்டில் பகவத் பக்தி வித்யைகளின் ஸ்வச்ச ஸ்வாது ஶீதள ஸூபக ப்ரவாஹங்களை நினைத்து இன்புற்றுப் பாடுகிறாள். முக்தி கைக்கு வந்ததுபோல் தான். ஆனால் மோஹாதிகள் அடியோடு தொலைந்து ஜீவன் முக்தனுய் விடுகிறானென்றில்லை யென்கிறாள். விவேகருக்கும் மோக்ஷம் ஸித்திப்பதைப் பற்றித் தைர்யமாகப் பேசுகிறார். ஸுமதி மறுபடியும் பயங்கொண்டு, சிசுக்கள் ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் சந்திரனைப் பிடிக்கக் கை நீட்டுவதைப் போல் இருக்கிற தென்கிறாள்.

விவேகர் :—நித்ய ஸூரி ஸேவ்யமான அந்தமில் பேரின்பப் பதத்தை யடைய ஸ்வயம் ஆசைப்பட்டு, முன் செய்த எல்லாத் தீவினை களுக்கும் ப்ராயச்சித்தமாக ஓர் உபாயத்தைக் கைப்பற்றி, இனிப் பாவம் செய்வதில்லை யென்று உறுதியும் கொண்டு, ஸஹஜ ஸுஹ்ருத் தான ஈஸ்வரனும் தன் க்ருபைக்கு லக்ஷ்யமாக இவனைக் கடாக்ஷித்து விட்டால் மோக்ஷம் பெறுவதில் தடையென்ன ?

ஸுமதி :—கலியன் பெரிய திருமொழி 11-வது பத்தில் கூறிய படி, 'இருபாடெரி கொள்ளியினுள் எறும்பேபோல்,' 'காற்றத்திடைப் பட்ட கலவர் மனம்போல்' 'வெள்ளத்திடைப் பட்ட நரியினம் போலே', 'பாம்போ டொரு கூரையிலே பயின்றாற்போல்', 'ஆற்றங்கரை வாழ்மரம் போல்' ஜீவிக்க மார்க்கமற்றுப் பய மோஹாதிகளால் ஆக்ராந்தனய்த் தவிக்கிறாள். ஸுமதிக்குக் கலியன் பெரிய திருமொழி மனப்பாடம்.

சாரீரகத்தின் நான்காம் பாதத்தில் முதலில் நிஷ்காமமான கர்மாநுஷ்டாநம் பக்தி ஞானத்திற்கு அங்கமென்றும், ஆத்ம ஞானம் கர்மத்திற்கு அங்கமென்ற நிரீஸ்வர மீமாம்ஸகர் கக்ஷி சரியல்ல வென்றும் நிரூபிக்கப்பட்டது. பிறகு பலத்தில் ஆசையில்லாமல் விஹித கர்மங்களின் அநுஷ்டாநத்தின் ஆவஸ்யகமும், அநாபத்தில் ஆஹாரசுத்தி நியமம், ஸமதமாதி குணங்கள், பாண்டித்யம், பால்யம், மௌநம், பாகவ தாபசாரத்தில் நடுக்கம் ஆகிய ஸாதநங்கள் கூறப்படுகின்றன. பாண்டித்யம் என்பது ஸ்ரவண மநநங்கள். பால்யம் என்பது, தன் பெருமையைத் தானே நினைக்காமலும் வெளியில் ஆடம்பரம் செய்யாமலும் குழந்தையைப்போல ஹ்ருதய சுத்தியுடனும் லிங்க வேற்றுமை விகல்ப மில்லாமலும் இருத்தல். ஸ்வமாஹாத்ம்யாநாவிஷ்காரம் பாவசுத்தி, இவையெல்லாம் சிசுவைப்போன்ற தன்மையானதால் பால்யம் என்று உபநிஷத்து கூறிற்று. ஸுமதி, என்ன குற்றம் நேர்ந்துவிடுமோ என்று, அச்சமுற்றிருப்பவன் எப்படி முக்தனவான் என்று பயத்தைக் காட்டவே, விவேகர் கொஞ்சம் வேடிக்கையாகப் பேசுகிறார்.

விவேகர்:—சுபமான பெண்ணே! நீ பாண்டித்யத்தை நன்கடைந்தும் சிசுத்தனத்தைக் கைப்பற்றி அச்சப்படுகிறாய். இனித் தேஹம் விழுந்த பிறகு, முக்தி பெறப்போகிறவனை இப்பொழுதே முக்தனயிருக்க வேண்டுமென்று எண்ணுகிறாயே. 'வாஜ்ஞீத்யம் நிவித்ய வால்யேந திஷ்டாஸேத்' என்று உபநிஷத் வாக்யம். அதில் கூறிய 'பால்யம்' என்பதன் பொருள் ஸூத்ரகாரர் 3-ம் அத்யாயம் 4-ம் பாதத்தில் கடைசி இரண்டு அதிகரணங்களுக்கு முன் அதிகரணத்தில் விளக்கினர். பாண்டித்யத்தைப் பூர்ணமாகப் பெற்றுப் பாலர்போல் இருக்க விரும்பவேணும். 'நீ பண்டிதையாயிருந்தும் குழந்தையைப்போல் பயப்படுகிறாயே' என்று பொருள்போலக் கொண்டு பரிஹாஸம் செய்கிறார். நாம் ஜீவன் முக்தியை ஒப்புவதில்லையே. தேஹம் விழுந்து முக்தனகும் வரையில், குற்றம் வாராமல் குற்றத்திற்குப் பயந்து நடப்பது நல்லது தானே என்கிறார்.

ஸுமதி:—எப்படித்தான் இத்தனை விக்நங்களுக்கும் தப்பிப் பகவானிடம் அநந்யபாவமாக மநஸ்ஸை நிறுத்தி த்யாநம் செய்வது ?

விவேகர் :—"प्रवृद्धमतिकश्मलप्रलयपावकप्रक्रियां
विमुच्य भगवत्कृपां वृजिनसिन्धुकुक्षिंभरीम् ।
कदध्वपरिवृत्तिभिर्यदिह कर्म निर्मीयते
तदस्तु लवणाकरे लवणसेतुराधित्सितः ॥"

அதற்கு ஒரு ஸுலபமான வழி யுண்டு. அதையே பிடித்துக் கொள்ளவேணும். எத்தனை புத்தி கஶ்மலங்க ளிருந்தாலும், பகவத் க்ருபை ப்ரளயாக்நியைப்போலக் கொளுத்திவிடும். நம் பாப ஸமுத்ரத்தை ஒரே உறிஞ்சாய் உறிஞ்சிவிடும். அதை விட்டுவிட்டு, நாமே நம் கர்மங்களால் முன் கர்மங்களைத் தொலைக்கலாமென்று நினைப்பது, உப்பு ஸமுத்ரத்தில் உப்பினால் அணைபோட முய்ல்வதுபோலாகும். உப்புக் கடலில் உப்பினால் எத்தனை கெட்டியான அணை போட்டாலும் உடனே அது கரைந்துபோம். உப்புக் கடலில் பகவான் க்ருபையால் ஓர் ஸேது கட்டி, அதில் அவர் திருவடிகளால் நடந்திருந்தால், அதைக் கண்ட மாத்ரத்தாலேயே ப்ரஹ்மஹத்யாதி மஹாபாபங்களும் உடனே தொலையும்.

ஸுமதி:—பகவத்க்ருபையை அவலம்பித்து நிவ்ருத்தி தர்மநிஷ்டரான பகவதுபாஸகருக்கும் விக்நங்கள் வருகின்றனவே ? அதெப்படி ?

இதற்குமேல் எல்லா ஸாதநங்களிலும் முக்யமாகவும் சிகரமாகவும் ஸாதந பாதத்தின் முடிவில் முக்தி பலாதிகரணத்தில் பாகவதாபசாரத்திற்கு மிகவும் பயந்து அதை அடியோடு விலக்கி ஜாக்ரதையாக வர்த்திக்கவேணும். பாகவதாபசாரம் மிகக் கொடியது. அது நிவ்ருத்தி தர்மத்தின் ப்ரபாவத்தையும் ஜயித்து மோக்ஷ ஸாதநமான பக்திக்கு விக்நங்களை விளைக்கும். வித்தியைத் தாமதிக்கச் செய்யும் என்பதைப் பல ஶ்லோகங்களால் விளக்குகிறார். புருஷார்த்தாதிகரணத்தோடு தொடங்கிய அங்கபாதம் புருஷார்த்த காஷ்டையை வற்புறுத்துவதோடு முடிந்தது.

"तिमिं किल तिमिंगिलो गिलति तद्गिलस्तं तथा
तमप्यथ च तद्गिलस्तदिह पश्य कर्मक्रमे ।
समस्तवृजिनोदधिग्रसनडम्भकुंभोद्भवं
निवृत्तिमपि धर्ममस्यनघतत्त्वविन्निग्रहः ॥"

'[illegible]' 'பாபம் ப்ரஜ்ஞாம் நாஶயதி:'. குற்றமென்பது புண்யங்களை விழுக்கும். பெரிய மீன் சிறிய மீனை விழுங்கும். கடலினுள்ளேயே அத்ருஷ்டமாக ஸஞ்சரித்துக்கொண்டு எப்பொழுதாவது வெளியே வந்து அகப்பட்டதையெல்லாம் விழுங்கும் திமி என்னும் மீனைத் திமிங்கிலம் விழுங்கும். திமிங்கிலத்தைத் திமிங்கிலகிலம் விழுங்கும். அதைத் திமிங்கில கில கிலம் விழுங்கும். 'கில கில' என்பது விழுங்குவதைச் சொல்லும். நிவ்ருத்தி தர்மமெனும் நிஷ்காம ஸாத்விக மோக்ஷ தர்மம் எல்லாப்பாபங்களையும் உறிஞ்சும் அகஸ்த்யர் போன்றது. அதையும் மாசற்ற ப்ரம்ஹவித்துகள் விஷயத்தில் அபசாரம்தின்றுவிடும்.

'க்ருதக்நே நாஸ்தி நிஷ்க்ருதி:' செய்ந்நன்றி மறந்து நன்றி பிழைத்தவருக்குத் தீங்கு புரியும் பாபத்திற்கு ப்ராயஶ்சித்த மில்லை

ஆசிரியரும் மற்ற ப்ரஹ்ம வித்துக்களும் ஸர்வபூத ஸுஹ்ருத்துகளாய் 'மைத்ரீ கருணா முதிதா' என்னும் க்ரமத்தில் நம்மிடம் மைத்ரியையும் கருணையையுமே புரிபவர்கள்.

“प्रथितं पातकितर्ग कृतघ्न एको हि कृतघ्नमतिशेते ।
तमिमं क्रियमाणघ्नस्तमपि दुरात्मा करिष्यमाणघ्नः ॥ ”

க்ருதக்நன் ஒருவன் எல்லாக் கொடும் பாதகிகளின் ஸமுதாயத்தையும் கொடுமையால் அதிசயப்பவன். நன்மை செய்துகொண்டேயிருப்பவர் விஷயத்தில், அப்பொழுதே த்ரோஹம் செய்பவனாகிய க்ரியமாணக்நன் க்ருதக்நனையும் அதிசயிப்பான். அவனையும் அதிசயிப்பவன், நன்மை செய்யத் தீர்மானித்து நன்மையே புரியப்போகிறவருக்கும் த்ரோஹம் புரியும் கரிஷ்யமாணக்நன்.

ஸுமதி:—ப்ரஹ்ம வித்துகளின் ப்ரபாவத்தைச் சொன்னீர். அவர்கள் விஷயத்தில் செய்த அபசாரத்தைக் கழிப்ப தெப்படி?

“ तोयोज्झनेन परितापमुपेत्य जन्तुस्तोयेन जीवति पुनः क्रमयोजितेन ।
तद्वन्महत्यजनतस्तमसि प्रविष्टः तत्संश्रयेण भजते परमार्थदृष्टिम् ॥ ”

ஜலத்திலேயே ஜீவிக்கும் மத்ஸ்யம் ஜலத்தைவிட்டு அகன்றால் உடனே தவித்து, நசிக்கும் அவஸ்தையை அடையும். உடனே திரும்பவும் அதை ஜலத்தில் மெள்ளச் சேர்ப்பதினால்தான் அது பிழைக்க வழியுண்டு. அப்படியே மஹான்களைவிட்டு அவர்கள் ப்ரஸாதம் குறைந்தால், தத்வக் கண்ணே இருள் அடைந்துவிடும். திரும்பவும் அவர்களை நெருங்கி ஆஶ்ரயித்து அந்தப் பலத்தால்தான் கண்திறந்து உள்ளபடி தத்வ த்ருஷ்டி யிருக்கும்.

'ஜலாந் மத்ஸ்யா விவோத்த்ருதௌ' என்று ஜல மத்ஸ்ய ந்யாயத்தை ராமனுடைய பிரிவு விஷயத்தில் லக்ஷ்மணர் உதாஹரித்தார். அதே ந்யாயத்தை ஸ்வாமி இங்கே ப்ரஹ்மவித்தின் பிரிவு விஷயத்தில் உதாஹரிப்பது ரஸிக்கத்தகும். 'யதா தேவே ததா குரௌ' என்று ஶ்ருதி காட்டும் அதிதேசம். பகவத் ஸந்நிகர்ஷத்திலும் பாகவத ஸந்நிகர்ஷம் அதிக மஹிமை யுள்ளது. 'மஹாத்மபிர்மாமவலோக்யதாம் நய,' 'தவ தாஸ்யஸுகைகஸங்கிநாம் பவநேஷ்வஸ்த்வபி கீடஜந்ம மே,' 'மஹத்ஸேவாம் த்வாரமாஹுர்விமுக்தே:' 'ஸத்ஸங்கம: ஶேவதிர் ந்ருணாம்' மீனுக்கு ஜலம்போலே, முமுக்ஷுவுக்கு ப்ரஹ்ம வித்துக்களின் க்ருபா ஜலம்.

ஸுமதி:—இன்னமொரு பயமுண்டே பகவத் த்யாந யோகநிஷ்டருக்கு. அணிமாதி ஸித்திகள் வலுவில் ஒடிவருமே. அவற்றில் கண் வைத்துவிட்டால், மோக்ஷத்தில் கண்ணோட்ட மிராதே. ப்ரபோத சந்த்ரோதயத்தில் 6-ம் அங்கத்தில் 'மஹாமோஹன் எத்தனையோ கஷ்ட தசையி லிருந்தும் அணிமாதி ஸித்திகளைக் காட்டி ஏமாற்றப் பார்க்கிறான்' என்று ஶ்ரத்தாதேவி சொல்லுகிறாள். இங்கும் ஒன்பதாம் அங்கத்திலிருந்து திரும்பவும் ப்ரஸ்தாபிக்கப்படுகிறது. யோகஸூத்ரத்தில் உள்ள மயில் ஸமாதியென்னும் யோகஸித்திற்கு அந்தராயங்கள் விக்நங்களென்று கூறப்பட்டது. [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

வேதாந்த தேசிகன் உவமை

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி. ரே. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான்]

“கண்டார் கரையைக் கடந்தார் பவக்கடலை
அண்டாத வார்வ் மடைந்திட்டார்—வண்டாரும்
கொந்தலர்பூக் தூப்புல்வருங் குற்றமில்சீர் வாதிசிங்கர்
செந்தமிழ்நூல் சிந்தித் தவர். —[தேசிகர் நூற்றந்தாதி. 91]

பூமடந்தை நெடுங்காலம் நோற்ற நோன்பின் பயனாகத் திருவேங்கடமுடையான் தூப்புல் வேதாந்த குருவாய்த் திருவவதரித்து, பரதகண்டம் முழுதும் ஸ்ரீ பகவத் ராமாநுஜ தர்சநத்தைப் பரப்பி உலகை உய்வித்தருளினன். உபய வேதாந்தத்தையும் நன்கு தழைத்தோங்கச் செய்தநிலைன்றோ மறைமுடித் தேசிகனை திருவரங்கச் செல்வன் தூப்புல் துரந்தரனுக்குத் தனக்கே உரியதான வேதாந்த தேசிக பதத்தை நல்கி, அன்றுதொட்டு ‘வேதாந்த தேசிகன்’ என்ற திருநாமம் சந்தமிகு தமிழ் மறையோனை தூப்புற் புனிதருக்கே ஏற்குமாறு அருள்புரிந்தான். அத்தூப்புற் பிள்ளை மகிழ்ந்து பாடுந் துய்ய தமிழ் இருபத்துநான்கும் தேசிக பக்தர்களாகிய நமக்கு வாழ்வு. அவரது அருண்மொழித் தொகுதியே ‘தேசிகமாலை’ எனப் பேரறிஞர் பலராற் கொண்டாடப்பெற்று வருவது. அம்மாலை ‘பழமொழி’ எனவும் சான்றோராற் போற்றப்பெற்று வருவதும் அன்பர் அறிந்ததே. அதில் நம் மறைமுடித் தேசிகனார் அருளிச்செய்துள்ள உவமைகள் மிகக் கம்பீரமாகவும், ஆக்கியோனின் ஆற்றலை அனுபவித்தற்குக் கருவிகளாகவு மிருத்தலின், அவற்றை இவண் தருவல். அறிஞர் ஆய்ந்து இன்புறுக.

புலவர் தாம் எடுத்துக்கொண்ட பொருளை இனிது புலப்படுத்தற்காக, அப்பொருளோடு இயல்புடைய பிற பொருளினை ஒப்புமைப்படுத்திக் கூறுவதே உவமம் எனப்படும். அலங்கார நூல்கள் யாவும் அணிகளையெல்லாம் பலவாகக் கூறிப் போந்தாலும், ஆராயின் அவை யனைத்தும் உவமை யென்னும் ஒன்றிலிருந்தே எழுந்திருத்தல் புலனாகும். ஆசிரியர் தொல்காப்பியனாரும் பொருளதிகாரத்துள் உமையியல் ஒன்றனை வகுத்து, ஏனைய அணிகளை அதன்பாற்படுத்தி யுள்ளனர். உவமையினின்றே எல்லா அணிகளும் எழுந்தன என்பதை,

“உவமை யென்னுந் தவலருங் கூத்தி
பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து
காப்பிய அரங்கிற் கவின்பெறத் தோன்றி
யாப்பறி புலவ ரிதயம்
நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே”

என்பதனாலும் அறியக் கிடக்கின்றது.

தேசிகமாலையில் துலங்கும் உவமைகள் வருமாறு :—

1. ... ... பயிரில்
களைபோ லசுரரைக் காய்ந்தான் தன்கையில்
வளைபோலெம் மாசிரியர் வாக்கு. —(அமிருதரஞ்சநி. 5)
2. துலையொத்தன வென்பர் தூய்மறைசூடுந் துழாய்முடியார்க்
கிலையொத்தன வவன்பாதம் பணிந்தவ ரெண்ணுதற்கே. —(௸ 6)
3. ஓரார் சுருதி யொளியா லிருள்நீக்கும
தாராபதி யனையார் தாம். —(௸ 12)
4. சிலங் கவர்ந்திடுந் தேசிகர் தேசின் பெருமையினல்
துலங்க என்ன துரிதங்கள் மாய்ந்தன, —(௸ 15)
5. முன்னொத்த வாதிகள் முன்னேவரி னெங்கள் முக்கியர்பால்
வெள்ளத் திடையில் நரிபோல் விழிக்கின்ற வீணர்களே. —(௸ 21)
6. அந்தமி லாதிதேவ னழிசெய் தடைத்தவலை வேலையோத மடையச்
செந்தமிழ்நூல் வகுத்தசிறு மாமனிச்சர் சிறுகைச் சிருங்கை மறைபோல்.
—(௸ 23

7. எல்லாந் தனதென வெல்லா முகந்தருள் தந்தபிரான்
கல்லார் மதக்களி றேத்தவி னைத்திரள் மாய்ப்பனென்ற
சொல்லா வினியொரு காற்சோகி யாத்துணி வுற்றனமே. —(ஷை 37)

8. திருவுடன் வந்த செழுமணிபோல் திருமா லிதயம்
மருவிட மென்ன மலரடி சூடும் வகைபெறுநாம். —(அதிகாரச் சுருக்கு. 8)

9. வேண்டாது சரணநெறி வேறோர் கூட்டு
வேண்டிலய னத்திரம்போல் வெள்கிநிற்கும். —(ஷை 47)

10. சீரணிந்த சுடர்போலத் திகழ்ந்து நின்றேன்
சிலைவிசயன் தேரவனயச் சிறுவேதத்தே. —(அமிருதாசுவாதினி. 2)

11. கரக்குங் கருத்துடைத் தேசிகர் கன்றென நம்மையெண்ணிச்
சுரக்குஞ் சுரபிகள் போற்சொரி கின்றனர் சொல்லமுதே. —(ஷை 14)

12. உடம்பிற்கு னுபலம்போல் கிடக்க நானே. —(ஷை 21)

13. பொங்குபுன லாறுகளிற் புவனமெல்லாம்
பொன்கழலா லளந்தவன்தன் தாளால்வந்த
கங்கையெனு நதிபோலக் கடல்களேழில்
கமலைபிறந் தவனுகந்த கடலேபோலச்
சங்குகளி லவனேந்துஞ் சங்கேபோலத்
தாரிலவன் தண்டுளவத் தாரேபோல்
எங்கள்குல பதிகளிவை மேலாமென்றே
யெண்ணியநல் வார்த்தைகள்நா மிசைகின்றோமே. —(ஷை 25)

14. சீர்க்கடலின் திரையென்னத் தகவால் மிக்க
தேசிகராய்த் திணியிருளாங் கடலைநீக்கிப்
பாற்கடலோன் திருவணையாய் நின்றுபாரங்
காணாத பவக்கடலைக் கடத்துகின்றான்
நீர்க்குமரக் கலமென்ன விரைவ ரின்ப
மெழுந்தழியுங் குமிழியென விகந்தொழிந்தோம்
ஆர்க்கினிநா மென்கடவோ நமக்குமாரென்
கடவாரென் றடைந்தவர்கட் கறிவித்தோமே. —(ஷை 26)

15. சேவலுடன் பிரியாத பெடைபோல் சேர்ந்து
தீவினையோர் தனிமையெல்லாந் தீர்ந்தோநாமே. —(ஷை 35)

16. தேன்பட்ட விடம்போலத் தித்திக்கின்ற
சிறுபயனே யுறுபயனென் றருந்துமாறும். —(பரமபத ஸோபாநம் 5)

17. வந்தனபோல் வருவனவு மனந்தமாகி
மாளாத துயர்தரு வல்வினை நெருப்புக்கு —(ஷை 9)

18. தன்செய்ய திருவருளா லிசைவு பார்த்துத்
தழல்சேர்ந்த தூலமெனத் தானே தீர்த்து. —(ஷை 11)

19. உறையிட்ட வாளென வூனுளுறைகின்ற யோகிதனை. —(ஷை 12)

20. கழியல்லாற் கடலில்லை யென்பார்போலக்
காரியமே காரணமென் றுரைப்பார் காட்டும். (ஷை 15)

21. வண்டமரு மலர்மாது மின்னாய்மன்ன
வைசயந்தி மணிவில்லாய் விளங்க வான்சேர்
கொண்டலருண் மழைபொழிய வந்தகோப்பாங்
குளிர்ந்துதெளிந் தமுதாய விரசை யாற்றை —(ஷை 17)

22. அடலுரக முண்டுமிழ்ந்த வருக்கன்போல
அழுக்கடைந்து கழுவியநற் றரளம்போலக்
கடலொழுகிக் கரைசேர்ந்த கலமேபோலக்
காட்டுத்தீ கலந்தொழிந்த களிறேபோல,
மடல்தவரு மயல்கழிந்த மாதர்போல
வன்சிறைபோய் மன்னர்பதம் பெற்றார்போல
உடன்முதலா வுயிர்மறைக்கு மாயைநீங்கி
யுயர்ந்தபத மேறியுணர்ந் தொன்றினோமே. —(ஷை 19)

23. முத்தின் வடங்களென முகுந்தன் பூண்ட மூவகையாம்.—(பரமத பங்கம் 5)

23. a வேலைப் புறமகங் காண்பது போல்வேத நன்னெறிசேர்
நூலைப் புறமகங் காண்டலி னுண்ணறி வின்றிநின்றீர். —(ஷை 8)

24. கொண்டலோக்கும் திருமேனி மாயக்கூத்தன்
குரைகழல்சேர் விதிவகையிற் கூடாதாரே. —(ஷை 11)

25. கண்டது போல்மறை காட்டுவ துக்கண்ட தொத்ததனால்
உண்டது கேட்குமு லோகா யதரின்று மீறுவதே. —(ஷை 12)

26. தேனநெறி கொண்டனைத்துந் திருடாவண்ணஞ்
செழுமதிபோ லெழுமதியால் சேதித்தோமே. —(ஷை 15)

27. விளக்கு நிரைபோல் மதிகள் வேறாய்வேறொன்
றறியாதே விளக்குமென விளம்புகின்ற
களக்கருத்தன் கண்ணிரண்டு மழித்தோ நானைக்
காகம்போற் றிரிந்தவனென் கதறுமாறே. —(ஷை 17)

28. மருள்கொண்ட சூதுரைக்குஞ் சௌத்தி ராந்திகன் வண்ணிக்கைநாம்
இருள்கொண்ட பாழ்ங்கிண் றென்றிகழ்ந் தோடவி யம்புவமே. —(ஷை 18)

29. கலகத்திற் கலங்கிவருங் காணிக்கெல்லாங்
கண்ணூறு சதிரவழி காட்டுவார்போல் —(ஷை 29)

30. ஆகமத்தை யனுமான மென்கையாலும்
அழியாத மறையழிக்க நினைத்தலாலும்
போகமற்ற புலம்போலக் கிடைக்கை தானே
புண்ணியர்க்கு வீடென்று புணர்த்தலாலும்
மாகமொத்த மணிவண்ணன் படியைமாற்றி
மற்றவனுக் கொருபடியை வகுத்தலாலும்
காகமொத்த காணுதன் கண்ணைவாங்கிக்
காக்கைக்கா ரென்றலத்தல் காட்டினோமே. —(பரமத பங்கம் 31)

31. ஊன்மறைத்த வுயிரொளிபோ லொத்ததொவ்வா
துயரில்லாக் காணுத முரைத்ததெல்லாம் —(ஷை 33)

32. கவனகடல்போ லொருநீராஞ் சூத்திரத்தைக்
கவந்தவனயு மிராகுவையும் போலக்கண்டு —(ஷை 35)

33. காசினிநீர் முதலான காரியங்கள்
கச்சபத்தின் கால்கைபோ லென்னுங்கத்தால்
நாசமில நிலைகாணு ஞாலத்துள்ளீர்
நாமிசையாச் சாங்கியத்தை நாடுவார்க்கே. —(ஷை 37)

34. காரணனு யுலகளிக்குங் கண்ணன் தேசைக்
கண்ணடி நிழல்போலக் காண்கையாலும் —(ஷை 39)

35. யாதுமி லாதவன் றும்மெவர்க் குந்நன்றி யெண்ணியநம்
மாதவ னூர்வத னத்தமு துண்ணும்வ லம்புரிபோல்
........................நனுகுநாதன் —(ஷை 43)

36. கோவலனய் நிரையளித்த நிரைபோல்வேதங்
கோவாகக் கோமானு யதன்பால்சேர்த்து —(ஷை 44)

37. முன்னடி பார்த்து முயலுத லாவர் சாயையெனப்
பின்னடி பார்த்து கடந்து பெரும்பத மேறுவமே. —(ஷை 51)

38. நிகழரவ ணையரங்கர் தேசென்ன மன்னிய
திரிசுதரி சனர்செய்ய வீரெண் புயங்களே. —(ஷை 54)

39. முன்பல குற்றத்து வல்வினை மொய்க்க முகிழ்மதியாய்
அம்புலி வேண்டிய பாலனைப்போல வழுதனனே.—(அத்திகிரிமான்மியம் 5)

40. மருவினிடையோங்கு புனலென மலைகுனிய நின்ற, மலையென
மருளறவிளங்கு மொளியென மலரயனுகந்த பயனென
அருளி லுறைகின்ற வுயிரென வடியவ ருகந்த வமுதென
அருமறைக ளொன்றி யடிதொழ வருள்வரதர் நின்ற பெருமையே.
—(ஷை 18)

41. சித்திரத்தொழிலை யொத்தபத்தரோடு மூத்தர் பித்தியெனு மூணர்வினர்
கத்திலக்கிலு மருக்குலத்திலு மசித்திலோக்கு மொரு முதல்வனுர். (ஷை 19)

42. வேரோப்பார் விண்முதலாங் காவுக்கெல்லாம்
விழியோப்பார் வேதமெனுங் கண்டனக்குக்
காரோப்பார் கருணைமழை பொழிந்திடுங்காற்
கடலோப்பார் கண்டிடினுங் காணுக்கூத்தால்
நீரோப்பார் நிலமளிக்குந் தன்மைதனுல்
நிலமோப்பார் நெடும்பிழைகள் பொறுக்குநேரால்
ஆரோப்பா ரிவர்குணங்க ளனைததுங் கண்டால்
அருளாளர் தாமெனினுந் தமக்கொவ்வாரே. —(ஷை 2)

43. மெய்விரத நன்னிலத்து மேன்மை யிது மொழிந்தான்
கையதனிற் கனிபோலக் கண்டு. —(ஷை 29)

44. எத்திசையு முழன்றோடி யிளைத்துவிழுங் காகம்போல்—(அடைக்கலப் பத்து. 1)

45. உமதடிக ளடைகின்றே னென்றொருகா லுரைத்தவரை
அமையுமினி யென்பவர்போ லஞ்சலெனக் கரம்வைத்து —(ஷை 7)

46. தெளிபுனலமு தெனச் செழுமதி யடியவர்
குளிமுதல் கிரிசைகள் குறைகிலர் வலதே. —(ஸ்ரீ வைஷ்ணவ தினசரி 5)

47. வருவதொ ருறவென வளரிள வரசென
மருவுநன் மகனென வனமத கரியென்
அருவிலை மணியென வடியவ ரடைபவர்
அருகனை யிறைவனை யருகணை யுடனே. —(ஷை 6)

48. தேசுடை யாழிகள் நான்குடன் செம்பசும்பொன் மலைபோல்
—(பன்னிரு நாமம். 1)

49. வாரண வெற்பின் மழைமுகில்போ னின்றமாயவனே. —(ஷை 2)

50. என்றுமோ ரேதமின்றி யிரவியு மொளியும்போல—(திருமந்திரச் சுருக்கு. 4)

51. எண்டிசை பரவுஞ்சீரோ ரெங்களுக் கிந்தவெட்டில்
உண்டவா றுரைப்பார்போல வொன்பது பொருளுரைத்தோம். —(ஷை 10)

52. மழையிலெழுந்த மொக்குள்போல் வையம்
அழியவொன் றழியா வடியவர் மெய்ய !
சித்திர மணியெனத் திகழுமன் னுருவில்
அத்திர மணியென வணைத்துநீய னுகி. —(மும்மணிக் கோவை. 4)

53. வரையெடுத்து மழைதடுத்த மழையோடொத்த மெய்யினன்
—(நவமணி மாலை. 1)

54. அஞ்சனமுங் காயாவு மனைய மேனி
யடியவர்க்கு மெய்யனே! யயிந்தை வாழும்
அஞ்சலென வருள்பொழியும் வள்ளலே! நின்
வடிவழகு மறவாதார் பிறவாதாரே. —(ஷை 6)

மணிப்பவள நடையில் அருளிய இரகசியங்களுள்ளும் எண்ணிறந்த அழகிய உவமைகள் காணலாம். இப்பேராசிரியர் பரிபாடல் முதலிய சங்க நூல்களைப் பயின்றவர் என்பது இவரது செவ்விய சில உவமைகளைக்கொண்டு அறியலாம். அவற்றுட் சிலவற்றை எடுத்து விளக்குவல்.

"உத்தம வமர்த்தல மமைத்ததொரெழிற்றனு வுபர்த்த கணையால்
அத்திர வரக்கன்முடி பத்துமொரு கொத்தென வுதிர்த்த திறலோன்
மத்துறு மிகுத்ததயிர் மொய்த்தவெணெய் வைத்ததுணு மத்தனிடமாம்
அத்திகிரி பத்தர்வினை தொத்தற வறுக்குமணி யத்திகிரியே".

என்ற அதிகார சங்கிரகப் பாசுரத்தை முதற்கண் ஆராய்வாம். இது பெருமாள்கோயில் ஸ்ரீ பேரருளாளன் விஷயமான பாசுரம்.

"அரக்கன் முடிபத்து மொரு கொத்தென வுதிர்த்த" என்பது இக்குற்ற உவமை. 'அரக்கனாகிய இராவணனின் பத்துத் தலைகளையும் ஒரு குலை என்னலாம் படி கீழே விழுமாறு செய்த' என்பது இதன் பொருள். அத்திரியே அவன் கையிற் றிகழும் திருவாழி.

கீரந்தையார் எனும் செந்தமிழ்ப் புலவர் பரிபாடலில் பின் வருமாறு பாடியுள்ளார் :—

41. தலையிறு புதாரொடு புரள நிலை தொலைபுவேர் தூர்மடல்
குருகு பறியா நீளிரும் பனைமிசைப் பலபதினுயிரங் குலை தரையுதிர்வபோல்
45. நில்லா தொருமுறை கொய்புகூடி ஒருங்குருண்டு பிளந்து நெரிந்துருள்புசிதறு
பளறு சொரிபு நிலஞ்சோரச் சேரா ரின்னுயிர் செகுக்கும்
போரடு குரிசினீ யேந்திய படையே ".

இதற்குப் பரிமேலழகர் உரை வருமாறு:—

"நின்ற நிலையில் தொலைந்து வேரும் தூரும் மடலும் குருத்தும் பறியாத நீண்ட கரிய பனைமிசைப் பல பதினுயிரங் குலைகள் அதன்தலையி னீங்கித் தரைக்கண் உதிர்வனபோலத் தலைகள் வலியிழிந்து சாய்ந்து ஒன்றும் உடன்மிசை நில்லாமற் கொத்தாக இற்றுத் தரித்த தாரோடு புரளும்படி ஒரு காலத்திலே கொய்தல் பெற்று உடனே உருண்டு பிளந்து நெரிந்து பின் வேறு வேருய் உருண்டு சிதறி அளறு சொரிந்து நிலத்தின்கட் சோர அவுணருயிரைச் செக்கும், நீ ஏந்திய ஆழிப்படை".

தேசிகனின் உவமை அமைக்கும் திறன் வெள்ளிடை விலங்கல். இங்கு,

"வானுளா ரவரை வலிமையால் நலியும் மறிகட லிலங்கையர் கோனை
பானுநேர் சரத்தால் பனங்கனிபோலப் பருமுடி யுதிரவில் வளைத்தோன்"
(பெரிய திருமொழி 9—1—7)

என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தை நினைசு. காலத்தால் வேறுபட்டிருப்பினும் மஹாகவிகள் கருத் தொருமித்திருத்தல் கண்கூடு.

எம்பெருமான் திருமேனிக்கு உவமை பரிபாடலில் பலபடியாக உள்ளன. அவற்றை ஈண்டுக் காண்மின் :

1. "மண்ணுறு மணிபாயுரு வினவை" (பரிபாடல் 1.)
(மணி பரந்தா லொத்த உருவினையுடையை.)
2. "நின்னது திகழொளி சிறப்பிரு டிருமணி" (ஷை 2.)
(நினது திருமேனியின் ஒளி சிறப்பினையுடைய இருண்ட நீலமணியை ஒக்கும்.)
3. "பறவாப் பூவைப் பூவினேயே" (ஷை 3)
(காயாம்பூவின் நிறத்தினையுடையோய்)
4. "திருமணி திரை பாடவிந்த முந்நீர்
வருமழை யிருஞ்சூன் மூன்றும்புரையு மாமெய்" (ஷை 4)
(நின்னுடைய கரிய திருமேனி நீலமணியையும், அலையடங்கிய கடலையும், காலத்தின்கண் வரும் நீர் நிறைந்த மேகத்தையும் ஒத்தது.)
5. "கோளிரு ளிருக்கையாய் மணிமேனி" (ஷை 4)
(கண்ணைக் கொள்ளுதலையுடைய இருட்டு இடமாயநீலமணி போலும் மேனி)
6. "கார் மலர்ப்பூவை கடலை யிருண்மணி
அவையைந்து முறழு மணிகிளர் மேனியை" (ஷை 13)
(மேகம், காயாம்பூ, கடல், இருள், நீலமணி யென்னும் ஐந்தையும் ஒக்கும் திருமேனியையுடையை.)
7. "வெளவற் காரிருண் மயக்குமணி மேனியன்" (ஷை 15)
(நீரை வெளவுதலையுடைய மேகமும் இருளும் நீலமணியும் போலுமேனியனுய்.) இனி இவற்றையெல்லா மடக்கி வேறு உவமைகளுங் கொண்டு மிளிரும் தூப்புல் வள்ளலாரின் பாசுரங்கள் தருகிறேம்.

"மையுமா கடலு மயிலுமா மழையும் மணிகளுங் குவளையுங்கொண்ட
மெய்பனே ! ... ... (நவமணிமாலை, 7)
"அஞ்சனமுங் காயாவு மனையமேனி !
(ஷை 6)

வேதாந்த தேசிகனை 'உவமைச் சிங்கம்' எனில் அது சாலப் பொருந்தும். தேசிகமாலையைத் தெளியவோதித் தெளியாதனவெல்லாந் தெளிவோமாக.

பொங்கும் மங்களம் எங்குந் தங்குக.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

---

(1)

சைதாப்பேட்டை ஸ்ரீபெருமாள் ஸந்நிதியில் லக்ஷார்ச்சனை

சைதாப்பேட்டை என வழங்கப்படும் ஸ்ரீ ரகுநாதபுரத்தின்கண் கோயில் கொண் டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அலர்மேல்மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸந்ந வேங்கடேச நரஸிம்ஹ ஸ்வாமிக்கு, நிகழும் ஸுபாநு ஸ்ரீ ஆவணி மீ 11 உ (27-8-'43) முதல் 20 உ (5-9-'43) வரை ப்ராத: ஸாயம் எனும் இரு வேளைகளிலும், லக்ஷார்ச்சனை ஶாந்தி ஜபம் ஹோமம் இவைகள், வைகாநஸாகமங்களில் ப்ரவீணர்களான ஸ்ரீ உப. உத்தரமேரூர் துரைஸாமி பட்டாசார்யர் முதலானவர்களைக் கொண்டு வெகு விமர்சையாக நடத்தப்பட்டன. ப்ரதிதிநம் ஹோமார்ச்சனைகள் நடைபெறுங் காலத்தில் திவ்யப்ரபந்த ஸேவாகாலமும் வேதபாராயணமும் நடந்தேறின. பிறகு மத்யாந்ஹம் பெருமாளுக்குத் திருமஞ்ஜநமும், அத்யாபக வேதபாராயண ஸ்வாமிகளுக்குத் ததீயாராதநமும் நடைபெற்றன. கடைசி நாள் (20உ) ஞாயிற்றுக் கிழமையன்று மத்யாந்ஹம் பூர்ணாஹுதியும், சாத்துமறை தீர்த்த ப்ரஸாத விநியோகங்களும் ததீயாராதநமும் ஸம்ப்ரமமாக நடத்தப்பட்டு உத்ஸவம் 2 மணிக்கு இனிது முடிவடைந்தது. அநந்தரம்; ராத்ரி சுமார் 8 மணிக்குப் பெருமாள் உபய நாய்ச்சிமார் ஸஹிதம் கருடா ரூடராய் ஸந்நிதிவீதி மாடவீதிகளில் வெகு விபவத்துடன் உத்ஸவம் கண்டருளினார். அத்திருக் கோலமும் காட்சி வைபவமும் வாசாமகோசரம்.

ப்ரக்ருதம் ராஜ்யத்தில் நடந்துவரும் கோர யுத்தங்களும், அவற்றின் பயனாய் உலகெங்கும் பரவிவரும் வறுமைப் பிணியும் துர்ப்பிக்ஷமும் நீங்கி, நமது அரசர் பெருமானுக்கு வெற்றிப் பேறு உண்டாகுமாறு இவ்விழா நடத்தப்பட்டதால், இவை ஸபல மாகுமாறும், வன்பெரு வானகமுய்ய வமருய்ய மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்ய, 'துன்பமிகு துயரகல வயர்வொன் றில்லாச் சுகம் வளர்ந்து அன்பர் அனைவரும் அகமகிழ்ந்து நன்கு வாழுமாறும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

ஓரகடம் கோ. ஸுதர்சநாசாரியர்.

---

(2)

ஸ்ரீ பார்த்தஸாரதி மங்களாஶாஸநம்

ஸ்ரீ அழகியசிங்கர், திருவெவ்வுளூரில் உத்தாநம் நடந்த பிறகு, திருநின்றவூர் பருத்திப்பட்டு வில்லிவாக்கம் மார்க்கமாக நிகழும் புரட்டாசி மீ 9உ சனிக்கிழமை ஏகாதசி யன்று சென்னை நகரத்தைச் சேர்ந்த சேத்துப்பட்டுக்கு எழுந்தருளினார். அன்றும், மறுதிநம் காலையிலும், மே. ரா. ரா. ஸ்ரீ. சதுர்ப்புஜதாஸ் கோகுல்தாஸ் பங்களாவில் எழுந்தருளி யிருந்து ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஆராதநத்தைச் செய்துவிட்டு, ஞாயிற்றுக்கிழமை த்வாதஶீதிநம் நுங்கம்பாக்கம் மார்க்கமாகத் திருவல்லிக்கேணிக்கு எழுந்தருள, திருவல்லிக்கேணியின் எல்லையாகிற ஸமுத்ர தீரத்தில் சென்னை நகரவாஸிகளான மஹா ஜநங்கள் ஸ்ரீ அழகியசிங்கரைப் பூர்ண கும்ப ஸமர்ப்பண பூர்வகமாகத் தண்டன் ஸமர்ப்பித்து விட்டு வேத பாராயண கோஷ்டியுடனும் வாத்ய கோஷத்துடனும் கங்கை கொண்டான் மண்டபத்திற்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போனார்கள். அவ்விடத்தில் ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி ஸந்நிதியிலிருந்து அந்த ஆலயத்தின் தர்மகர்த்தாக்கள் சத்ர சாமராதி மர்யாதையுடன்

ஸ்ரீ படாரியை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு கங்கைகொண்டான் மண்டபத்திற்கு வரவே, ஸ்ரீ அழகியசிங்கர் எதிர் கொண்டுபோய் அந்த மர்யாதைகளை ஸ்வீகரித்து, அங்கிருந்து பல்லக்கில் ப்ரதக்ஷிணமாக ஸ்ரீ பார்த்தஸாரதியின் மங்களாஶாஸநத்திற்கு எழுந்தருளினர். அப்பொழுது அவ்விடத்தில் கோவில் தர்மகர்த்தாக்களும், பெடரல் கோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ. ஸர். எஸ். வரதாசார்யர், ஸ்ரீமான்கள் வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், வி. பாஷ்யம் ஐயங்கார் முதலிய ப்ரபுக்களும் வந்திருந்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கருக்குச் செய்யப்படவேண்டிய மர்யாதைகளெல்லாம் க்ரமமாகச் செய்யப்பட்டன. ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ பார்த்தசாரதியையும், ஸ்ரீ வேதவல்லித் தாயாரையும் மங்களாஶாஸநம் செய்துவிட்டு ஸ்ரீ அஹோபில மடத்திற்கு எழுந்தருளுகையில் 2 மணிக்குமேல் ஆகிவிட்டது. ஸமுத்ர தீரத்தில் பூர்ண கும்பம் ஸமர்ப்பித்த காலம் முதல் மங்களாஶாஸநம் முடியும் பர்யந்தம் ஆயிரம் ஜநங்களுக்கு மேற்பட்ட பெரிய கூட்டம் ஸ்ரீ அழகியசிங்கரை அநுயாத்ரையாகப் பின்தொடர்ந்து சென்றதைப் பார்த்தபொழுது ஸ்ரீ பார்த்தஸாரதியின் கருடோத்ஸவம் நடைபெறுவது போலவே அவ்வளவு சிறப்பாக இருந்தது.

சென்னை நகரவாஸிகளான ஆஸ்திகர்களுட் பலர், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஆராதிப்பதில் மிக்க உத்ஸாஹத்துடன் முன் வந்திருக்கிறபடியால், ஸ்ரீ அழகிய சிங்கர் இவ்விடத்தில் பத்துப் பதினைந்து தினங்களுக்குக் குறையாமல் எழுந்தருளியிருக்கும்படி ஸம்பவிக்குமென்றே தோன்றுகிறது. முக்கியமாகத் திருவல்லிக்கேணியில் எழுந்தருளி யிருந்தபோதிலும், மயிலாப்பூர் மாம்பலம் போன்ற சுற்றுப்பட்ட ஸ்தலங்களிலும் மூன்று நான்கு தினங்களாவது எழுந்தருளுவதாகத் தெரிகின்றது. ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் இம்மாதிரி உத்ஸவம் கண்டருளுவதுடன் ஆங்காங்கு ஆலயங்களில் நடக்கும் நவராத்ரி மஹோத்ஸவமும் ஸ்ரீ தேஶிகன் ஸ்ரீ ஆதிவண்ஶடகோப ஸ்வாமி இவர்களுடைய வார்ஷிக உத்ஸவங்களும் சேர்ந்தபடியால், சென்னை நகரம் விலக்ஷணமான ஒரு ஶோபையுடன் ப்ரகாஶித்துக் கொண்டிருக்கின்றது இது சென்னை நகரவாஸிகளின் பாக்யமே.

---

(3)

ஸ்ரீ கல்யாணப்ரவர்த்திநீ ஸபா,

ஸ்ரீ அஹோபில மடம் ஸம்ஸ்க்ருத காலேஜ், ஸ்ரீ மதுராந்தகம்.

ஷை ஸபையானது ஆகஸ்ட்மீ 31௳ ஸாயங்காலம் 3 மணிக்கு ஸ்ரீ. உ. வே. உபாத்யக்ஷர் (Vice Principal) முக்கூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி தலைமையின் கிழ்க் கூடியது. அவ்வமயம் (ந்யாய சிரோமணி வித்யார்த்தி) M. S. நரஸிம்ஹ ராகவன் என்பவரால் 'மஹாகவி காளிதாஸ:' என்னும் விஷயத்தைப்பற்றி வடமொழியில் ஓர் வ்யாஸம் படிக்கப்பட்டது. அடுத்த ஸபைக் கூட்டம் 11—9—43-ல் மாலை 3 மணிக்கு வ்யாகரணத்யாபகர் ஸ்ரீ. உ. வே. P. N. ராகவாசார்ய ஸ்வாமி தலைமையின்கிழ் நடந்தது. அப்பொழுது (ந்யாய சிரோமணி வித்யார்த்தி) T. K. நரஸிம்மாசாரி என்பவரால் 'அஹிம்ஸை' என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு வ்யாஸம் வடமொழியில் படிக்கப்பட்டது. பிறகு மங்களாசரணத்துடன் ஸபையானது இனிது முடிந்தது.

ஷை ஸபையின் ஆதரவில் பொதுக்கூட்டங்களும் நடந்து வருகின்றன. அவற்றின் விவரம்:— ஷை ஸபையின் ஆதரவில் 5—9—43-ல் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸ ராகவாசாரியர் (வக்கீல், சித்தூர்) அவர்களால் 'ஸ்ரீராமன் குருகுலவாஸம்' என்னும் விஷயம் உபந்யாஸம் செய்யப்பட்டது. அச்சமயம் பொதுமக்கள்களான சில ப்ரமுகர்களும் விஜயம் செய்திருந்தார்கள், ஷை ஸ்வாமியினால் இக் கலாசாலை வாசகசாலைக்காக ராமாயண முக்தாவளி, ராமாயண ஸாராவளி என்னும் இரண்டு புத்தகங்கள் இனமாக அளிக்கப்பட்டன. 7—9—43-ல் ஷை ஸபையின் சார்பாக ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ கார்யம், தேசிக தர்சந துரந்தர

சிரோமணி ஸ்ரீ. உ. வே. அம். வ. நரஸிம்மாசார்ய ஸ்வாமியினுல் 'ஸ்ரீதேசிக ஸ்ரீ ஸூக்தி ரஸாஸ்வாதஃ' என்னும் விஷயம் வடமொழியிலேயே உபந்யாஸம் செய்யப்பட்டது. இவ்வமயத்திலும் பல ப்ரமுகர்கள் விஜயம் செய்திருந்தார்கள், ஷை ஸபையின் ஆதரவில் 8—9—43-ல் ஸ்ரீமான் தர்ம துரந்தர, M. A. மல்லூர், சக்ரவர்த்தி அய்யங்காரவர்களால் 'கீதாரஹஸ்யம்' என்னும் விஷயமானது உபந்யாஸம் செய்யப்பட்டது. அச்சமயத்திலும் தாசில்தார் ஸ்ரீ, உ. வே. சடகோபாசார்யர் முதலான ப்ரமுகர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

குறிப்பு:— ஷை ஸபைக்கு உபகார்யதரிசியாக (வ்யாகரண சிரோமணி) கரளப்பாக்கம் ராமாநுஜாசாரி என்னும் வித்யார்த்தி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இச்சபைக்குச் ஆதரவில் சுதேச மித்ரனும், சில ஸம்ஸ்க்ருத பத்ரிகைகளும் வந்துகொண்டிருக்கின்றன. இங்ஙனம்: C. R. ராஜகோபாலன், கார்யதரிசி. 27—9—43.

ஸ்ரீ:

மதிப்புரை

(1) கீழ்க் கண்டுள்ள சிறிய க்ரந்தங்களை நாம் வரப்பெற்றோம். அவை பெருக வாழ்ந்தான் முடும்பி வித்வான் ஸ்ரீ. உப. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமியின் க்ருதிகள். அவர் பெரியதொரு வித்வத் ஸந்ததியில் ஜநித்துப் பண்டித வர்யர்களிடம் சாஸ்த்ராப்யாஸம் செய்து சிறந்த யோக்யதையை ஸம்பாதித்தவர். வ்யாகரணத்தில் இவருக்குள்ள ஜ்ஞாநம் அபாரம்; அதனுடன் நேர்த்தியான கவந சக்தியும் இவருக்கு உண்டு. அவருடைய ஸுபாஷிதத்தை நாம் பஹுவாக அநுபவித்திருக்கிறோம். ஆனால், இவர் ஸ்வமஹிமையைப் பலருக்குத் தெரியும்படி ஆவிஷ்கரிக்கும் ஸ்வபாவம் இல்லாதவராய் அதை ஒருவாறு கோபநமே செய்து வந்துவிட்டபடியால், ஸ்வ ஜ்ஞாநத்திற்கு அநுரூபமான லோக ஸம்மாநநத்தை அவர் பெறவில்லை. அப்படிப் பலருண்டு. "[illegible]" இவருடைய க்ருதிகளாவன:— (1) ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹஸ்தவம் (2) ஆசார்ய பஞ்சாசத் (3) ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயஸார ஸங்க்ரஹம், (4) ஸித்தாந்த கௌமுதீ ஸங்க்ரஹம். [இந்த நாலு க்ரந்தங்களும் ஸம்ஸ்க்ருத ஶ்லோகரூபமாக அமைக்கப்பெற்று க்ரந்த லிபியில் அச்சுப் பதிப்பிக்கப் பெற்று ஒரே புஸ்தகமாகப் பைண்டு செய்யப்பட்டிருக்கின்றன. இதன் க்ரயம் அணா 3]. (5) வைராக்ய பஞ்சாசத் என்று 8 ஶ்லோக மடங்கியது; க்ரந்தலிபி, அணா 1. (6) ஆத்யத்விக ஸ்திதி [இக்காலத்திய நிலைமை] என்னும் பெயருடன் மற்றுமொரு க்ரந்தம். இதுவும் ஸம்ஸ்க்ருத ஶ்லோக ரூபமே. 89 ஶ்லோகங்கள். நாகர லிபி. க்ரயம் வெளியிடப்படவில்லை. இவையெல்லாம் கிடைக்குமிடம்;

R. ஸ்ரீநிவாஸாசார்யர், கிளார்க், தபால் ஆபீஸ், நெ. 3,
புண்டரீக குளம், வடகரை, நாகபட்டணம்.

2. ஸ்ரீ ப்ரஸந்ந ரகுநாத விஜயம்: இது. புதுக்கோட்டை பெரிய கோர்ட்டு ஜட்ஜ் ஸ்ரீ. உப. ஆர். ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியாற் செய்யப்பட்டிருக்கும் ஸம்ஸ்க்ருத ஶ்லோக ரூபமான க்ரந்தம்; புதுக்கோட்டைக்கு ஸமீபத்திலுள்ள கடையக்குடி என்னும் ஸ்தலத்தில் அர்ச்சா ரூபியாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ப்ரஸந்ந ராகவனுடைய ஸ்தோத்ரம். இதில் அந்த ஸ்தலத்தின் ஸந்நிவேசம், அதன் விலக்ஷணமான அமைப்பு, அதில் இந்த எம்பெருமானுடைய திவ்ய மங்கள விக்ரஹம் எப்பொழுது யாரால் எழுந்தருளப் பண்ணப்பட்டது, இவையெல்லாம் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. மிகவும் லளிதமான நடையில் உயர்ந்த உல்லேகங்களுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த ஶ்லோகங்கள் ஸஹ்ருதயர்களாயிருக்கும் ரஸிகர்களுடைய மநஸ்ஸை ஆகர்ஷிக்குமென்பதில் ஆக்ஷேபமில்லை. ஒவ்வொரு ஶ்லோகத்தின்கீழ், அந்தந்த ஶ்லோகத்தின் உரையும் தமிழில் எழுதப்பட்டிருக்கின்றது. ஸ்ரீராம பக்தி பரிதர்களெல்லாரும் இதைப் படித்து ஆநந்திப்பார்களென்று நாம் நம்புகிறோம். இதன் க்ரயம் ரூ 1—0—0. க்ரந்தத்தின் கர்த்தாவாகிய ஜட்ஜ் ஸ்வாமிக்கு எழுதி இதைப் பெற்றுக் கொள்ளலாம்.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

" योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥ "

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ சதுர்ப்புஜ தாஸ் கோகுல தாஸின் நன்கொடை

ஸ்ரீ அழகிய சிங்கர், திருவெவ்வுளூரை விட்டுப் புறப்பட்டு. ஸ்ரீ பார்த்தஸாரதியை மங்களாஶாஸநம் செய்யவேண்டும் என்னும் திருவுள்ளத்துடன் சென்னை நகரத்திற்கு எழுந்தருளி யிருக்கும் ஸமாசாரம் நமது ஸுஹ்ருத்துக்க ளெல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். சேத்துபட்டு என்று வ்யவஹரிக்கப் படும் இடத்தில் சென்னை நகரத்துக்குள் ப்ரவேஶம் நேர்ந்தது. அவ்விடத்தில் ம-ள-ள-ஸ்ரீ சதுர்ப்புஜ தாஸ் கோகுல் தாஸ் என்னும் ஒரு மஹா ப்ரபு இந்த்ர பவநம் போன்ற தமது பங்களாவில் ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்ஹனை எழுந்தருளப் பண்ணி, காலை அபிகமநாராதநம் முதல் ராத்ரி டோலோத்ஸவம் வரை அன்றைய ஆராதநத்தை ஸம்ப்ரமமாக நடத்தி வைத்தார். அந்த ப்ரபு ஓர் உண்மையான ஆஸ்திகர்; தமது வர்ண தர்மத்தைத் தவறாது பரிபாலநம் செய்பவர்; ஸ்ரீ வல்லபாசார்ய ஸித்தாந்தத்தை அநுஸரிப்பவர். அவருடைய க்ருஹத்தில் ப்ரதி திநம் நடைபெறும் நடவடிக்கைகளைப் பார்த்தால் க்ருதயுக தர்மம் இன்னும் இந்த லோகத்தை விட்டு ஆத்யந்திகமாக மறைந்து விடவில்லை யென்றே சொல்லலாம். யாசகர்களுக்குச் செய்யப்படும் தாநங்களும், வைதிக ப்ராஹ்மணர்களைக் கொண்டு நடத்தப்படும் வைதிக கர்மங்களும், தவறாமல் ப்ரதி திநம் செய்யப்படும் பகவதாராதநமும், ஆராதந காலங்களில் செய்யப்படும் நாம ஸங்கீர்த்தநம் ஸ்தோத்ர படநம் அர்ச்சனை முதலியவை, ஜாக்ரதையுடன் பரிபாலிக்கப்பட்டு வரும் ஶுசியான ஆசாரங்கள், ஆகிய இவையெல்லாம் அவ்விடத்தில் பகவான் ஸந்நிஹிதனாக இருக்கிறான் என்பதை நன்கு விளக்குகின்றன. அங்கு நிறைந்துள்ள விஷ்ணு பக்தியைப் பார்த்தே ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸ்வயமாகவே அங்கு எழுந்தருளத் திருவுள்ளம் பற்றினானோ என்று நினைக்கும்படி அவ்வளவு ரமணீயமாக இருக்கின்றது அந்த ஸந்நிவேஶம்.

அன்று புரட்டாசி சனிக் கிழமையாகவும் ஏகாதஶியாகவும் இருந்தபடியால், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் பெரிய திருமஞ்ஜநம் கண்டருளினர்; விஶேஷித்த ஆராதநமும் நடந்தது. அத்திரு மஞ்சநாவஸரத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீமான் கோகுலதாஸரிடம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன்—கண்ணன்—முதலான எம்பெருமான்களுடைய வைபவங்களை விசேஷமாகவும் விரிவாகவும் நெஞ்சு நெக்குருகக் கனிந்து ஸாதித்தார். கோகுல்தாஸ் ப்ரப்ருதிகள் இந்த ஸ்ரீ ஸூக்திகளைக் கேட்டு ஆநந்தபரிதர்களாயினர். அன்று ராத்திரியில் ஸ்ரீ கண்ணனுக்கு டோலோத்ஸவமும் நடந்தது. இந்தக் கைங்கர்யங்களெல்லாவற்றையும் ஸ்ரீ கோகுல் தாஸ் அளவற்ற உத்ஸாஹத்துடனும் ஶ்ரத்தா பக்திகளுடனும் பூர்த்தி செய்து வைத்ததுடன், அன்று இரவு டோலோத்ஸவ காலத்தில் ஸ்ரீ மதுராந்தகம் பாடஶாலையை உத்தேஶித்து ஆயிர ரூபாயையும் நன்கொடையாக ஸமர்ப்பித்தார். ஒரு மனிதனுக்கு த்ரவ்யம் வருவதும் போவதும் கர்மாயத்தம். அநேக ஸாமாந்ய ஜநங்களுக்கும் யாத்ருச்சிகமாகவே தநம் வந்து சேர்கின்றது; ஆனல் அப்படி வந்து சேரும் தநத்தை ஸத் விஷயத்தில் விநியோகிக்கும் புத்தி விஶேஷம் எல்லாருக்குமே ஜநிக்கிறதில்லை. ஜாயமாந கடாக்ஷம் பெற்று ஸத் ஸங்காதிகளை அடைந்துள்ள சில பாக்ய ஶாலிகளுக்கே அம்மாதிரி புத்தி ஜநிக்கின்றது. அப்படிப்பட்ட பாக்யம் பெற்றவர் இந்த ப்ரபு. ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ கடாக்ஷத்தால் இவருக்கு அந்த ஸாத்விக மநோபாவம் மேன்மேல் பெருகி, ஜகத்தின் ஹிதத்தை உத்தேஶித்து ஸாத்விகர்களால் செய்யப்பட்டு வரும் பகவத் கைங்கர்யரூபமான கார்யங்களில் இவருக்கு நிரர்க்களமாக அந்வயத்தை ஏற்படுத்தி அதனல் இவருக்கு ஸர்வ வித ஶ்ரேயஸ்ஸையும் செய்ய வேண்டுமென்று நாம் ஹார்த்தமாகப் பகவானை ப்ரார்த்திக்கிறேம்.

*　　　*　　　*　　　*

நமது பரதநாட்டில் ஸ்ரீராம க்ருஷ்ண மடமென்று ஒரு பெரிய ஆஸ்தாநம் இருக்கின்றது. அது சற்றேறக்குறைய அறுபது வருஷங்களுக்கு முன் பங்காள தேசத்தில் இருந்த ஸ்ரீராம க்ருஷ்ண பரமஹம்ஸர் என்னும் ஒரு யோகியால் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த மஹான் பகவானுடைய அவதாரமென்றே அவருடைய ஶிஷ்ய வர்க்கத்தாரெல்லாராலும் கொண்

ஸ்வாமி விவேகாநந்தருடைய 50-வது வர்ஷத்தியக் கொண்டாட்டம்

டாடப்படுகிறார். இப்பொழுது அவருடைய காலம் ஆகிவிட்டது; ஆனால் அவரால் ஏற்படுத்தப்பட்ட மடம் ஓங்கி வளர்ந்து இந்தப் பரதநாட்டில் மாத்ரமின்றிக்கே மற்றைத் தேசங்களிலும் பரவி யிருக்கின்றது. ஐந்நூறு ஸந்யாஸிகளுக்குமேல் அந்த மடத்தின் அங்கத்தினர்களாகப் பல விடங்களுக்குச் சென்று அந்தப் பரம ஹம்ஸருடைய ஆஜ்ஞையென்று தம்மால் அங்கீகரிக்கப்பட்டிருக் கும் கார்யங்களை நிர்வஹித்து வருகிறார்கள். அவர்களுடைய முக்ய நோக்கம், கஷ்டப்படும் ஜநங்களுக்கு உதவி செய்வதே. துர்ப்பிக்ஷத்தாலோ ஸாங்க்ராமிக வ்யாதிகளாலோ வேறு அம் மாதிரி கஷ்டங்களாலோ துயரப்படும் ஜநங்கள் இருக்குமிடம் தாமே போய்த் தம்மால் இயலும் மட்டும் த்ரவ்யங்களை ஸம்பாதித்து, தம்முடைய ச்ரமத்தைக் கொஞ்சமேனும் பாராட்டாமல், இவர்கள் மஹா ஜநங்களுக்கு உதவி செய்து வருவதை இப்பொழுதும் நாம் பார்க்கலாம். இவர்களுள் வித்வாந்களாக இருப்பவர்கள் ஆங்காங்குக் கிளை மடங்களை ஏற்படுத்தி, அவ்வவ்விடங்களில் மஹா ஜநங்களுக்கு வேதாந்த வித்யையை உபதேசித்து வருகிறார்கள். ஆர்ய ஸமாஜம் ப்ரஹ்ம ஸமாஜம் தியாஸபிக் கூட்டத்தார் போல இவர்கள் வேதத்தில் சிலபாகங்களை மாத்ரம் ப்ரமாணமாக எடுத்துக் கொண்டு மற்றைப் பாகங்களைத் தள்ளி விடுவதாகத் தெரியவில்லை. வேதம் முழுவதுமே இவர்களுக்கு ப்ரமாணமாம். வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநங்களில் இவர்களுக்கு விச்வாஸ முண்டாம். தத்வ விஷயத்தில் இவர்கள் பெரும்பாலும் அத்வைதிகளே. ஆனாலும் இவர்களைத் தீவ்ரமான அத்வைதிகளென்று சொல்லவும் கூடாது; அபிநிவேசம் மாத்ரம் கொஞ்சம் அதிகமாக அத்வைத பக்ஷத்தில் இருக்கின்றதே தவிர்த்து, அந்த சாஸ்த்ரத்தின் ஸூக்ஷ்மாம் சங்களை ஸாக்ஷாத் அத்வைத ஆசார்யர்கள் போல இவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்று சொல்வது ஸாத்யமில்லை. ஆங்கில பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள வேதாந்த க்ரந்தங்களைப் படித்து, அவைகளின் வாயிலாகவே இவர்கள் ப்ராயேண வேதாந்த ஜ்ஞாநத்தை ஸம்பாதித்திருப்பதாகத் தெரியவருகின்றது. எது எவ்விதம் இருந்தாலும், தாபத்ரயத்தால் வருந்தும் ஜநங்களுக்கு நிஷ்காமமாக உதவி புரிவதில் இவர்களுக்கு இருக்கும் அபிநிவேசத்தையும் அதீந்த்ரிய விஷயங்களில் வேத சாஸ்த்ரத்தையே இவர்கள் ப்ரமாணமாக ஏற்றுக்கொள்வ தையும் பார்க்கும்பொழுது, இவர்கள் உத்தமமான ப்ரசம்ஸைக்கு அர்ஹர்களென்றே நாம் சொல்லத் துணிவோம்.

அந்தப் பரமஹம்ஸரை ஆஸ்ரயித்த முதலிகளுள் **ஸ்வாமி விவேகாநந்தர்** என்பர் ஒருவர். இவர் ஒரு சிறந்த வாக்மி. ஜந்மாந்த்ர வாஸனையாலோ அதுபோன்ற வேறு ஒரு காரணத்தாலோ அவருக்கு ஆங்க்ல பாஷையைக் கையாளுவதில் ஒரு அஸாதாரண ஶக்தி இருந்தது. ஐம்பது வருஷங்களுக்கு முன் அமெரிக்கா தேஶத்தில் நடைபெற்ற ஒரு ஸர்வமத ஸங்கத்திற்கு இவர் போய் நமது வேதாந்தத்திலுள்ள சில தத்வங்களை எடுத்து உபந்யஸித்த பொழுது, இவருடைய உபந்யாஸ க்ரமத்தையும் சொற்பொழிவையும் கேட்ட பாஶ்சாத்யர்க ளெல்லாரும் மிக்க ஆச்சர்யத்தை யடைந்து, இவரைப் பலவாறாக ப்ரஶம்ஸித்து அளவற்ற கௌரவத்துடன் கொண்டாடினதோடு, அங்கிருந்து இவரைப் பல ப்ரதேஶாந்த்ரங்களுக்கு அழைத்துப் போய் அநேக ப்ரஸங்கங்களைச் செய்வித்தார்க ளென்றும், சென்ற சென்ற விடங்களி லெல்லாம் இவருக்கு மிக்க சிறப்பு உண்டாயிற் றென்றும் நாம் அறிகின்றோம். அந்தத் தேஶங்களில் அக்காலத்தில் நமது வேதாந்த ஶாஸ்த்ரம் அவ்வளவாக ப்ரசாரம் அடையவில்லை; ஆத்ம விஷயமான ஜ்ஞாநமும் ஸ்தூலமாக மாத்ரம் அவர்களிடம் இருந்ததே தவிர்த்து, நமது ஶாஸ்த்ரங்களில் விளக்கி யிருக்கிறபடி ஸூக்ஷ்மமாக அவர்களால் அது அறியப்படாமல் இருந்தது. ஆகையால் அவர்களுக்கு இந்தப் புதிய உபதேஶத்தைக் கேட்டவுடன் பெரியதொரு ஆநந்தம் ஜநித்தது. உத்தமமான ரத்நத்திற்கு ஸ்வச்சமான ஸ்வர்ணத்தில் இழைப்பது ஶோபாதிக்யத்தைக் கொடுப்பது போல, உயர்ந்த உபநிஷத் தத்வங்களுக்குப் பேச்சு வாய்ந்திருந்த இந்த ஸ்வாமியின் சொல்லழகு ஒப்பற்ற ஓர் ஒளியைக் கொடுத்தது. இந்த ஸ்வாமிக்கு இயற்கையாக மற்றொரு குண விஶேஷம் உண்டு. அதாவது அந்யாத்ருஶமான ஒரு தீரத்தன்மை. எந்த விஷயங்களை எடுத்தாலும், உத்தமமான க்ஷத்ரிய வீரனால் விடப்பட்ட பாணம் போல, இவருடைய முகத்திலிருந்து ப்ரவஹிக்கும் சொற்கள் எவ்வித தழதழப்புமின்றிக்கே லக்ஷ்யத்தில் போய் ஆழமாகப் பதியும் ஶக்தி பெற்றிருந்தன. அவருடைய உபந்யாஸங்க ளெல்லாம் புஸ்தக ரூபமாக வெளி வந்திருக்கின்றன; அவைகளைப் படித்துப் பார்த்தால் அவருடைய பெருமை நன்கு விளங்கும்.

இவர்களைப் பற்றி நாம் இப்பொழுது இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கத் துணிந்ததற்கு ப்ரஸக்தி என்னவென்றால், பத்து திநங்களுக்குமுன் இந்தச் சென்னைப் பட்டணத்தில், இந்த

ஸ்வாமியால் செய்யப்பட்ட திக் விஜயத்தின் ஐம்பதாவது ஆண்டைக் கொண்டாடுவதற்காகப் பெரியதொரு ஸங்கம் சேர்ந்தது. அதில் அநேக பெரியார்கள் அன்வயித்திருந்தார்கள். தேசாந்தரங்களில் அநேக பாஸ்சாத்ய வித்வாம்களால் பெரிய வேதாந்தி என்று கௌரவிக்கப்பட்டுவரும் ஸர் எஸ். ராதா க்ருஷ்ணன் என்பவர் அந்த ஸங்கத்தில் அத்யக்ஷராக இருந்தார். சென்னைப் பட்டணத்தில் ஜ்ஞானத்தாலும் வயஸ்ஸாலும் லோகா நுபவத்தாலும் மஹான்களென்று பஹுமானிக்கப்பட்டிருப்பவர் களுள் பலர் அந்த ஸங்கத்தில் அன்வயித்து ப்ரஸ்துத விஷயத் தைப் பற்றிப் பேசினார்கள். ஸ்ரீ பரமஹம்ஸருடைய தயையையும், ஏழை ஜனங்களுக்கு உபகாரம் செய்வதில் அவருக்கு இருந்த ஊக் கத்தையும், அவருடைய ஸமத்வத்தையும் இன்னும் இம்மாதிரி யான ஆத்ம குணங்களின் பூர்த்தியையும் பற்றி அவர்களெல்லாரும் புகழ்ந்து பேசினார்களே தவிர்த்து, அவர் ஹிந்து மதத்தை தழுவி னவர் என்பதையும் அதில் அவருக்கு விசேஷித்த அபிமான மிருந் தது என்பதையும் விளக்கக்கூடிய வார்த்தை ஒன்றுகூட அவர் களுடைய முகத்திலிருந்து வெளிவரவில்லை. ஹிந்து மதத்திற்கும் மற்றை மதங்களுக்குமுள்ள விசேஷம் நமது அஸாதாரண ஆசா ரங்களே. தைவமொன்று உண்டென்றும், அதனிடத்தில் பக்தி யைச் செய்யவேண்டுமென்றும் எந்த மதம் போதிக்கவில்லை? தயை முதலிய ஆத்ம குணங்களுக்கு எந்த மதம் ப்ராதாந்யம் கொடுக்க வில்லை? நாமும் அவ்வளவுடன் நின்று விட்டால், நாம் எவ்விதத் தில் மற்றை மதஸ்தர்களைக் காட்டிலும் வேறு பட்டவர்களா வோம்? நம்மை ஹிந்துக்களென்றும் வேதத்திற்குக் கட்டுப்பட்ட வர்களென்றும் எப்படி நாம் சொல்லிக்கொள்ளக்கூடும்? வர்ணா ஸ்ரம தர்மமன்றோ நம்முடைய மதத்தின் அஸாதாரண அடையா ளம்? நமது மஹர்ஷிகளெல்லாரும், அந்தத் தர்மத்தின் ஒழுங் கான அநுஷ்டானத்தினாலன்றோ ப்ரஜைகளுக்கு ஸகலவித க்ஷேம மும் ஜனிக்குமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள்? பரமஹம்ஸரும் அவருடைய முக்ய ஸிஷ்யரான ஸ்வாமி விவேகானந்தரும் ஹிந்து மதத்தை நிலை நிறுத்துவதற்காக அவதரித்த புருஷர்களல்லவா? அவர்களுடையப் பெருமையைப் பாராட்டவே இந்தப் பெரிய ஸங்கம் சேர்க்கப்பட்டது என்பது உண்மையானால், 'அந்த மஹான்கள் இருவரும் வர்ணாஸ்ரம தர்மத்தின் அநுஷ்டானமே ஹிந்து மதத்தின் அருமையான உபதேசம் என்பதைச் சென்ற விடங்களிலெல்லாம் உத்கோஷித்து வந்தார்கள்' என்றும், அதை

நாமெல்லாரும் எவ்விதக் குறைவுமின்றிக்கே அநுஷ்டித்து வரு வதே அந்த மஹாங்களாற் செய்யப்பட்ட மஹோபகாரத்திற்கு ஒருவித கைம்மாறு மென்றும், இவ்வாறன்றோ அந்த ஸங்கத்தின் பேச்சு இருத்தல் வேண்டும்? இப்படி ஒரு வார்த்தைகூடப் பேசா மல்,நம்முடைய பெரியோர்களின் பெருமையை நாம் கொண்டாடு கிறோமென்று சொல்வது வீண் வார்த்தை ஆகமாட்டாதா?

இதன் உண்மை என்னவென்றால், இக்காலத்தில் ஆங்கில ஸம்ஸ்காரம் பெற்றிருக்கும் பெரியோர்களுள் பலருக்கு, 'கேவ லம் மநோபாவம் ஶுத்தமாக இருப்பது பகவத் க்ருபைக்குப் போதுமான காரணமாக மாட்டாதா? கர்மாநுஷ்டாநங்களால் கிடைக்கக்கூடியது என்ன?' என்னும் எண்ணம் த்ருடமாக ஜநித் திருக்கின்றது. ஜந்மாந்தர ஸுக்ருதத்தால் ஒருவனுக்கு ஶுத்த மான மநஸ் ஜநிக்கலாம். ஆனல் அது நிலை பெற்று நிற்பதற் குப் பலாபிஸந்தி யின்றிக்கே அகர்த்ருத்வாநுஸந்தாநத்துடன் ப்ரதி திநம் செய்யப்பட்டு வரும் வர்ண தர்மங்கள் ஆஶ்ரம தர்மங்கள் இவைகளின் அநுஷ்டாநம் அவஶ்யம் அபேக்ஷிதம் என்பதை அவர்கள் மறந்தார் போலும். ஸத்வகுணம் மேலிட்டு நிற்கும் பர்யந்தம் மநஸ்ஸு ஶுத்தமாக இருக்கும்; அந்த ஸத்வம் நழு வாமல் இருப்பதற்குக் கர்மாநுஷ்டாநம் மிக உபகாரகம். "**शुद्धेन मनसा ग्राह्यः**" [ஆத்ம தத்வமானது ஶுத்தமான மநஸ்ஸை யுடைய வனுக்கே ப்ரகாஶிக்கும்] என்பது முதலான வாக்யங்களை மாத்ரம் சொல்லிக்கொண்டு,

"**तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ ।**
ज्ञात्वा शास्त्रविधानोक्तं कर्म कर्तुमिहार्हसि ॥"

[எது உபாதேயம் எது அநுபாதேயம் என்பதை நிர்ணயிக்கும் விஷயத்தில், ஶாஸ்த்ரமே ப்ரமாணம். ஆகையால் வேத ஶாஸ்த் ரங்களால் ப்ரதிபாதிக்கப்படும் புருஷோத்தமனாகிற தத்வத்தையும் அவனை அடைவிக்கும் கர்மங்களையும் உள்ளபடி அறிந்துகொண்டு நீ கர்மத்தைச் செய்ய யோக்யனாகிறாய்] இத்யாதியான ப்ரபல ப்ர மாணங்களைக் கைவிடுவது புத்திமத் க்ருத்யமாகுமா? உபநிஷத்தி லிருந்து ஒரு வாக்யத்தைச் சொல்வதால் மாத்ரம் ஒருவன் உண் மையான வேதாந்தி ஆகிவிடுவனா? ஒரு ஶாஸ்த்ரத்தில் தமக்கு இஷ்டமாய் இருப்பதை மாத்ரம் அங்கீகரித்து அநிஷ்டமானதைக் கைவிடுவது ந்யாயத்திற்கு ஒத்ததா? எதை உட்கொண்டால் என்ன? எவனுடன் உட்கொண்டால் என்ன? ஶிகை இருந்தால் என்ன? இராவிட்டால் என்ன? ஸந்த்யா கார்யங்களைச் செய்

தால் என்ன? அவைகளைச் செய்யாவிட்டால் என்ன?' இம்மாதிரி யான எண்ணங் கொண்டவர்கள் இவர்களெல்லாரும். ஆகையால் தான் அம்மாதிரி பேசினுர்கள் என்பதுதான் உண்மை.

*　　*　　*　　*　　*

"காலோ ஹி து³ரதிக்ரம:" பகவத் ஸங்கல்பத்தை எவர் தடுக்க ஶக்தராவார்? ஸமீப காலத்தில் இந்தத் தக்ஷிண தேஶத்தில் மிக ப்ரஸித்தர்களாயிருந்த மூன்று பண்டித ரத்நங்கள் திடீரென்று இந்த லோகத்திலிருந்து மறைந்து விட்டார்கள்.

ஓர் ஶோசநீயமான விஷயம்

அபிநவபட்ட பாணரென்று பிருது பெற்றிருந்த மஹா கவி ஸ்ரீ ராயம்பேட்டை க்ருஷ்ணமாசார்யர் ஒருவர், கணபதி அக்ரஹாரம் ப்ரஹ்மஸ்ரீ வித்வாந் குப்பு ஸ்வாமி ஶாஸ்த்ரிகள் மற்றொருவர், ப்ரம்மஸ்ரீ மஹா வித்வாந் தண்டபாணி தீக்ஷிதர் மூன்றுவது, ஆக இம் மூன்று பெயர்களும், ஒருவரோடொருவர் ஸங்கேதம் செய்து கொண்டதுபோல இரண்டொரு மாஸ காலத்திற்குள் ஒருவர் பின் ஒருவராகச் சென்றுவிட்டார்கள். மூன்று பெயரும் மஹா மஹோபாத்யாயப் பட்டம் பெற்றவர்கள். ஸ்ரீ க்ருஷ்ணமாசார்யருக்கு ஶாஸ்த்ர ஜ்ஞாநத்தோடு உயர்ந்த கவந சக்தி உண்டு; ப்ரஹ்ம ஸ்ரீ ஶாஸ்த்ரிகள் ஸம்ஸ்க்ருத பாஷையில் ப்ராவீண்யத்துடன் ஆங்கில பாஷையிலும் உயர்ந்த பரீக்ஷை தேறினவர்; தீக்ஷிதர் அவர்களுடைய வ்யாகரண ஶாஸ்த்ர பாண்டித்யம் ஜகத் ப்ரஸித்தம். இப்படிப்பட்ட இந்த மூன்று ரத்நங்களையும் நாம் இழந்துவிட்டோம். இவர்களுடைய ஸ்தாநத்தில் எவர்கள் வந்து ஜகத்திற்கு உபகரிக்கப்போகிறுர்கள் என்பது தெரியவில்லை.

ப்ரமுகர்களான பல ஸ்ரீ வைஷ்ணவர்கள் உதவியால் பிரஸ் ஆரம்பித்துளோம்!

க்ரந்தம், தேவநாகரம் ஹிந்தி,
தமிழ், ஆங்கிலம் அச்சு வேலைகளும்,
எவ்வித ரூலிங், பைண்டிங் வேலைகளும்,

குறித்த காலத்தில் விரைவாகவும் நன்றுகவும் செய்து கொடுப்போம்.

ஆற்காடு பிரஸ், 27, புது அக்ரஹாரம், விழுப்புரம் (S.I.R.)

☞ எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஆதரவையுங் கோருகிறோம்.

नाचिकेतमुपाख्यानं मृत्युप्रोक्तं सनातनम् ।
उक्त्वा श्रुत्वा च मेधावी ब्रह्मलोके महीयते ॥ १६ ॥

य इदं परमं गुह्यं श्रावयेद्ब्रह्मसंसदि ।
प्रयतः श्राद्धकाले वा तदानन्त्याय कल्पते तदानन्त्याय कल्पते ॥१८

इति तृतीयवल्ली ।

इति प्रथमोऽध्यायः ॥

---

16 - 17. இந்த மந்த்ரங்களில் பல ஶ்ருதி சொல்லப்படுகின்றது.

[ப - ரை] **मृत्युप्रोक्तम्** - யமதர்மராஜனால் சொல்லப்பட்டதும், **सनातनम्** - நித்யமானதுமான, **नाचिकेतमुपाख्यानम्** - நசிகேதஸ் ஸம்பந்தமான உபாக்யாநத்தை, **उक्त्वा** - சொல்லியும், **श्रुत्वा च** - கேட்டும், **मेधावी** - புத்திஶாலியாகிற [உபாஸகன்], **ब्रह्मलोके** - ப்ரஹ்ம லோகத்தில், **महीयते** - ப்ரகாஶித்துக்கொண்டிருக்கிறான்.

यः - எவன், **इदं परमं गुह्यम्** - பரம ரஹஸ்யமான இந்த உபாக்யாநத்தை, **ब्रह्मसंसदि** - ப்ராஹ்மண ஸமாஜத்திலாவது, **श्राद्धकाले वा** - ஶ்ராத்த காலத்திலாவது, **प्रयतः** - ஶுத்தனாக இருந்துகொண்டு, **श्रावयेत्** - ஶ்ரவணம் செய்விக்கிறானோ, [அவன்] **तदानन्त्याय** - மோக்ஷத்திற்கு, **कल्पते** - யோக்யனாகிறான்.

மூன்றாவது வல்லி முற்றிற்று.

முதல் அத்யாயம் முற்றுப்பெற்றது.

श्रीः

अथ द्वितीयाध्यायः ।

हरिः ओम् ।

पराञ्चि खानि व्यतृणत्स्वयंभूस्तस्मात्पराक्पश्यन्ति नान्तरात्मन् ।
कश्चिद्धीरः प्रत्यगात्मानमैक्षदावृत्तचक्षुरमृतत्वमिच्छन् ॥ १ ॥

श्रीः

இரண்டாவது அத்யாயம்

கீழே அதிகாரி புருஷர்களைப் பார்த்து 'ஆத்ம ஜ்ஞாநத்தை நீங்கள் பெறவேண்டும்; அஜ்ஞாநமாகிற தூக்கத்தை விடுங்கள்' என்று ப்ரோத்ஸாஹநம் செய்தும், ஒருவரும் ஆத்ம ஸ்வரூபத்தை அறிவதற்கு முயற்சி செய்யவில்லையே என்று வருந்தி, மறுபடியும் அந்த ஆத்ம ஸ்வரூபத்தை ப்ரகாராந்தரமாக இந்த வல்லியில் விளக்குகிறார்.

1. [ப - ரை.] **स्वयंभूः** - [ஸ்வதந்த்ரனாக இருக்கும்] ஈஶ்வரன், **खानि** - இந்த்ரியங்களை, **पराञ्चि** - வெளியிலுள்ள பொருள்களில் மாத்ரம் ப்ரஸரிப்பவைகளாக, **व्यतृणत्** - ஸ்ருஷ்டித்தார். **तस्मात्** - அந்தக் காரணத்தால், **पराक्** - வெளியில் இருக்கும் பொருள்களையே, **पश्यन्ति** - [ஜநங்கள்] பார்க்கிறார்கள்; **अन्तरात्मन्** - உள்ளே இருக்கும் ஆத்மாவை, **न** [**पश्यन्ति**] - பார்க்கிறார்களில்லை. **कश्चिद्धीरः** - [லோக ஸ்வபாவம் இவ்வாறு இருக்கையிலும்] எவனோ ஒரு தீரன், **आवृत्तचक्षुः** - திருப்பப்பட்ட கண்களை [இந்த்ரியங்களை] உடையவனாக இருந்துகொண்டு, **अमृतत्वम्** - மோக்ஷத்தை, **इच्छन्** - விரும்புகிறவனாய், **प्रत्यगात्मानम्** - ப்ரத்யக்கான [அதாவது: தனக்கே தான் தோற்றும் திறமையை யுடைய] ஆத்மாவை, **ऐक्षत्** - பார்க்கிறான்.

स्वयंभूः - மற்றைப் பொருள்களிடமிருந்து உத்பத்தியைப் பெறாதவன்; [அதாவது: ஸ்வயமாகவே இருப்பவன், பிறப்பற்றவன்]. இவ்விடத்தில் இந்தப் பதம் 'ஸ்வதந்த்ரன்' 'இச்சிக்கிறபடி கார்யங்களைச் செய்பவன்' என்னும் குறிப்பை யுடையது. 'ஐயோ! இந்த இந்த்ரியங்களைப் பராக்குக்களாக ஸ்ருஷ்டிப்பானேன்? ப்ரத்யக்குக்களாக ஸ்ருஷ்டித்திருக்கக்கூடாதா?' என்று ஆசார்யன் ஶோகிக்கிறான். அப்படி ஶோகிக்கும்பொழுது, 'அவன் ஸ்வதந்த்ரனாயிற்றே; அவனை இவ்விதம் ஏன் ஸ்ருஷ்டித்தாய் என்று கேட்பதற்கு யார் ஶக்தன்?' என்பதை ஸூசிப்பிக்கிறது இந்தப் பதம்.

व्यतृणत् - 'ஸ்ருஷ்டித்தார்' என்பதை இதற்குப் பொருளாகக் கூறியிருக்கிறோம். ஆனால் '**तृद्**' என்னும் தாதுவுக்கு 'ஸ்ருஷ்டிக்கிறது'

पराचः कामाननुयन्ति बालास्ते मृत्योर्यन्ति विततस्य पाशम् ।
अथ धीरा अमृतत्वं विदित्वा ध्रुवमध्रुवेष्विह न प्रार्थयन्ते ॥ २ ॥

என்பது பொருள் அன்று; அதற்கு 'ஹிம்ஸிப்பது' என்பதே பொருள். நிர்வேதப்பட்டுச் சொல்வதால், 'இவ்விதம் ஹிம்ஸிக்கிறனே' என்று பேசுவது உபபந்நமாகும்.

पराञ्चि-இது **'पराक्'** என்னும் ஶப்தத்தின் பஹுவசநம் [பன்மை]; இவ்விடத்தில் த்விதீயா விபக்தி [இரண்டாம் வேற்றுமை]. **परान् अञ्चन्ति पराञ्चि** [வெளியில் இருக்கும் பொருள்களை நோக்கிச் செல்லும். அதாவது: விஷயீகரிக்கும்]. இதற்கு எதிரிடையான ஶப்தம் **'प्रत्यक्'** என்பது. இதற்கு **प्रतीपमञ्चति** [வெளியில் ப்ரஸரியாமல் வேறு பக்கமாகச் செல்லும், அதாவது: உள்நோக்கிச் செல்லும்] என்பது பொருள். இந்தக் காரணத்தைக் கொண்டே நாம் ஆத்மாவை 'ப்ரத்யக்' என்று வ்யவஹரிக்கிறோம். ஆத்ம விஷயத்தில் உள் நோக்கிச் செல்வதாவது தனக்குத் தான் தோற்றுகையே. இந்தத் தோற்றம் ஜீவாத்மா பரமாத்மா இவர்களிருவருக்கும் உண்டு; அதாவது: சைதந்யத்தை யுடைய வஸ்துக்களெல்லாவற்றுக்கும் ஸாதாரணம். ஆனால் 'சைதந்யம்' என்பதற்கும் 'ப்ரத்யக்த்வம்' என்பதற்கும் வாசியுண்டு. ஜ்ஞாநத்திற்கு ஆஶ்ரயமா யிருப்பதைச் 'சேதநன்' என்றும், தர்ம பூதஜ்ஞாந நிரபேக்ஷமாகக் கேவலம் 'நான்' என்று உண்டாகும் தோற்றமுடையதை 'ப்ரத்யக்' என்றும் வ்யவஹரிக்கிறார்கள்.

अन्तरात्मन् - அந்தராத்மாவை. இது வைதிக ப்ரயோகம். லௌகிகத்தில் இது **'अन्तरात्मानम्'** என்று இருத்தல் வேண்டும்.

ऐक्षत् - இந்தத் தாது ஆத்மநேபதம்; ஆகையால் **ऐक्षत** என்பது சரியான ரூபம். வேத ப்ரயோகமாகையால், பரஸ்மைபத ரூபம் கிடைத்தது. தவிர, இது இறந்தகால வினை. இவ்விடத்தில் நிகழ்காலத்தைக் குறிக்கின்றது. இதுவும் சாந்தஸம்.

---

2. வெளியிலுள்ள வஸ்துக்களில் இந்த்ரியங்கள் சென்றால் என்ன தோஷம் என்றால், அவைகளை யடைய விரும்புமவர்கள் அஜ்ஞர்களே என்று நிந்திக்கிறார்.

[ப - ரை.] **पराचः** - பாஹ்யங்களான, **कामान्** - போகங்களை, **बालाः** - அல்ப ப்ரஜ்ஞையை யுடையவர்களே, **अनुयन्ति** - பின்தொடருகிறார்கள். **ते** - அவர்கள், **विततस्य** - விஸ்தீர்ணமான [அதாவது: நீடித்து நிற்கும்], **मृत्योः** - ஸம்ஸாரத்தின், **पाशम्** - பந்தத்தை, **यन्ति** - அடைகிறார்கள். **अथ धीराः** - தீரர்களோ வென்றால், [**प्रत्यगात्मन्येव** - ப்ரத்யகாத்மாவி னிடத்திலேயே], **ध्रुवम्** - ஶாஶ்வதமான, **अमृतत्वम्** - மோக்ஷத்தை, **विदित्वा** - அறிந்து, **इह** - இந்த ஸம்ஸார மண்டலத்தி

येन रूपं रसं गन्धं शब्दान् स्पर्शांश्च मैथुनान् ।
एतेनैव विजानाति किमत्र परिशिष्यते ॥ एतद्वै तत् ॥ ३ ॥

स्वप्नान्तं जागरितान्तञ्च उभौ येनानुपश्यति ।
महान्तं विभुमात्मानं मत्वा धीरो न शोचति ॥ ४ ॥

य इदं मध्वदं वेद आत्मानं जीवमन्तिकात् ।
ईशानं भूतभव्यस्य न ततो विजुगुप்सते ॥ एतद्वै तत् ॥ ५ ॥

உள்ள, **अध्रुवेषु** - நஶ்வரங்களான [பதார்த்தங்க ளொன்றிலும்], **न प्रार्थयन्ते** - விருப்பத்தைச் செய்யமாட்டார்கள்.

---

3. இனி ஆத்ம ஸ்வரூபத்தை பஹு ப்ரகாரமாக விளக்குகிறுர். முதலில் ஸகல விஷயங்களும் ஆத்ம ஸ்வரூபத்தால் அநுக்ரஹிக்கப் பட்டே தம் தம் ஶக்தி விஶேஷத்தை அவை பெறுகின்றனவென்று சொல்லப்படுகின்றது.

[ப - ரை.] **येन एतेनैव** - எதைக் கொண்டே [அதாவது: எதை ஸாதநமாகக் கொண்டே; எதனுடைய அநுக்ரஹ பலத்தாலேயே], **रूपं रसं गन्धं शब्दान् स्पर्शान् मैथुनांश्च** - ரூபம் ரஸம் கந்தம் ஶப்தம் ஸ்பர்ஶம் இன்னும் மிதுந நிமித்தகமாக உண்டாகும் ஸுக விஶேஷங்கள் இவை எல்லாவற்றையும், **विजानाति** - [ஜந்துவானது] அறிகின்றதோ, [அந்த ஆத்ம தத்வத்தையே தீரன் பார்க்கிறுன்]. **अत्र** - இங்குள்ள பதார்த் தங்களுள், **किम्** - எது, **परिशिष्यते** - [அதனுல் ப்ரகாஶிக்கப்படத் தகாத தாக] எஞ்சி நிற்கின்றது? **तत्** - கீழே ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கும் பரம ப்ராப்யமான அந்த வஸ்துவானது, **एतद्वै** - இதுவே [இவ்விடத்தில் ப்ரதிபாதிக்கப்படும் ஆத்ம ஸ்வரூபமே].

---

4. ஸ்வப்நத்தில் தென்படு மவைகளும், விழித்துக் கொண்டிருக் கும் காலத்தில் தென்படும் பதார்த்தங்களும், அந்தப் பரமாத்மாவின் அநுக்ரஹம் பெற்றே தம் தம் கார்யங்களைச் செய்ய ஶக்தங்களாகின்றன வென்று இந்த மந்த்ரத்தில் சொல்லப்படுகின்றது.

[ப - ரை.] **स्वप्नान्तम्** - ஸ்வப்நத்தில் காணப்படும் ப்ரபஞ்சமும், **जागरितान्तञ्च** - விழித்துக் கொண்டிருக்கும் பொழுது தென்படும் ப்ரபஞ்ச மும், **उभौ** - இவை இரண்டையும், **येन** - எந்த ஸாதநத்தால், **अनुपश्यति** - [லோகமானது] பார்க்கிறதோ, [**तम्** - அந்த], **महान्तं विभुमात्मानम्** - பெரிய விபுவான ஆத்மாவை, **मत्वा** - உபாஸித்து, **धीरः** தீரனுனவன், **न शोचति** - ஸம்ஸாரமாகிற துக்கத்தை அடைகிறுனில்லை.

---

5. இவ்வாறு பரமாத்மாவை அறிந்தால், மோக்ஷத்தைப்

यः पूर्वं तपसो जातमद्भ्यः पूर्वमजायत ।
गुहां प्रविश्य तिष्ठन्तं यो भूतेभिर्व्यपश्यत । एतद्वै तत् ॥ ६ ॥

பெறலாமென்று சொல்லவிட்டு, அப்படி அறிந்தவனை நிந்திக்கக்கூடாதென்று அவனைப் புகழ்ந்து பேசுகிறார்.

[ப - ரை.] **यः** - எவன், **इदम्** - இந்த, **मध्वदम्** - மதுவென்று சொல்லக்கூடிய கர்ம பலத்தை அநுபவிக்கும், **आत्मानम्** - ஜீவாத்மாவையும், **जीवमन्तिकात्** - அந்த ஜீவாத்மாவுக்கு ஸமீபத்திலுள்ள [அந்த ஜீவாத்மாவுடன் ஒரே ஹ்ருதய குஹையில் புகுந்து], **भूतभव्यस्य ईशानम्** - இறந்த காலம் நிகழ் காலம் எதிர் காலம் ஆக மூன்று காலங்களிலும் இருக்கும் சேதநா சேதநவர்க்கம் முழுவதையும் நியமிக்கிறவனாக இருக்குமவனையும், **वेद** - அறிந்து உபாஸிக்கிறானோ, **ततः** - அவனை, **न विजुगुप्सते** - நிந்திக்கக்கூடாது. [அதாவது: அவனிடத்தில் ஏதாவது தோஷம் தென்பட்டபோதிலும், அவனுடைய ஜ்ஞாந மாஹாத்ம்யத்தைப் பார்த்து அவனைப் பூஜிக்கவேண்டுமே தவிர அவனை இகழக்கூடாது என்பது கருத்து] **एतद्वै तत्** - அது இதுதான்.

---

6. ஜகத்தின் ஸ்ருஷ்டி கர்த்தா வென்று க்யாதி பெற்றுள்ள ஸாக்ஷாத் சதுர்முக ப்ரஹ்மாவும், இந்தப் பரமாத்மாவின் கடாக்ஷம் பெற்றே தமது பெருமையை அடைந்திருக்கிறார் என்று இந்த மந்த்ரம் சொல்லுகின்றது.

[ப - ரை.] **यः** - எவன் [எந்தச் சதுர்முக ப்ரஹ்மா], **अद्भ्यः पूर्वम्** - ஜலத்திலிருந்து முதல் முதலில், **अजायत** - ஜநித்தாரோ, [**तम्** - அந்த], **तपसः** - ஸங்கல்ப மாத்ரத்தாலே, **पूर्वं जातम्** - [மற்றைத் தேவதைகளுக்கெல்லாம்] முன்னதாகப் பிறப்பைப் பெற்றும், **गुहां प्रविश्य** - ஹ்ருதய குஹையில் ப்ரவேஶித்து, **भूतेभिः** - தேஹம் இந்த்ரியம் முதலியவைகளுடன் கூடியும், **तिष्ठन्तम्** - இருக்கும் [சதுர்முக ப்ரஹ்மாவை], **यः** - எந்தப் பரமாத்மாவானவன், **व्यपश्यत** - கடாக்ஷித்தானோ ['இந்தச் சதுர்முகன் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கட்டும்' என்று அநுக்ரஹித்தானோ], **तत्** - அந்தப் பரப்ரஹ்மம், **एतद्वै** - இதுதான்; [இவ்விடத்தில் ப்ரதிபாதிக்கப்படுவது தான்].

अद्भ्यः पूर्वमजायत - முதல் முதலில் ஜலம் ஸ்ருஷ்டிக்கப்பட்டதென்றும், அந்த ஜலத்தில் வீர்யத்தைச் செலுத்தின பிறகு அதில் ஸ்வர்ணமயமான ஓர் அண்ட முண்டாயிற்றென்றும், அதில் சதுர்முக ப்ரஹ்மா உண்டானார் என்றும் ஸ்ம்ருதிகள் சொல்லுகிறபடியால், ப்ரஹ்மாவை ஜலத்திலிருந்து உண்டானதாகச் சொல்வது உபபந்நமே. ப்ரஹ்மா உண்டாவதற்கு முன் பகவான் தனது ஸங்கல்பத்தால் பஞ்ச பூதங்களை

या प्राणेन संभवत्यदितिर्देवतामयी ।
गुहां प्रविश्य तिष्ठन्ती या भूतेभिर्व्यजायत ॥ एतद्वै तत् ॥ ७ ॥

ஸ்ருஷ்டிக்ததை ஸமஷ்டி ஸ்ருஷ்டியென்றும், ப்ரஹ்மா உண்டான பிறகு ஏற்பட்ட ஜகத் ஸ்ருஷ்டியை வ்யஷ்டி ஸ்ருஷ்டி யென்றும் சொல்வார்கள். இவ்விடத்தில், சதுர்முகனை ஸமஷ்டி ஸ்ருஷ்டிக்குப் பிறகும் வ்யஷ்டி ஸ்ருஷ்டிக்கு முன்னும் உண்டானு ரென்பது சொல்லப்படுகிறது.

भूतेभिः - இது வைதிக ரூபம். லோகத்தில் **भूतैः** என்றே ரூபம் ஏற்படும்.

---

7. 'ஜீவ வர்க்கம் முழுவதும் அந்தப் பரப்ரஹ்மத்தையே ஆத்மாவாக உடைத்தா யிருக்கின்றது. அதாவது: ஜீவவர்க்கம் முழுவதும் தங்கள் தங்கள் கார்யங்களைச் செய்வதில் தமக்கு இருக்கும் அஸாதாரண ஶக்தியை அந்தப் பரமாத்மாவின் அநுக்ரஹ விஶேஷத்தாலேயே பெற்றிருக்கின்றது' என்பது இந்த மந்த்ரத்தின் விஷயம்.

[ப - ரை.] **या अदितिः** - கர்ம பலத்தை அநுபவிக்கும் யாதொரு ஜீவனானது, **प्राणेन सम्भवति** -ப்ராணனுடன் கூடி யிருக்கிறதோ, [**या** - எந்த ஜீவனானது], **देवतामयी** - இந்த்ரியங்களுக்கு அதீநமான போகத்தை உடைத்தாயிருக்கின்றதோ, [**या** - எந்த ஜீவனானது,] **गुहां प्रविश्य तिष्ठन्ती** - [ஹ்ருதயமாகிற] குஹைக்குள் ப்ரவேஶித்து நிற்கின்றதோ, **या** - எதானது, **भूतेभिः** - ஐந்து பூத மயமான தேஹத்துடன் கூடியதாய், **व्यजायत** - பலவிதமாக ஜநிக்கின்றதோ, **एतद्वै** - அந்த [ஜீவனும்], **तत्** - அந்த ப்ரஹ்மத்தையே அந்தர்யாமியாக உடைத்தா யிருக்கின்றது.

अदितिः - இந்த ஶப்தமானது தேவர்களுடைய மாதாவாகிற 'அதிதி' என்பவளுக்குப் பெயர்; வேதங்களில் 'பூமி'யையும் குறிக்கும். இவைகளே இந்த ஶப்தத்திற்கு ப்ரஸித்தமான பொருள்கள். ஆனால், இந்தப் பொருள் ஒன்றும் இவ்விடத்திற்கு ஸங்கதமாக மாட்டாது. அவர்களுக்கு மநுஷ்யர்களுடைய ஹ்ருதயமாகிய குஹையில் ப்ரவேஶம் ஸம்பவிக்கமாட்டாதன்றோ? இவ்விடத்திலோ 'அதிதி' என்று பேசப்படும் வஸ்துவுக்கு **'गुहां प्रविश्य तिष्ठन्ती'** [குஹையில் ப்ரவேஶித்திருக்கின்றது] என்று குஹா ப்ரவேஶம் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தக் குஹா ப்ரவேஶ வ்யபதேஶம், **"आत्मा गुहायान्निहितः"** [ஆத்மா குஹையில் இருக்கின்றது], **"यो वेद निहितं गुहायाम्"** [எவன் குஹையில் இருப்பவனை உபாஸிக்கிறானோ], என்கிறபடி ஆத்ம வஸ்துவுக்கே ப்ரஸித்தம். ஆகையால், இவ்விடத்தில் 'அதிதி' என்னும் ஶப்தம் 'ஆத்மா' என்று பொருள் பெற்றிருப்பதாக வ்யாக்யாநம் செய்யப்படுகின்றது. அந்த அர்த்தம் எப்படிக் கிடைக்கின்றது என்றால், அந்தப் பதத்தின் தாதுவின் அர்த்தத்தைப் பார்த்

தால் அது விளங்கும். "अत्तीति अदितिः" [எது சாப்பிடுகிறதோ : (अत्ति), அதாவது: அநுபவிக்கிறதோ, அது அதிதி]. எவற்றை அநுபவிக்கின்றது என்றால் : கர்ம பலங்களை அநுபவிக்கின்றது என்று சொல்லி, 'ஜீவன்' என்னும் அர்த்தத்தைச் செய்கிறார்கள். "ऋतं पिबन्तौ सुकृतस्य लोके गुहां प्रविष्टौ" என்னும் இந்த உபநிஷத்தின் முதல் அத்யாயம் மூன்றாவது வல்லியின் முதல் மந்த்ரத்தைப் பார்க்கவும். ஆனால், அவ்விடத்தில் பரமாத்மாவுக்கும் குஹா ப்ரவேசம் சொல்லப்பட்டிருக்கிறபடியால், இவ்விடத்தில் ஏன் பரமாத்மாவைப் பொருளாகக் கொள்ளக் கூடாது? என்று ஒரு சங்கை ஜநிக்கலாம். ப்ராணனுடன் இருக்கின்றது என்றும், இந்த்ரியாதீநமான போகங்களை உடைத்தா யிருக்கின்றது என்றும், ப்ருதிவீ முதலிய பூதங்களுடன் கூடிய பல தேஹங்களை எடுத்துக்கொள்ளுகின்றது என்றும் இவ்விடத்தில் சொல்லப்பட்டிருப்பதால், அந்தப் பொருள் உபபந்ந மாகமாட்டாது. ஆகையால் ஜீவனே இவ்விடத்தில் பேசப்படுகிறான் என்பது ஸித்தம்.

இப்படி ஜீவாத்மாவை ப்ரஸ்தாவித்துவிட்டு, 'एतद्वै तत्' [இதுதான் அந்தப் பரமாத்மா] என்று சொன்னால் 'அப்படிச் சொல்வது ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு ஐக்யம் சொன்னதாகாதோ? அது சாஸ்த்ர விருத்தமன்றோ?' என்று ஒரு சங்கை ஜநிக்கலாம். அம்மாதிரியான சங்கைக்கு இடம் கொடாமல் இருக்கும் பொருட்டே 'तत्' என்பதற்கு 'அதுவே' என்று அர்த்தம் சொல்லாமல், அந்தப் பரமாத்மாவை ஆத்மாவாக உடையதே' என்று விவரணம் செய்யப்பட்டிருக்கின்றது. 'இப்படி அர்த்தம் செய்வதற்கு ப்ரமாணம் உண்டோ? சரீரத்தைச் சொல்லும் சப்தம் சரீரி பர்யந்தம் குறிப்புடையதாகும் என்று ஒரு ந்யாயமுண்டு. இவ்விடத்தில் तत् என்பது சரீரியையன்றோ சொல்லுகின்றது? அது எப்படி சரீரவாசியாகும்? சரீரிவாசியான சப்தம் சரீரபர்யந்தம் குறிக்கும் என்னும் ந்யாயமும் உண்டோ?' என்று ஒரு கேள்வி பிறக்கும். இதற்கு ஸமாதாநமாவது : சரீரவாசியான சப்தம் சரீரிபர்யந்தம் குறிக்கும் என்னும் ந்யாயமானது, 'சரீரம்' அப்ருதக் ஸித்த விசேஷணமாகவும் 'சரீரி' விசேஷ்யமாகவும் இருப்பதாலன்றோ? அப்ருதக் ஸித்த விசேஷணவாசியான சப்தம் விசேஷ்ய பர்யந்தம் போகுமானால், அப்ருதக் ஸித்த விசேஷ்யவாசியான சப்தம் விசேஷணத்தையும் ஏன் குறிக்கக்கூடாது? இவ்விடத்தில் ஜீவன் விசேஷணம், பரமாத்மா விசேஷ்யம். இவை இரண்டும் அப்ருதக் ஸித்தங்கள் ; அதாவது: ஒன்றைவிட்டு மற்றொன்று வர்த்தியாது. அந்தக் காரணத்தைக் கொண்டு ஜீவவாசியான சப்தம் பரமாத்ம பர்யந்தம் போகுமானால், அந்தக் காரணத்தைக் கொண்டே பரமாத்ம வாசியான சப்தமும் ஜீவனையும் சொல்லுகின்றது என்று சொல்வது ந்யாயத்திற்கு ஒத்ததுதானே. ஆகையால், 'तत्' என்னும் பரமாத்ம

अरण्यो र्निहितो जातवेदा गर्भ इव सुभृतो गर्भिणीभिः ।
दिवे दिवे ईड्यो जागृवद्भिर्हविष्मद्भिर्मनुष्येभिरग्निः ॥ एतद्वै तत् ॥ ८ ॥

வாசியான ஶப்தம் அதை ஆத்மாவாக உடைய [அதாவது: அதை அப்ருதக் ஸித்த விஶேஷ்யமாக உடைய] ஜீவாத்ம பர்யந்தம் செல்லு கின்றது என்று விவரிக்கக்கூடும். இம்மாதிரியே கீழே முதல் அத்யா யம் இரண்டாவது வல்லி 17-வது மந்த்ரத்தில் "**ब्रह्मजज्ञं देवमीड्यं**" என் னும் இடத்தில் '**देवम्**' என்னும் பதத்திற்கு 'தேவனை ஆத்மாவாக உடைய ஜீவனை' என்று அர்த்தம் சொல்லப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ பகவத் கீதையிலும் "**क्षेत्रज्ञं चाऽपि मां विद्धि**" என்னும் பகவத் வாக் யத்தில் ஸ்ரீ க்ருஷ்ணனைச் சொல்லும் '**माम्**' [என்னை] என்னும் ஶப்தம் '**मदात्मकं**' [என்னை ஆத்மாவாக உடையவன்] என்னும் அர்த்தத்தில் ப்ர யோகம் செய்யப்பட்டிருப்பதாகப் பகவத் பாஷ்யகாரருடைய பாஷ்யம்.

देवतामयी - 'தேவ' என்னும் ஶப்தத்திற்கு 'இந்த்ரியங்கள்' என்னும் பொருள் உண்டு.

---

8. இவ்வாறு இந்த ப்ரபஞ்சத்தில் தென்படும் சேதநாசேதந வஸ்துக்களுள் ப்ரதாநமான சிலவற்றை உதாஹரித்து இவையெல்லாம் ப்ரஹ்மாத்மகமென்று சொல்லிவிட்டு, அதனுல் த்ருப்தி அடையாமல், மறுபடியும், இந்த லோகத்தில் ப்ரஜைகளெல்லாம் ஜீவித்திருப்பதற்கு அத்யவஶ்யங்களாயும் எல்லாருக்கும் பரமோபகாரத்தைச் செய்யுமவை யாயும் எல்லாராலும் பூஜிக்கப்படுமவையாயும் இருக்கும் அக்நி ஸூர்யன் முதலியவைகளும் ப்ரஹ்மத்தையே அந்தராத்மாவாக உடைத்தாயிருக்கின்றனவென்று வற்புறுத்துகிருர். இந்த மந்த்ரத்தில் அக்நியைப்பற்றியும் அடுத்துவரும் மந்த்ரத்தில் ஸூர்யனைப்பற்றியும் ப்ரஸ்தாவிக்கிருர்.

[ப - ரை.] **दिवे दिवे** - ஒவ்வொரு நாளும், **जागृवद्भिः** - விழித் துக் கொண்டிருக்கும் [அதாவது: மிக்க ஸாவதாநமாக இருக்கும் ஸ்வ பாவமுள்ள], **हविष्मद्भिः** - ஹவிஸ்ஸை யுடைய [அதாவது: நெய் முத லிய ஹவிஸ்ஸை ஹோமம் செய்வதில் ப்ரவ்ருத்தர்களான], **मनुष्येभिः** : மநுஷ்யர்களால் [அதாவது: ருத்விக் முதலானவர்களால்], **ईड्यः** - ஸ்துதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும், **अग्निः** - உயர்ந்த ஸ்திதிக்கு நயிப் பிக்கும் ஶீலமுள்ள, [**यः** - எந்த], **जातवेदाः** - அக்நி தேவதையானது, **गर्भिणीभिः** - கர்ப்ப ஸ்த்ரீகளால், **सुभृतः** - ஜாக்ரதையுடன் வளர்க்கப்பட்டு வரும், **गर्भ इव** - கர்ப்பத்திலிருக்கும் ஶிஶுவைப்போல, **अरण्योः** - அரணிக்கட்டைகளில், **निहितः** - வைக்கப்பட்டிருக்கிறதோ, **एतद्वै** - இந்த அக்நி ஸ்வரூபமானது, [illegible] சொல்லப்பட்டுள்ள] ப்ரஹ்மத் தையே ஆத்மாக உடை[illegible]

ஸ்ரீ:

சந்தா செலுத்தினவர்களின் பெயர்

1—9—'43 to 30—9—'43

[மற்றவர்களும் க்ருபை செய்து சீக்ரத்தில் சந்தாவைச் செலுத்த வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.]

For 1943.

			Rs	
1.	Sri T. R. Rajagopala Iyengar, Com. Tax Officer, Salem	...	3	0
2.	,, K. Ramanujachariar, Anatur Post, Panrutti	...	3	0
3.	,, V. Chakravarthiachariar, Srirangam	...	3	0
4.	,, T. L. N. Gopalaswami Iyengar, T. Nagar	...	3	0
5.	,, K. R. Ramaswami Iyengar, Triplicane	...	3	0
6.	,, G. Jaghannadhaswami, M.A., L.T., Masulipatam	...	3	0
7.	,, K. R. Ramanuja Iyengar, Mylapore	...	3	0
8.	,, S. Krishnamachariar, Saidapet	...	3	0
9.	,, R. Srinivasa Iyengar, Tirupatur, Ramnad Dt.	...	6	0
10.	,, Dr. P. Krishnaswami, Tyagarayanagar	...	6	0
11.	,, R. Ramanuja Iyengar, Madura	...	6	0
12.	,, M. S. Srinivasachariar, Mohanur	...	1	8
13.	,, T. Lakshminarayana Iyengar, Salem	...	3	0
14.	,, K. R. Krishnaswami Iyengar, Bellary	...	3	0
15.	,, Justice Sir S. Varadachariar	...	3	0
16.	,, K. Srinivasaraghava Iyengar, Bhavanagiri	...	3	0
17.	,, P. S. Veeraraghavachariar, Devanarvilagam	...	3	0
18.	,, R. Lakshmanan, Madura	...	3	0

Corrections—in August 1943.

In No. 4 of the last month's list of subscribers, instead of Alavandar Iyengar, please read Sri S. Alwar Iyengar, Rtd. Head-clerk, Dt. Registrar's Office, Kariamanickkaperumal Koil Sannidhi Street, Tinnevelly Town ... 3 0

[இந்த ஸஞ்சிகையுடன் இருபத்திரண்டு ஸஞ்சிகைகள் வெளியாகி யிருக்கின்றன. 1942-வது வர்ஷத்திய சந்தாவைச் செலுத்தாதவர்களுக்கு ஸஞ்சிகை அனுப்பப்பட மாட்டாது.]

Regd. No. M. 4437

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க் கண்ட புத்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

	சந்தாதாரர்கள் ரூ. அ. பை	மற்றவர்கள் ரூ. அ. பை
1. அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	5—0—0	6—0—0
2. ஷை (பைண்டில்லாதது) ...	4—0—0	5—0—0
3. உக்திநிஷ்டாபரணம் ந்யாஸநிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0—6—0	0—8—0
4. உக்திநிஷ்டாபரணோத்யோதம் („)	0—4—0	0—6—0
5. வீக்ஷாரண்யக்ஷேத்ர மாஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் ... (க்ரந்த லிபி)	0-12—0	1—0—0
6. ஸ்ரீ அஹோபில மாஹாத்ம்யம் („)	0—4—0	0—6—0
7. ஷை (தெலுங்கு லிபி)	0—6—0	0—8—0
8. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—3—0	0—4—6
9. ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—2—6	0—3—0

வேறு இடங்களில் அச்சிடப்பெற்றவை

1. மீமாம்ஸா பாதுகை ... ... (பரித்ராணத்துடன் க்ரந்த லிபி)	0—8—0	0-10—0
2. ஸமுத்ரயாநதோஷ நிர்ணயம்; விதவா விவாஹ கண்டநம் (நாகர லிபி) ...	0—4—0	0—6—0
3. தத்வத்ரய நிரூபணம் (க்ரந்த லிபி) ...	0—3—0	0—4—0

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள் கீழுள்ள விலாஸத்திற்கு எழுதவும் :—

மானேஜர், **ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,**

23—4—'43.] நெ. 5, ராமஸ்வாமி தெரு, தி. நகர், சென்னை.

N.B. ஷை விலைகள் ஸெப்டம்பர்மீ 30உ பர்யந்தமே குறைவாக ஏற்பட்டிருக்கின்றன.

Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5 Ramaswami Street, Tyagarayanagar, Madras.